விலை ரூபா 20.00


மீளாய்வு மனு வாபஸ்

பக்கம் 8

அல் ஜவாஹிரி பாகிஸ்தானில்

பக்கம் 9

இரகசிய உடன் படிக்கை

பக்கம் 17

சென்னைக்கு வாய்ப்பு எப்படி

பக்கம் 23



பக்கங்கள் : 26

www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 166

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 28 வியாழக்கிழமை (10/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதானால் வடக்கில் படையினரை விலக்குங்கள்

### அரசிடம் கோருகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு; மீளக்குடியமர்வை வலியுறுத்தி சபையில் பிரேரணை

கொழும்பு, மே 10

''அரசியல் தீர்வை எட்டும் பொருட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் அரசுடன் பேசுவதாக இருந்தால், வடக்கில் இராணுவத்தினரை அகற்றி அவர்கள் பலவந்தமாகக் கைப்பற்றியுள்ள தமிழ் மக்களின் நிலங்களை மீட்டு அங்கு எமது மக்கள் உடனடியாக மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.

அவ்வாறில்லாத ஒரு சூழ்நிலையில் நாம் அரசுடன் பேசினால் அடிமைப்பட்ட - அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில் பேசுவதாக நாம் உணருகிறோம். எமது இந்த ஜனநாயகக் கோரிக்கையையும் ஜெனிவா தீர்மானத்தையும் ஏற்று எமது மக்கள் சொந்த மண்ணில் மீளக்குடியேற அனுமதியுங்கள்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா நேற்று நாடாளு 04

# யாழ். அரச அதிபர் திடீர் இடமாற்றம்

### வவுனியாவுக்கு சிங்கள ஜீ.ஏ.

யாழ்ப்பாணம், மே 10

யாழ்மாவட்ட அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பதவி உயர்வுடன் ஜனாதிபதி செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு செயலாளர் பதவி ஒன்று வழங்கப்படலாம் என்று தெரியவருகிறது. இவரது இடத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் எஸ். அருமைநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை, வவுனியாவுக்கு புதிய அரச அதிபராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இந்த இடமாற்றங்களை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கியுள்ளது.

2010 ஜூலை மாதமே இமெல்டா சுகுமார் யாழ்.அரச அதிபராக பதவியேற்றிருந்தார். இரண்டு வருட சேவையை பூர்த்தி செய்வதற்கு முன்னர் அவருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

''எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் எனது புதிய பொறுப்பை ஏற்குமாறு நான் அறிவுறுத்தப்பட்டுள்ளேன். அதற்கான ஏற்பாடுகளில் நான் ஈடுபட்டுள்ளேன்'' - என்று உதயனிடம் தெரிவித்தார் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

வவுனியா அரச அதிபராகக் கடமையாற்றிய பி.எஸ்.எம்.சாள்ஸ் மட்டக்களப்புக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ள 04

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் படுகாயம்

கிளிநொச்சி, மே 10

விசுவமடு குமாரசாமிபுரம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்த இளைஞரொருவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சூட்டுச் சம்பவம் கடந்த 4ஆம் திகதி மாலை 6.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விசுவமடு குமாரசாமிபுரத்தைச் சேர்ந்த எஸ்.கிருஷ்ணகுமார் (வயது 17) என்பவரும் வேறொருவரும் கால்நடையொன்றைத் தேடிச் சென்றவேளை சிறிய பற்றைக் காடொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

எனினும் இளைஞர் மீது யார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்பது இதுவரை தெரியவரவில்லை.

இந்த நிலையில் வயிற்றுப் 04

## சூடுபிடிக்கிறது கிழக்குத் தேர்தல்

### முதல்வர் பதவிக்கு பலர் இரகசியப் பேச்சு

மட்டக்களப்பு, மே 10

கிழக்கு மாகாணசபையை ஜூன் மாதமளவில் கலைப்பது உறுதியாகிவிட்ட நிலையில் கிழக்குத் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்குத் தேர்தலில் குதிப்பதாலும், மு.கா. அரசுடன் இணைந்து போட்டியிடவிருப்பதாலும் கிழக்குத் தேர்தல்களம் போர்க்களமாகவே காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களைச் சந்தித்து சபை ஜூன் மாதம் கலைக்கப்படும் எனஉறுதியாக அறிவித்த 04

## சென்னையில் இலங்கைத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

சென்னை, மே 10

இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களை இடிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழக இந்துமக்கள் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

இது குறித்து தமிழக இந்துமக் 04

### இலங்கை உள்ளிட்ட நாடுகளின்

## 200 போர்க் குற்றவாளிகள் லண்டனில் அடைக்கலம்

லண்டன்,மே 10

பிரிட்டனில் தளர்வாக உள்ள சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 200 இற்கும் அதிகமான போர்க்குற்றவாளிகள் அங்கு புகலிடம் தேடியுள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் தி சன் நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள் போன்ற மோசமான கொடூரங்களை இழைத்துள்ள போதும் அவர்களை அவரவர் சொந்த நாட்டுக்கு அனுப்ப முடியாதுள்ளது. ஐரோப்பாவின் மனிதஉரிமைச் சட்டங்களே அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறு லண்டனில் புகலிடம் தேடியுள்ள போர்க் குற்றவாளிகளில் இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈராக், ருவாண்டா, சியாராலியோன், சிம்பாப்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் முக்கியமானவர்களாவர்.

கடந்த 18 மாதங்களில் இவ்வாறான 207 04

# விலைவாசி அதிகரிப்பு வெற்றியைப் பாதிக்காது

### நம்புகிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே 10

''அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைப் பற்றி எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. தேர்தலில் வெற்றி பெறுவது எப்படி என்று எனக்குத் தெரியும்.''

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இடம்பெற்ற கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

பொருள்களின் விலை உயர்வு 04

## ஹிலாரிக்கு இலங்கை இரகசிய அறிக்கை

### குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு,மே 10

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனுக்கு அரசு அனுப்பிவைக்க உள்ள இரகசிய அறிக்கையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென ஐக்கிய 04

## மஹர சிறையில் கைதி மரணம்

மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார். உடவளவ பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதான மல்வத்தகே சுனில் என்ற கைதியே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார். திடீர் சுகவீனம் காரணமாக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி கைதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். கொள்ளைச் சம்பவமொன்றில் குற்றவாளியாகக் கருதப்பட்ட நிலையிலேயே மேற்படி நபர் சிறைத் தண்டனை அனுபவித்து வந்துள்ளார். இவரது மரணம் தொடர்பான மரண விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பிரேத பரிசோதனையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## சனல் -4 க்கு இரு விருதுகள்

இலங்கையின் கொலைக்களம் என்னும் ஆவணப்படத்தை ஒளிபரப்புச் செய்தமைக்காக சனல் -4 தொலைக்காட்சி இரு சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளது. ஓர் உலக ஊடக விருது' விழாவில் ஆண்டுக்கான சிறந்த தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் சிறந்த ஆவணப்படம் ஆகிய விருதுகள் சனல் - 4 தொலைக்காட்சிக்கு வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென பிரிட்டனின் வெளிநாட்டு அலுவலகம் வலியுறுத்தக் காரணமாக இருந்ததை கருத்திற்கொண்டே இந்த இரு விருதுகளும் சனல் - 4க்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜோர்தானுக்கு பணிப்பெண்களை அனுப்புவது நிறுத்தப்படுமா?

ஜோர்தானுக்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்புவதை நிறுத்துவது குறித்து அந்த நாட்டு அதிகாரிகளுடன் அடுத்த வாரம் நடைபெறவுள்ள கூட்டத்தின் பின்னர் தீர்மானிக்கப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் டிலான் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ஜோர்தானில் பாதுகாப்பு இல்லமொன்றில் தங்கியுள்ள 200 இலங்கையர்களின் பாதுகாப்புக் குறித்து ஜோர்தான் அதிகாரிகளுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தும் என அமைச்சர் டிலான் பெரேரா கூறினார்.

## கற்களால் தாக்கப்பட்ட மாணவன் சாவு

எல்ல - கித்தலவத்த பிரதேச பாடசாலை வளாகத்தினுள் கற்களால் தாக்கப்பட்டு காயமடைந்த 6 வயதான சிவகுமார் மனோஜ் என்ற மாணவன் உயிரிழந்துள்ளார். கடந்த 4ஆம் திகதி பெண்ணொருவரினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் கற்பிரயோகத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவன் நேற்று உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வன்னியில் இறுதிப்போர் நடைபெற்ற பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்ணிவெடி அகற்றும் பணியில் இராணுவக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஈடுபட்டுவருகிறது. நவீன இயந்திரங்களின் உதவியுடன் இந்தப் பணிகள் நடைபெறுகின்றன. கண்ணிவெடி அகற்றும் இயந்திரம் ஒன்றை 'றிமோட் கொன்ரோல்' மூலம் இயக்குகிறார் படைச்சிப்பாய் ஒருவர்.

# இந்தியாவும் அமெரிக்காவும் விரித்த வலையில் இலங்கை

## குணதாச அமரசேகர குற்றச்சாட்டு

கொழும்பு,மே 10

இந்தியாவும் அமெரிக்காவும் விரித்த வலையில் சிக்கிக் கொண்டுள்ள இலங்கை அரசு, சீனாவுடனான நட்புறவிலிருந்து விலகி அமெரிக்காவுடன் நெருங்கிய நட்புறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான இராஜதந்திரக் காய் நகர்த்தல்களை முன்னெடுப்பதாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்ததாவது:-

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ர்ன் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள சூழ்நிலையில், இலங்கையிலிருந்தும் தூதுக்குழுவொன்று இந்தியாவுக்கு பயணத்தை மேற்கொள்கிறது.

இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சீன நட்புறவு கொள்கையிலிருந்து முழுமையாகப் பிரித்தெடுக்கும் படலம் முற்றுப்பெறவுள்ளது.

ஏற்கனவே சீனாவுடனான நட்புறவிலிருந்து அரசு மெதுமெதுவாக விலகி வருகிறது. இதன் பின்னர் நிச்சயமாக அமெரிக்காவின் இராணுவ முகாம் இலங்கையில் ஸ்தாபிக்கப்படும். பின்னர் சரத் பொன்சேகா விடுதலைக்கான காய்நகர்த்தல்களை அமெரிக்கா மேற்கொள்வதோடு அதற்கான பாரிய அழுத்தத்தை ஜனாதிபதியின் மீது பிரயோகிக்கப்படும்.

சிங்கள, பௌத்தர் என்ற முத்திரையின் கீழ் சரத் பொன்சேகாவை விடுவித்து அதன் பின்னர் பொன்சேகாவை ஆட்சிக்குக் கொண்டு வந்து வடக்கு - கிழக்கில் தமிழ்மக்களை ஒழிக்கும் செயற்பாடுகளை நிறைவேற்றி அதனை இனச் சங்காரம் எனக் காரணம் காட்டி இலங்கையை அமெரிக்கா இரண்டாகப் பிரிக்கும்.

அந்தச் சதித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களை இந்தியாவுடன் மேற்கொள்ளவே ஹிலாரி கிளின்ரன் புதுடில்லி வந்துள்ளார்-என்றார். (த)

# ஐரோப்பிய நாடுகளில் பணியாற்றும் இராஜதந்திரிகளிடையே பனிப்போர்

## இலங்கைக்குப் பெரும் சிக்கல்

பரிஸ்,மே 10

ஐரோப்பாவில் பணியாற்றும் இலங்கையின் துறைசார் இராஜதந்திரிகளுக்கும், அரசியல் ரீதியாக நியமனம் பெற்ற இராஜதந்திரிகளுக்கும் இடையில் நிலவும் பனிப்போரை, தாமரா குணநாயகத்தின் கடிதம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தான்ஜெனிவாவில்இருந்து இடமாற்றம் செய்யப்படுவதை நிராகரிப்பதற்கான காரணங்களை விவரித்து, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் தாமரா குணநாயகம் எழுதிய கடிதம் ஊடகங்களில் வெளியானது.

இது வெளியே கசிந்தமையானது ஐரோப்பாவில் பணியாற்றும், இலங்கையின் துறைசார் இராஜதந்திரிகளுக்கும் அரசியல் ரீதியாக நியமனம் பெற்ற இராஜதந்திரிகளுக்கும் இடையிலான போரை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

ஜெனிவாவில் பணியாற்றும் தாமரா குணநாயகம் மற்றும் பேர்ளின், லண்டன், பரிஸ், ஸ்ரொக்ஹோம், றோம் ஆகிய இடங்களில் இலங்கைத் தூதுவர்களாக உள்ள அனைவருமே அரசியல் ரீதியாக நியமனம் பெற்றவர்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் லண்டனில் பணியாற்றும்கிறிஸ் நொனிஸ் இலங்கைக்காகத் திறம்படப் பணியாற்றுவதாகவும், சிறந்த கல்வியாளராக இருந்த போதும் பரிஸில் உள்ள தயான் ஜயதிலக இலங்கைக்காக உண்மையுடன் பணியாற்றவில்லை இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இதற்கிடையே ஜெனிவாவில் ஐ.நாவுக்கான புதிய தூதுவராக - துறைசார் இராஜதந்திரியான ரவிநாத் ஆரியசிங்க நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து இலங்கையின் உயர்மட்ட அதிகாரிகள் பலரும் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

ஐ.நா மனிதஉரிமைகள் சபை அமர்வுகளை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்கு அவருக்கு போதிய கால அவகாசம் கிடைத்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (த)

# இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர் வரமுடியாது

## ராஜித சேனாரட்ன கூறுகிறார்

கொழும்பு,மே 10

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட அனுமதியளிக்கப் போவதில்லை என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு இந்திய அரசு கோரியது. இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வரும் மீனவர் தொடர்பான பிரச்சினைகளுக்குப் பேச்சுமூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும்.



இந்தியச் சிறைகளில் 36 இலங்கை மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அதேவேளை, எட்டு இந்திய மீனவர்கள் இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றன - என்றார். (த)

# கோப் குழு கண்டறிந்த விடயங்களின் விசாரணைகளுக்கு முட்டுக்கட்டை

## விஜேதாஸ ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு,மே 10

பொதுநிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழுவினால் (கோப்) வெளிக்கொணரப்பட்ட, பல பொது நிறுவனங்களின் நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பான விசாரணைகளை இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

'குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் மேலதிக விசாரணைகளுக்கு நாம் சிபாரிசு செய்திருந்தோம். எமது கோரிக்கைக்கிணங்க மேற்படி ஆணைக்குழு இரு வாரங்களுக்கு ஒரு தடவை தமது விசாரணை முன்னேற்றம் குறித்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என அப்போதைய சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார உத்தரவிட்டிருந்தார். ஆனால், அந்த விசாரணைகளை ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது' என விஜேதாஸ ராஜபக்ஷ கூறினார்.

விசாரணைகளுக்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரியொருவர் எந்த காரணமும் இல்லாமல் அம்பாறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் விசாரணைகள் இடைநிறுத்தப்படுவதற்கு இது காரணமாக அமைந்ததாகவும் அவர் கூறினார்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் இடமாற்றம் செய்யப்பட்டமை விசாரணைகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாக விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கோப் குழு கண்டறிந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை அவர் வலியுறுத்தினார். தனது தலைமையிலான கோப் குழு கண்டறிந்த விடயங்கள் மூலம் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக பகுதியிலுள்ள 1,100 ஏக்கர் காணி ஆகியவற்றை அரசு மீளப் பெற முடிந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (த)

# ஓட்டோ சாரதிகள் எதிர்ப்பு

கொழும்பு,மே 10

ஓட்டோக்களின் பயணிகள் ஆசனத்தில் மூன்று பயணிகளை விட அதிகமானவர்கள் பயணிக்க முடியாது என்ற சட்டத்துக்கு, ஓட்டோச் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்தச் சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருந்த போதும், பொலிஸார் நேற்று முதல் இதனைக் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

எனினும் இதனால் ஓட்டோ உரிமையாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக, ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருத் தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிராகத்ய் தாம் தொழிற்சங்க நடவடிக் கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# இராஜதந்திரிகள் மாற்றம் பதற்றத்தை உருவாக்கும்

## இந்திய ஊடகம் கருத்து

புதுடில்லி,மே 10

ஜெனிவாவுக்கான புதிய தூதுவராக ரவிநாத ஆரியசிங்க நியமிக்கப்பட்டுள்ளமை புலம்பெயர் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான புதிய பதற்றத்தைத் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழரான தாமரா குணநாயகம் தன்னை ஜெனிவாவில் இருந்து இடமாற்றம் செய்வது தவறாக அர்த்தம் கொள்ளப்படும் என்று கூறியிருந்தார்.

**தமிழரான தாமரா குணநாயகம் தன்னை ஜெனிவாவில் இருந்து இடமாற்றம் செய்வது தவறாக அர்த்தம் கொள்ளப்படும் என்று கூறியிருந்தார்.**

ஆனாலும் இலங்கை வெளிவிவகார அமைச்சு அவரைக் கியூபாவுக்கு இடமாற்றம் செய்துவிட்டு, மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றும் ரவிநாத் ஆரியசிங்கவை ஜெனிவாவுக்கான தூதுவராக நியமித்துள்ளது.

இந்த விவகாரங்களுடன் நெருக்கமான தொடர்புடைய இலங்கை அரசஅதிகாரி ஒருவர் இது குறித்துக் கூறுகையில்,

ஜெனிவாவில் குழுவாகச் செயற்படும் ஒருவர் தான் இலங்கைக்குத் தேவை.

பொதுப்பணியாளராக இருந்து கொண்டு உங்களின் பதவிக்காக ஊடகப் பரப்புரை செய்யக் கூடாது. இராஜதந்திரிகள் நியமித்த இடத்தில் பணியாற்ற வேண்டும். அரசு எதைச் சொல்கிறதோ அதைத் தான் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நகர்வு புலம்பெயர் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் புதிய பதற்றத்தைத் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்திய ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# சர்ச்சையில் சிக்கியுள்ள பீரிஸின் கடிதம்

கொழும்பு,மே 10

இந்திய மாநில முதல்வர்களுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் கடிதம் எழுதவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க இலங்கை அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விபரித்து, இந்தியாவின் அனைத்து மாநில முதல்வர்களுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடிதம் எழுதியுள்ளதாகக் கொழும்பில் இருந்து வெளியாகும் 'தி ஐலன்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசை மேற்கோள்காட்டியே இந்தத் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இதனை நிராகரித்துள்ளது.

எனினும், தி ஐலன்ட் நாளிதழின் செய்தி ஆசிரியரான சாமிந்ர பெர்னான்டோ, இந்திய மாநில முதல்வர்களுக்குத் தாம் கடிதம் எழுதியுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் த[illegible] கூறியது உண்மை தான் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்திய மாநிலங்களின் முதல்வர்களுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் கடிதம் எழுதியது குறித்துத் தமக்கு ஏதும் தெரியாது என்று இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோர் விசாரணையில் முறைப்பாட்டாளர் பங்கேற்க வேண்டும்

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

*2006 ஆம் ஆண்டு காணாமல் போனவர்கள் தொடர்பில், மனித உரிமை ஆணைக்குழுவால் கடிதம் அனுப்பப்பட்டவர்களில் அரைவாசிக்குக் குறைந்த எண்ணிக்கையானோரே விசாரணைகளுக்கு சமுகமளித்துள்ளனர். கடிதம் கிடைத்தவர்கள் மற்றும் 2006 ஆம் ஆண்டு காணாமல் போனமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தவர்களில் இதுவரை விசாரணைக்கு சமுகம் கொடுக்காதவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2006 ஆம் ஆண்டு காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு உரிய முன் நடவடிக்கையாக ஆவணப் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த மாதம் 26 ஆம் திகதியிலிருந்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்த முறைப்பாட்டாளர்களிடமிருந்து மேலதிக தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் சிலர் இடம்மாறியுள்ளதால், முறைப்பாட்டில் பதிவு செய்து கொடுத்த முகவரிக்க அனுப்பப்பட்ட கடிதங்கள் திரும்பி வந்துள்ளன. மேலும் கடிதங்கள் கிடைத்தவர்களில் பலர் எமக்கு வந்து பதிலளிக்கவில்லை.

இவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர், காணாமற்போனமை தொடர்பில் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதி ஒன்று, காணாமற்போனமையை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரின் கடிதம், காணாமற் போனமை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பான விவரம், காணாமற்போனவரின் அடையாள அட்டையின் பிரதி மற்றும் சமாதான நீதிவானின் சத்தியக் கடதாசி ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு தெரிவித்தார். (ம-5)

## திருடர் நடமாட்டம் அதிகரிப்பால் பீதி

யாழ்ப்பாணம், மே 10

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் இரவு வேளையில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதால் பிரதேச மக்கள் பீதியுடன் இரவுப்பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் இந்தப் பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் சிலர் ஓடித் திரிவதாகவும் இந்த மோட்டார் சைக்கிளின் இரைச்சலால் நாய்கள் அதிகளவில் குரைப்பதால் மக்கள் இரவுப்பொழுதை பீதியுடன் கழித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருடர்கள் இரவில் மின்சாரம் தடைப்படும் சமயம் பார்த்து வீடுகளுக்குள் நுழைந்து தமது திருட்டுக் கைங்கரியத்தை நிறைவேற்றிச் செல்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்களை முறியடிப்பதற்கு இரவில் விழிப்புக் குழுக்களை மீளவும் அமைத்து செயற்படுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

## உள்ளூர் தபால் பொதிகள் பஸ்களில் செல்கின்றன

யாழ்ப்பாணம், மே 10

யாழ். குடாநாட்டுக்கான உள்ளூர் தபால் பொதிகள் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி உட்பட குடாநாட்டின் சகல பிரதேசங்களுக்குமான தபால் பொதிகள் தற்போது போக்குவரத்துச் சபை பஸ்களில் அனுப்பி வைக்கப்படுகின்றன. மத்திய தபால் திணைக்களத்தின் நடவடிக்கைக்கு அமைய இந்தத் தபால் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் யாழ். குடாநாட்டில் சகல பிரதேசங்களுக்குமான தபால் பொதிகள் சேகரிக்கும் பணிகள் தபாலக வாகனம் மூலமே இடம்பெற்று வந்தன.

பின்னர் தீவுப்பகுதிக்கான தபாலக வாகனம் பழுதடைந்ததால் தீவுப் பகுதிக்கான தபால் சேவைகள் போக்குவரத்துச் சபை பஸ்களிலேயே கொண்டு செல்லப்பட்டது. தற்போது மத்திய தபால் திணைக்களத்தின் நடவடிக்கைக்கு அமைய குடாநாட்டுக்கான உள்ளூர் தபால் பொதிகள் மீண்டும் போக்குவரத்து பஸ்களிலேயே எடுத்துச் செல்லப்படுகின்றன. அதேவேளை, வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமான வெளியூர் தபால் சேவைகள் தபாலக வாகனம் மூலம் தினமும் சீராக இடம்பெற்று வருகின்றன என்று தபாலக அதிகாரி ஒருவர் கூறினார். (ம-17)

# அத்தாட்சிப்படுத்தப்படாத வாக்காளர் பட்டியல் பார்வைக்கு

அத்தாட்சிப்படுத்தப்படாத வாக்காளர் பெயர் பட்டியல் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் சகல கிராம சேவையாளர் காரியாலயங்கள் தோறும் காட்சிப்படுத்தப்படும்.

இவ்வாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்தார்.

இலங்கையில் முதல் முறையாக இவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்படாத வாக்காளர் பெயர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டு அதில் உள்ள தவறுகள் திருத்தப்படவுள்ளன. இது தொடர்பில் உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தாவது:-

2011 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து இடம்பெற்று வருகின்றன.

இதன் இறுதிக் கட்டப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. வாக்காளர் பெயர்ப் பட்டியல் எதிர்வரும்15 ஆம் திகதி சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் காட்சிக்கு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாக்காளர் பெயர்ப் பட்டியலைப் பார்வையிட்டு, பெயர் பட்டியலில் பெயர்கள் ஏதாவது பிழையாக குறிப்பிட்டிருந்தால், அல்லது 'பிசி' படிவம் கையளிக்கப்பட்டு பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இணைக்கப்படாமல் விடுபட்டிருப்பின் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளமுடியும்.

உறுதிப்படுத்தப்பட்ட இறுதியான, 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்பட்டியல் எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

## சொந்த இடத்துக்கு தபாலகம்

குரும்பசிட்டி உபதபாலகம் நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. கடந்த 22 வருடங்களின் பின்னர் மக்களின் அவசிய தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தபாலகம் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் மக்கள் பெரும் நன்மையடைவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம-17)

# சங்கானை ஆலயக் குருக்கள் கொலை; சந்தேகநபர்களுக்குப் பிணை நிராகரிப்பு

யாழ்ப்பாணம், மே 10

யாழ். குடாநாட்டில் ஆயுத முனையிலான கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், சங்கானை ஆலயக் குருக்களின் கொலையுடன் தொடர்புடைய முதலாவது மற்றும் இரண்டாவது சந்தேக நபர்கள் பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி, சங்கானை, இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி ஆலயப் பிரதம குரு நித்தியானந்த குருக்கள் (வயது-55) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பின்னர் உயிரிழந்தார்.

இந்தக் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய முதலாம் மற்றும் இரண்டாம் சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்கக் கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை, யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த விசாரணைகளின் போது இரு சந்தேகநபர்களும் குருக்களை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தமை மற்றும் கொள்ளையிட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள்.

இவர்களை பிணையில் செல்ல அனுமதி வழங்கினால் அவர்கள் மீண்டும் பெரிய குற்றச் செயல்களில் ஈடுபடுவார்கள். இதனால் யாழ். குடாநாட்டு மக்களுக்கு நீதிமன்றின் மீதுள்ள நம்பிக்கை அற்றுப் போய்விடும் என்று தனது சமர்ப்பணத்தை அரச சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்வைத்தார்.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி செல்வி சர்மினி விக்னேஸ்வரன், குறித்த சந்தேக நபர்கள் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி தொடக்கம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது சட்டமா அதிபர் தொடர்ந்து விளக்கமறியல் கோராத நிலையில் பிணையில் செல்ல அனுமதி வழங்குமாறு கோரியிருந்தார்.

யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வாதன் தனது கட்டளையில் யாழ். குடாநாட்டில் இரவுநேர ஆயுதமுனைகொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறான ஆயுத முனையில்கொலைச் செயலில் ஈடுபடுபவர்களுக்குப் பிணை வழங்கினால் அவர்கள் மீண்டும் பெரிய குற்றச் செயல்களில் ஈடுபடலாம். அரச சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணத்தின் அடிப்படையிலும் பிணை மனுக்கள் நிராகரிக்கப்படுவதாகத் தெரிவித்தார். (ம-5)

# ஆலயப் பிணக்குகளைத் தீர்க்க தீர்ப்பு மையம் உருவாக்கம்

யாழ்ப்பாணம், மே 10

ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்காக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் தீர்ப்பு மையம் ஒன்று உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட அனுபவமிக்கவர்கள் தீர்ப்பு மையத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகள் நீதிமன்றத்துக்குச் செல்லாமல் அதற்கு முன்னதாக சுமுகமான முறையில் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காகவே தீர்ப்பு மையம் செயற்பட்டு வருவதாக இந்து மாமன்றம் அறிவித்துள்ளது.

இந்து ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்து வைப்பதுக்கே இந்து மாமன்றத்தின் தீர்ப்பு மையம் செயற்பட்டு வருகிறது.

ஆலயங்களில் ஏற்படும் எந்த வகையான பிணக்குகளாயினும் உடனடியாக இந்து மாமன்றத்தை அணுகி தீர்ப்பு மையத்தின் ஊடாக தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கள்கிழமை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

# தென்மராட்சி பிரதேச ஊழியர் ஒரு மணிநேர பணி நிறுத்தம்

## எழுதுமட்டுவாழ் கிராம அலுவலர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து

தென்மராட்சி, மே 10

எழுதுமட்டுவாள் வடக்கு கிராம அலுவலர் கே. ஞானேஸ்வரன் அலுவலத்தில் வைத்து இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்களும் பிரதேச செயலக அனைத்து உத்தியோகத்தர்களும் நேற்று பிரதேச செயலகம் முன்பாக ஒரு மணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தியவர்களை இனம் கண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் [illegible] கருதி கிராம அலுவலர்கள்



தமது நாளாந்த கடமைகளை பிரதேச செயலகத்தில்வைத்து மேற்கொள்ள இருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் கிராம அலுவலர்கள் கிள்ளுக்கீரையா?, காடையர்கள் கையிலா சட்டம், கிராம அலுவலரைத் தாக்கிய குற்றவாளிகளை உடனடியாக இனங்கண்டு சட்டத்துக்கு முன் நிறுத்துக, கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்து கடமையாற்றுவதற்குப் பாதுகாப்பு வலியுறுத்தப்படல் வேண்டும், 07.05.2012 இல் கிராம அலுவலர் க.ஞானேஸ்வரன் அலுவலகத்தில் வைத்துக் காடையர்களால் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்னும் பதாகைகள் தாங்கிய வண்ணம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பணிப்புறக்கணிப்பின் பின்னர் யாழ்.அரச அதிபருக்கான மனு ஒன்று பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஈட்டு முதலீட்டு வங்கி வவுனியாவில் திறப்பு

வவுனியா, மே 10

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் வடமாகாண சேவை நிலையம் இன்று வவுனியா பிரதேச செயலக கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வங்கியின் தலைவர் ஜெகத் வெல்லவத்த தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நிர்மாணத்துறை, பொறியியல்துறை, வீடமைப்பு மற்றும் பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சர் விமல் வீரவன்ச பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சேவை நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஓமந்தை அரச வீட்டுத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட சுமார் 800 அரச ஊழியர்களில் முதல் கட்டமாக 200 பேருக்கு வீடமைப் புக் கடனாக இரண்டு லட் சம் ரூபா வீதம் வழங்கப்பட வுள்ளது.

தொடர்ந்து ஏனையவர்களுக்கான கடன்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (16-400)

# யாழ். அரச அதிபர் திடீர் இடமாற்றம்

தோடு இவரது இடத்துக்கு புதிதாக சிங்கள அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கில் போர் நிறைவுற்றதன் பின்னர் மன்னார் மாவட்டத்திற்கு சிங்கள அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து இப்போது வவுனியா மாவட்டத்திற்கும் சிங்கள அரச அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

காலி மாவட்டத்தின் அரச அதிபராக பணியாற்றி வரும் விஜயரத்தின சகலசூரிய என்பவரே வவுனியாவுக்கான புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

''இடமாற்றம் பற்றி நானும் தகவல்கள் அறிந்தேன். காலியில் இருந்து வவுனியாவுக்கு ஒருவர் நியமிக்கப்படுவதாகவும் கேள்விப்பட்டேன். எனினும் உறுதியான முடிவான தகவல்களை நாளையே (இன்று) அறிய முடியும்'' - என்று நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார் வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ்.

வடக்கில் உள்ள அரச தரப்பு அரசியல் வாதிகளுக்கும் மாகாண ஆளுநருக்கும் அரச அதிகாரிகளுடனான உறவுகளில் விரிசல் நிலை ஏற்பட்டு நெருக்கடிகளைச் சந்தித்திருக்கும் வேளையில் அரச அதிபர்களுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

'' வடக்கில் உள்ள அரச அதிகாரிகள் அரசியல் வாதிகள் போன்று செயற்படுகின்றனர். ஊடகங்களில் தம்மை முதன்மைப்படுத்துகின்றனர் என்று அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அமைச்சர் ஒருவர் அதிகாரிகளை கடுமையாகச் சாடியிருந்தார்.

இத்தகைய ஒரு பின்னணியில் அரச அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

(உ-10-5-400)

### விபத்தில் காயமடைந்த சிறுவன் பலி

கிளிநொச்சி, மே 10

மோட்டார் சைக்கிளும் - டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற சிறுவன் காயமடைந்து சிகிச்சை பயனின்றி நேற்று மரணமானான். மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பரந்தன் முதலாம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற பரந்தன் 2ஆம் கட்டையைச் சேர்ந்த மு.செந்தூரன் (வயது-13) என்ற சிறுவனே சம்பவத்தில் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி நேற்று மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த சா. செல்வக்குமார் (வயது-38) காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (10-14-16-426)

# 200 போர்க் குற்றவாளிகள் லண்டனில் அடைக்கலம்

சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பிரிட்டனின் எல்லை முகவரகம் பரிந்துரை செய்துள்ளது. ஆனால் அவர்களில் 12 பேர் மட்டுமே நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

போர்க்குற்றவாளிகள் பிரிட்டனைப் பாதுகாப்பான புகலிடமாகப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்க இன்னும் வலுவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று லண்டனைத் தளமாக கொண்ட அமைப்பு ஒன்று வலியுறுத்தியுள்ளதாகவும் தி சன் நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் போர்க் குற்றங்களை இழைத்ததாகக் குற்றம்சாட்டப்படும் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக கடந்த 18 மாதங்களாகப் பணியாற்றியிருந்தார்.

இவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக, இராஜதந்திர விலக்குரிமையை விலக்கிக் கொள்ளுமாறு பிரிட்டன் அரசிடம் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதும், அதனைப் பிரிட்டன்வெளிவிவகார அமைச்சு செவிசாய்க்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# ஹிலாரிக்கு இலங்கை இரகசிய அறிக்கை

தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவொன்று எதிர்வரும் 18ஆம் திகதி அமெரிக்காவுக்குப் பயணம் செய்ய உள்ளது. இந்தக் குழுவினர் அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு இரகசிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளனர். குறித்த அறிக்கை அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவை எதிர்க்குமாறு பிரசாரம் செய்த இந்த அரசு தற்போது அமெரிக்காவிடம் மண்டியிட்டு உதவி கோரி நிற்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த)

# விலைவாசி அதிகரிப்பு வெற்றியை பாதிக்காது

தேர்தலைப் பாதிக்கும் என்று நினைக்க வேண்டாம்.

நீங்கள் சரியாக நடந்து, மக்கள் மனங்களை வென்றிருந்தால் விலை உயர்வுக்கு அச்சம் கொள்ளவேண்டிய அவசியமே இல்லை.

பொருள்களுக்கான விலைகள் இன்னும் உயரும். தேர்தலுக்காக பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது.

கிழக்கு மாகாணசபையை ஜூனில் கலைத்தே தீருவேன்.

தேர்தல் திகதியை கிழக்கு முதலமைச்சருடன் பேச்சு நடத்தி தீர்மானிப்பேன்.

வடமத்திய மாகாண சபைத் தேர்தலை முற்கூட்டி நடத்தக் கூடாதென வடமத்திய மாகாண மேல் நீதிமன்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றேன். குறித்த இடைக்காலத் தடை உத்தரவை நீக்க முடியுமா என்பது குறித்து பரிசீலிக்கப்படும். அங்கும் தேர்தல் நடக்கும் என்றார் ஜனாதிபதி.

### சென்னையில் இலங்கைத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத்,

''இலங்கையில் உள்ள இந்து கோயில்களை இடிப்பதைக் கண்டித்து இந்து மக்கள் கட்சி சார்பில் சென்னையில் உள்ள இலங்கை இணைத் தூதரகம் முன்பு எதிர்வரும் 18ஆம் திகதி சிவனடியார்கள் முற்றுகை போராட்டம் நடத்த உள்ளனர்'' என்று கூறினார். (த)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் படுகாயம்

பகுதியில் படுகாயமடைந்த கிருஷ்ணகுமார் முதலில் தருமபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவரது நிலை ஆபத்தான கட்டத்தை நெருங்கியதால் விசேட ஹெலி மூலம் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் இரவு 7.40 மணியளவில் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடைந்தவர் காளிகோயில் வீதி, குமாரசாமிபுரத்தைச் சேர்ந்தவராவார். இவருடன் கூடச் சென்றவர் காயங்களேதுமின்றி உயிர் தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-6)

# பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதானால் வடக்கில் படையினரை விலக்குங்கள்

மன்றில் அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மக்களை மீளக்குடியமர்த்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரும் பிரேரணை ஒன்றை நேற்றுச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

போர் முடிவடைந்து 3 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. 25 வருடங்களுக்கும் மேலாக மக்கள் சொந்த இடங்களை இழந்து அகதிகளாக உள்ளனர். எதுவித தகுந்த காரணங்களும் இன்றி படையினர் மக்களின் நிலங்களைக் கைப்பற்றி வைத்துள்ளனர்.

வலி. வடக்கில் மட்டும் 34ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர். அவர்கள் இடம்பெயர்ந்து 25 வருடங்கள் ஆகின்றன. இன்னும் அந்த மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

பலாலி விமான நிலைய ஓடு பாதைக்குத் தேவையான நிலத்தைத் தவிர ஏனைய நிலத்தில் மட்டும் மீளக்குடியமர்த்த முடியும். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை.

முல்லைத்தீவில் 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் படையினர் பிடித்து வைத்துள்ளனர். 6ஆயிரம் மக்கள் கேம்பாவில் காட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும் பல இடங்களில் விவசாயம், மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டுவந்த 16ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை.

தெற்கு மீனவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வடக்கிற்குச் சென்று மீன் பிடித்தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனால், அங்குள்ள மக்கள் தடுக்கப்படுகின்றனர். இது எந்த வகையில் நியாயம்?

நிலச் சொந்தக்காரர்கள் எம்மிடம் காணி உறுதிப்பத்திரங்களைத் தந்து நீதிமன்றம் போகச் சொல்கின்றனர். நாம் அவ்வாறு செல்லவுள்ளோம். 5000 வருடகால புனித பூமியான திருக்கேதீஸ்வரத்தில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. பௌத்தர்கள் இல்லாத நிலையில் தமிழர்களின் காணிகளில் புத்தர் சிலைகள் அமைக்கப்படுகின்றன.

படையினர் விரும்பினால் அவர்களுக்குத் தேவையான நிலத்தைக் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு செய்து அரசு எவ்வாறு நல்லிணக்கத்தை உருவாக்கப் போகின்றது?

இந்து, இஸ்லாம் மதங்களைச் சிதைக்கும் வகையில் எமது மண்ணில் பலவந்தமாக புத்தர் சிலைகள் அமைக்கப்படுகின்றன. நாம் ஒரு தேசிய இனம். எம்மை நாமே ஆளும் உரிமை எமக்குண்டு.

மத ஆதிக்கம், படையினரின் அடக்குமுறை மூலம் நல்லிணக்கம் சாத்தியமாகுமா? அரசுடன் அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசுவதற்குத் தயார். ஆனால், அதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்கவில்லை.

அரசியல் தீர்வு தொடர்பாக நாம் அரசுடன் பேசுவதாக இருந்தால் வடக்கில் படையினரை அகற்றி எம்மை மீளக்குடியமர அரசு அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாத நிலையில் அரசுடன் பேசினால் அடிமையான நிலையில் அரசுடன் பேசுவதாக நாம் உணருகிறோம்.

எமது ஜனநாயகக் கோரிக்கையையும் ஜெனிவாத் தீர்மானத்தையும் ஏற்று எம்மை மீளக்குடியேற அரசு அனுமதிக்க வேண்டும். அங்கும் இங்குமாகச் சிதறி சுமார் 3 லட்சம் மக்கள் மீளக்குடியேற வேண்டியுள்ளனர்.

அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கு முன்னர் எமது மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். இல்லையேல், மக்களைத் திரட்டி தந்தை செல்வாவின் வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்துவோம் - என்றார்.

# சூடு பிடிக்கிறது கிழக்குத் தேர்தல்

மறுகணமே தத்தமது பிரதேசங்களுக்கு விரைந்த மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று முதல் தேர்தல் பணிகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

மக்கள் சந்திப்புகளில் ஈடுபடத் தொடங்கியிருக்கும் இவர்கள், மீண்டும் மாகாணசபைக்குத் தெரிவாவதற்குரிய காய்நகர்த்தல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர் என அறியமுடிகிறது.

கிழக்கு மாகாணசபையில் அரச தரப்பில் தற்போது அங்கம் வகிக்கும் சிலருக்கு மீண்டும் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்ற அறிவுறுத்தல் சம்பந்தப்பட்டோருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதால் அவ்வாறானவர்கள் மாற்றுக்கட்சிகளுடன் பேரப் பேச்சுகளில் இரகசியமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் நம்பகரமான வட்டாரங்கள் நேற்று உறுதிப்படுத்தின.

அதேவேளை, கிழக்கு மாகாண முதலமைச்சர் தமிழரா அல்லது முஸ்லிமா என்பது இதுவரை அரசால் உறுதிப்படுத்தப்படாத நிலையில் இப்பதவியில் நாட்டம் கொண்ட சிலர் அரச உயர் மட்டங்களைச் சந்தித்துப் பேசுவதிலும் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் தனது கட்சிக்கே முதலமைச்சர் பதவியைத் தரவேண்டும் என்று ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்துக் கேட்டுக்கொண்டுள்ளார். இதன்போது முதலமைச்சர் பதவி மீது நாட்டம் கொண்ட அக்கட்சியின் முன்னாள் அமைச்சரும் உடனிருந்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, கிழக்குத் தேர்தலில் பல இளம் புதிய முகங்களைக் களமிறக்க அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

முஸ்லிம் கட்சியொன்று தனது கட்சிச் செயலாளர் நாயகத்தைக் களமிறக்க ஆலோசித்து வரும் அதேநேரம், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஒருவரைத் தமது பக்கம் இழுத்து தேர்தல் களத்தில் நிறுத்தவும் இரகசியப் பேச்சுகளில் ஈடுபட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாற்றத்தை நாடும் விருப்பம் இனிமேலாவது வருமா...?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான உறவை மே தினத்துடன் நிறுத்திவிடாது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே பிரதான நோக்கம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜந்த கருணதிலக்க தெரிவித்திருக்கிறார்.

வரலாற்றில் முதல் தடவையாக ஐ.தே.கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட்டு மே தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தி தென்னிலங்கை அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தி இருந்தன. மே தினத்துடன் இது முடிந்த விவகாரம் என்றே பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால், இந்தக் கூட்டுத் தொடரும் என்கிறார் கஜந்த கருணதிலக்க. அடுத்த கட்டமாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாகவும் அவர் அறிவித்திருக்கிறார்.

தேசிய நல்லிணக்கம் என்பது ஜெனிவா மாநாட்டுத் தீர்மானத்தின் பின்பு அடிக்கடி உச்சரிக்கப்படும் ஒரு சொல். இதன் கனதியைப் புரிந்துகொள்ளாமல் பலரும் கருத்து வெளியிட்டு வருகிறார்கள். நாட்டில் தேசிய நல்லிணக்கம் ஏற்படுமானால், இன்று சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்நோக்கும் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியும்.

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில், கடந்த காலங்களில் ஐ.தே.க. தோல்வி அடைந்திருந்தது. சிங்களப் பேரினவாதத்தின் ஆதரவை வேண்டி நிற்கும் எந்த ஒரு கட்சியும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. சிறுபான்மை மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறமுடியாது.

தமிழ் - முஸ்லிம் மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் தெளிவான திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் கிடையாது. ஒஸ்லோப் பேச்சுகளில், இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறை குறித்துப் பேசுவதற்கு ஒப்புக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, பேச்சுவார்த்தை முறிவடைந்த பின்னர் சமஷ்டி ஆட்சி முறைக்கு தான் ஆதரவு இல்லை என்று அறிக்கை விடுத்ததை தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள்.

டி.எஸ். சேனநாயக்காவின் காலத்தில் திட்டமிட்டு கல்லோயாவில் ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம், இன்று வடக்கிலும் கிழக்கிலும் வேகமாக அரங்கேறி வருகிறது. வடக்கில் பலாலிப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அதி உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக சுமார் 30 ஆண்டுகளாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லமுடியாத நிலையில் இன்றும் ஏதிலிகளாக வாழ்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் இராணுவம் இன்றும் பெரும் எண்ணிக்கையில் நிலைகொண்டுள்ளது. மக்களின் நாளாந்த வாழ்க்கையில் பல வடிவங்களில், தான் நினைத்தவாறு தலையிட்டு, சிவில் நிர்வாகத்தையும் விட மேலோங்கி நிற்கிறது. முகாம்களில் இருந்தோர் மீளக்குடியேற்றம் என்ற பெயரில் தகரக் கொட்டில்களில் வாழும் தமிழ் மக்களின் நிலை மாற்றமின்றித் தொடர்கிறது.

இந்த நிலைமையைத் தானும் மாற்றி அமைக்கும் சக்தி ஐக்கிய தேசியக் கட்சியிடம் உண்டா? நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அரசாங்கம் அழுங்குப்பிடியாகக் கவ்வி நிற்பதால், அரசியல் தீர்வு காணும் முயற்சிகளிலும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி கூறுவதுபோல் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு என்று ஐ.தே.கவும் பக்கப்பாட்டுப் பாடுகிறது. இத்தனைக்கும், மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் தேவை என்று ஐ.தே.க. பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி பதவி வகித்த காலத்திலேயே அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் அதற்கு விருப்பமிருந்தால், பதின்மூன்றாவது திருத்தத்தை அப்போதே நடைமுறைப்படுத்தியிருக்க இயலும். ஆனால் அதனை விரும்பவில்லை.

இப்போதும் கூட, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்கும் நோக்குடன் ஐ.தே.க. செயற்படுவதற்குச் சமாந்தரமாக சிங்கள மக்களின் வாக்கு வங்கியைத் தக்கவைப்பதற்கு முன்னுரிமை கொடுத்ததே அன்றி தமிழர்களின் உரிமைகள் குறித்து அக்கறை கொள்ளவில்லை.

போர் முடிவடைந்து விட்டதால் தேசிய நல்லிணக்கத்தை இலகுவாக அடைந்துவிட முடியும் என்று கருத முடியாது. தேசிய நல்லிணக்கத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்கான பிரதான பொறுப்பு, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும்தான் உண்டு. ஐ.தே.கவும் கூட்டமைப்பும் இணைந்து செயற்படுவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தற்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலமே தேசிய நல்லிணக்கத்துக்கான அடித்தளத்தை இட முடியும்.

சிங்களப் பேரினவாதிகளின் வாக்கு வங்கியை மனதில் கொண்டு, கடந்த காலங்களில் தெற்கின் இரு பிரதான கட்சிகளும், அரசியல் தீர்வு காணும் முயற்சிகளை எதிர்த்து வந்துள்ளன. 30 வருட காலப் போரின் பின்னராவது இரண்டு கட்சிகளும் பாடம் படித்ததாகத் தெரியவில்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவுடன் வெற்றிபெறுவதை நோக்கமாகக் கொண்டு ஐ.தே.க. செயற்படுவது மிக வெளிப்படையாகத் தெரிகிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்கு ஐ.தே.க. இப்பொழுதே திட்டமிட்டுச் செயற்படுகிறது. மே தினத்துடன் இது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடரவேண்டுமானால் சிங்களப் பேரினவாதிகளின் பிடியில், செல்வாக்கில் இருந்து ஐ.தே.க. விடுபடவேண்டும். இலங்கையின் அரசியல் வரலாற்றை நோக்கும் போது அது சாத்தியமா என்ற கேள்வியே மேலோங்கி உயர்கிறது.

ரணில் பிரதமராக இருந்த வேளை, சமஷ்டி ஆட்சி முறைக்கு இணங்கிவிட்டு, அதற்குப் பொறிக்கிடங்கு தோண்டியது போன்ற 'சதி' வேலைகளில் ஈடுபட்டதைத் தமிழ் மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள். அத்தகைய நோக்கங்களைக் கைகழுவி, உண்மையாகவே தமிழர்களின் அரசியல் உரிமைகளை நாடி உழைக்கும் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும். இது விடயத்தில் அவரும் அவரது கட்சியும் இதய சுத்தியுடன், திறந்த மனதுடன் செயற்படும் துணிவும் அப்பழுக்கற்ற நோக்கமும் நல்லெண்ணமும் மிகமிக இன்றியமையாதவை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு அத்தகைய புத்தெண்ணம் பிறக்குமா, என்ன?

# யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் அமைக்க ரூ. 894 மில்லியன்

## இந்திய அரசு 500 மில்லியன் வழங்க முன்வந்தது

யாழ்ப்பாணம், மே 10

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தை கிளிநொச்சிக்கு கொண்டு செல்வதற்கும், அத்தோடு அங்கு புதிதாக பொறியியல் பீடமொன்றை ஆரம்பிப்பதற்கும் உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.



கிளிநொச்சி அறிவியல் நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தப் பல்கலைக்கழகத்துக்காக இந்திய அரசு 500 மில்லியன் ரூபா நிதியை வழங்க முன்வந்துள்ளது.

அத்துடன் இலங்கை அரசு இதற்கு 394 மில்லியன் ரூபாவைச் செலவு செய்யவுள்ளது என்று தெரியவந்துள்ளது. 400 ஏக்கர் நிலப் பரப்பில் இந்தப் பீடம் அமைக்கப் படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி அறிவியல் நகருக்கு வியாழக்கிழமை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா, இலங்கைக்கான இந்தியத் தூதர் அஷோக் கே காந்தா ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா கருத்துத் தெரிவிக்கையில்:-

தற்போது அறிவியல் நகரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களை பார்வையிட்டோம். எம்மோடு இந்தியத் தூதுவரும் கலந்து கொண்டார். இங்கு நிர்மாணிக்கப்படவுள்ள விவசாய பீடம் மற்றும் பொறியியல் பீடங்களுக்காக இலங்கை அரசு ரூபா 394 மில்லியனை செலவு செய்யவுள்ளது.

அதே போன்று இந்திய அரசு 500 மில்லியன் ரூபாவை வழங்க இணங்கியுள்ளது. அத்தோடு 215 மில்லியன் ரூபாவை இந்தப் பீடங்களில் சேவைகள் மற்றும் அடிப்படை வசதிகளுக்கு வழங்குவதற்கும் இந்தியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

இதற்கமைய இந்தக் கட்டடங்களை புனர்நிர்மாணம் செய்து இந்த வருட இறுதிக்குள் விவசாய பீடத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அடுத்த வருட இறுதிக்குள் பொறியியல் பீடங்களின் இரண்டு திணைக்களங்களையும் ஆரம்பிக்கவுள்ளோம். இதன் மூலம் இந்தப் பிரதேசம் பெரிய அளவில் அபிவிருத்தியடையும் என்பதில் இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடம் இல்லை.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு நீண்ட கால அபிவிருத்திப் பயணம் உள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தை வெகு விரைவில் அபிவிருத்தி செய்வோம்.- என்றார். (ம)

# இறக்குமதியாகும் பொருள்கள் அனைத்துமே விலை ஏறும்

## ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சீற்றம்

கொழும்பு, மே 10

அரசின் தற்போதைய போக்கை அவதானிக்கும் போது இன்னும் இரண்டு வாரங்களில் இறக்குமதியாகும் சகல பொருள்களதும் விலைகள் அதிகரிக்கும் நிலையே தோன்றுகிறது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பால்மா உட்பட அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என்று வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உறுதியளித்தார்.

ஆனால் வாழ்க்கைச் செலவு ஒவ்வொரு நாளும் அதிகரித்துச் செல்கின்றது. இந்தப் போக்கின் காரணமாக இன்னும் இரண்டு வாரங்களில் இறக்குமதியாகும் சகல பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும்.

அரசு பொருள்களின் விலைகளை குறைக்க முடியாதுவிடினும் குறைந்த பட்சம் விலைகளை அதிகரிக்காமலாவது இருக்க வேண்டும். இந்தப் பிரச்சினை மக்களை நேரடியாகப் பாதிக்கின்றது. இந்த அரசு மக்களால் தெரிவு செய்யப்பட்டது. எனவே விலை அதிகரிப்பு எம்மோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இது ஒவ்வொருவரும் சம்பந்தப்படும் பிரச்சினையாகும். எனவே சிவில் சமூகமும் பொதுஅமைப்புக்களும் மக்கள் தொடர்பான இந்த விடயத்தில் தலையிட வேண்டும்.- என்றார்.

இந்த விடயம் தொடர்பாக மேல்மாகாண சபை ஐ.தே.க. உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்ததாவது:-

கடன் அட்டைகள் மீதான வட்டியை 24 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக அரசு அதிகரித்துள்ளது. இது பொருளாதாரத்தை பாதிக்கும். இதன் தொடர்ச்சியாக வீட்டுக் கடன்கள் மற்றும் செயற்றிட்டக் கடன்களுக்கான வட்டியும் அதிகரிக்கும். இந்த வட்டி வீதத்தில் வங்கி முறைமை முறிவடையும் சாத்தியம் உண்டு.- என்று தெரிவித்தார். (ம)

# இலவச சுகாதார சேவைகளுக்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை

## சுகாதார அமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு, மே 10

இலவச சுகாதார சேவையை முன்கொண்டு நடத்துவதற்கு இலங்கை மருந்துப் பொருள் வர்த்தக துறைசார் சம்மேளனத்தின் ஒத்துழைப்பு அவசியமானதைப் போன்று சம்மேளனத்துக்கு அமைச்சின் ஒத்துழைப்பும் அவசியம் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அனைவரதும் ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் எம்மால் இலவச சுகாதார சேவையை உரிய முறையில் நடத்திச் செல்ல முடியாது. அமைச்சின் செயலாளர் முதல் சுகாதாரத் துறையில் [illegible] அனைவரதும் ஒத்துழைப்பு தேவை. அதுதவிர மருத்துவ வர்த்தகர்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது. எனது பதவி ஏற்பின் பின்னர் மருந்துகளின் தரம் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் தோன்றின. சில அதிகாரிகள் மருந்து விநியோகத்தர்கள் மீது குற்றஞ்சாட்டினர். அது தொடர்பாக உரிய முறையில் விசாரணை நடத்தியபோது அதில் எவ்வித உண்மையும் இருக்கவில்லை.

அதன் பின்னர் இதுவரையில் மருந்து விநியோகத்தர்கள் மீது இத்தகைய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவில்லை. கடந்த காலங்களில் மருந்துகளின் தரம் தொடர்பாகப் பிரச்சினைகள் முன்வைக்கப்படவில்லை.

இலவச சுகாதார சேவையின் மேம்பாட்டுக்காக அரசு மேற்கத்தைய மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 20 முதல் 22 பில்லியன் ரூபாவை செலவிடுகின்றது. தனியார் துறையினரும் 7 முதல் 8 பில்லியன் ரூபாவை செலவிட்டு வருகின்றனர்.- என்றார். (ம)

# 7 லட்சத்து 97 ஆயிரத்து 620 நிலக்கண்ணி வடக்கில் அகற்றல்

கொழும்பு, மே10

வடமாகாணத்தில் இதுவரையில் 7லட்சத்து 97 ஆயிரத்து 620 நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக கண்ணி வெடி அகற்றும் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் ஆயிரத்து 936 சதுர கிலோமீற்றர் பரப்பில் நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இன்னும் 124 சதுர கிலோமீற்றர் பரப்பில் மாத்திரமே நிலக்கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஆயிரத்து 500 பணியாளர்கள் கண்ணிவெடி அகலும் பணியில் ஈடுபட்டுள்ளனர். 29 ஆய்வு கருவிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறிகண்டி ஆலயத்தை தவிர்க்கும் பஸ்கள்

யாழ்-கண்டி வீதி மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் அரச தனியார் போக்குவரத்து வாகனங்கள் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் தரித்துச் செல்வதைத் தவிர்த்து வருவதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள், தனியார் போக்குவரத்து பஸ்கள் என்பன முறிகண்டியில் தரிக்காது அதற்கு அப்பால் உள்ள உணவுக்கடைகளில் நிறுத்தப்படுகின்றன.

பன்னெடுங்காலமாக இந்தப் பகுதியில் பயணிப்போர் முறிகண்டிப் பிள்ளையாரைத் தரிசித்துச் செல்லும் வழமை மாற்றமடைந்து வருவது மனவேதனை தருவதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது பயணப் பாதுகாப்புக்காகவும் தாம் மேற்கொண்டு செல்லும் காரியங்களில் சித்தி பெறவும் பிள்ளையாரின் அருள் பெற்றுச் செல்வதை மனநிறைவாக எண்ணும் மக்களுக்கு இது ஏமாற்றமாக உள்ளது. அத்துடன் மத ஸ்தலங்களை மதிக்காது, வணங்காது செல்வது விபத்துக்கள் அதிகரிப்பதற்கு வழி சமைப்பதாகப் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எனவே ஆன்மிக ஆசாரங்களையொட்டியும், உணவு, இயற்கைக் கடன்களை நிறைவேற்றுதலின் பொருட்டும் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் சாரதிகள் தமது வாகனங்களைத் தரித்துச் செல்லவேண்டும் எனப் பயணிகள் தெரிவிக்கின்றனர். (க-135)

# வேலைத் திட்டம் தொடர்பாக அபிவிருத்திச் சங்கம் அதிருப்தி

முல்லைத்தீவு, மே 10

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை முறிப்பு தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெறுகின்ற வேலைத் திட்டம் தொடர்பாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

14 லட்சம் ரூபா நிதியுதவியுடன் இந்த வேலைத் திட்டம் இடம்பெறுவதாகவும், ஆனால் பாடசாலை அதிபருக்கோ அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கோ தெரியப்படுத்தப்படாது பாடசாலையின் விடுமுறை காலத்தில் வலயக் கல்விப் பணிமனையின் அனுமதியுடன் வேலைகளுக்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட தனியாரால் வேலைகள் ஆரம்பித்து மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> 14 லட்சம் ரூபா நிதியுதவியுடன் இந்த வேலைத் திட்டம் இடம்பெறுவதாகவும், ஆனால் பாடசாலை அதிபருக்கோ அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கோ தெரியப்படுத்தப்படாது பாடசாலையின் விடுமுறை காலத்தில் வலயக் கல்விப் பணிமனையின் அனுமதியுடன் வேலைகளுக்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட தனியாரால் வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மலசலகூடம், நீர்த்தாங்கி என்பனவற்றின் அமைவிடம் கூட அவர்களாலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தச் செயல் பெற்றோர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

இந்த வேலைகள் தொடர்பாகப் பாடசாலை அதிபருக்குத் தம்மால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதாகவும், இந்த வேலைகளுக்கான மதிப்பீடு 10 லட்சத்துக்கு மேல் காணப்பட்டதால் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரிடம் இதனை ஒப்படைக்காது, பகிரங்க ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு அதில் தேறிய ஒப்பந்ததாரரிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (க)

### மக்களும் இராணுவத்தினரும் சிரமதானப் பணிகளில்

துணுக்காய், மே 10

தேறாம்கண்டல் கிராமத்தில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் நடவடிக்கையில் கிராமத்து மக்களுடன் இணைந்து இராணுவத்தினரும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

கடந்த 5 ஆம் திகதி காலை 9 மணியளவில் கிராம அலுவலர் சி.சண்முகநாதன் தலைமையில் இந்தச் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

தேறாங்கண்டல் கிராமம் மிகவும் பின் தங்கிய ஒரு கிராமமாகும். இங்கு 250 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தச் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

மக்கள் வாழ்விடங்கள், பொது நோக்கு மண்டபம், சுகாதார நிலையம் அமைந்துள்ள பகுதிகள், முன்பள்ளி ஆகிய இடங்களில் சிரமதானத்தின் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (க-415)

## பாலியாற்றுக்குக் குறுக்கே பாலம் அமைக்கப்படுமா?

### கேள்வி எழுப்புகின்றனர் கிராம மக்கள்

துணுக்காய், மே 10


பாண்டியன்குளத்தையும், மல்லாவியையும் இணைக்கும் பாலியாற்றுக்குக் குறுக்கே பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெறுமாவென மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பாண்டியன் குளத்திலிருந்து கரும்புள்ளியான் ஊடாக மல்லாவி நகருக்கு இலகுவாக வரக்கூடிய வகையில் பாலியாறு ஆற்றுப் பகுதியில் பாலம் அமைக்கவென 8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இந்தப் பாலம் அமைக்கப்பட்டால் பாண்டியன் குளம் பிரதேசத்தில் இருந்து மக்களின் விவசாய உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கென எட்டுக் கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மல்லாவி நகருக்கு பாலியாற்றுப் பகுதியால் மிகவும் இலகுவாக வரமுடியும். இந்த வீதியை நவ்வி, மூன்றுமுறிப்பு, பனங்காமம், சிறாட்டிகுளம், நட்டாங்கண்டல் கிராமத்து மக்களும் அவசர தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும். எதிர்வரும் மாதங்களில் பருவ மழை ஆரம்பித்தால் பாலியாற்றில் நீர் நிறைந்து விடும்.

மக்கள் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்வர். இதனைக் கருத்தில் கொண்டே ஆற்றுக்குக் குறுக்கே பாலத்தை அமைக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் கரும்புள்ளியான் பாலியாறு வீதிகளையும் புனரமைக்க முன்வர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-415)



செட்டிகுளத்தில் மழை மற்றும் சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவருக்கு, இலங்கை இந்துப் பேரவையின் வவுனியா இணைப்பாளர் நடராசா சுதாகரன் உதவிப் பொதி ஒன்றை வழங்குகின்றார். (400)

### பாலிநகர் ம.வியில் பௌர்ணமி விழா

துணுக்காய், மே 10

துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாலிநகர் மகா வித்தியாலயத்தில் பௌர்ணமிவிழா இடம்பெற்றுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை இந்த பௌர்ணமி விழா இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தேசியக் கொடியை வடமாகாணக் கல்வி பண்பாட்டு அமைச்சின் செயலர் சத்தியசீலன் ஏற்றி வைத்தார்.

கல்வி வலயத்துக்கான கொடியை துணுக்காய் கல்விப் பணிப்பாளர் ஏற்றி வைக்க மங்கல விளக்கைத் துணுக்காய் உதவி அரச அதிபர் எஸ். குணபாலன், பாலிநகர் 10 ஆவது படையணியின் இராணுவ அதிகாரி மேஜர் விஜேநாயக்க, மன்னார் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இந்த விழாவின் சிறப்பு நிகழ்வாக மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறுறன. ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-415)

## ஆயிரத்து 875 மி.லீற்றருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் ஆயிரத்து 875 மீல்லி லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட நபருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் ஆயிரத்து 875 மில்லி லீற்றர் கசிப்பைத் தனது உடைமையில் வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 30 ஆம் திகதி கைது செய்திருந்தனர். குறித்த நபரையும் அவரது உடைமையில் வைத்திருந்த கசிப்பையும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ்.விஜயராணி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது. (க-6)

## மீளவும் ஆரம்பிக்கப்பட்டது சிறுவர் பராமரிப்பு நிலையம்

முள்ளியவளை, மே 10

முள்ளியவளை புதரிகுடாவில் அமைந்துள்ள பாரதி சிறுவர் பராமரிப்பு நிலையம் மீளவும் ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் பராமரிப்பு நிலையமானது முன்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. இதில் மிகவும் வறிய குடும்பங்களில் உள்ள பெண் பிள்ளைகள், பெற்றோரின் சம்மதத்துடன் தங்க வைக்கப்பட்டனர்.

இவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் அருகிலுள்ள பாடசாலைகளான வித்தியானந்தாக் கல்லூரி, கலைமகள் வித்தியாலயம் ஆகியவற்றில் இடம்பெற்றன. இப்பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லமானது அரசினால் பதிவு செய்யப்பட்ட இல்லமாகும்.

தற்போது 'நெடோ' நிறுவனமானது இதனைப் புலம் பெயர் தமிழர்களின் நிதியுதவியுடன் மீளவும் புத்துயிர் பெறச் செய்துள்ளது. இந்த இல்லத்தைத் திறப்பதற்காக இங்கு அமைந்திருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது.

இங்கு தங்கிக் கற்கவுள்ள மாணவிகள் தற்காலிகமாக முத்தையன் கட்டு 'புனித பூமி' இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இதில் 30 மாணவிகள் தங்கியிருந்தனர்.

எனினும் சில சட்ட ரீதியான நெருக்கடிகளை இந்த நிறுவனம் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்த இல்லத்தை மீளப் பதிவு செய்ய வேண்டும் என சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மற்றும் மாணவிகள் தங்கவுள்ள அறைகள் தொடர்பிலும் இடம்தொடர்பாகவும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் கவனம் செலுத்துவதாகவும் கூறப்படுகின்றது. (க-433)

# தரம் 5 மாணவி பாடசாலை செல்லாதது குறித்து விசாரணை

### கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 10

ஆசிரியை ஒருவரின் கடுமையான வார்த்தைப் பிரயோகத்தால் மனமுடைந்த மாணவி ஒருவரின் நிலை தொடர்பாகத் தாம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகக் கிளிநொச்சிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலையில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவரை அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் தேவையற்ற வகையில் ஏசியதால் அந்த மாணவி பாடசாலை செல்ல மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகச் சிறுவர் நன்னடத்தை அதிகாரி, அரச அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகியோருக்கும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

நிறுவனமொன்று தாய் அல்லது தந்தையை இழந்த சிறுவர்களுக்கு உதவிகளை வழங்கியது தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாகவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மனமுடைந்த அந்த மாணவி பாடசாலைக்குச் செல்ல மறுத்துள்ளார் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருவதாகக் கிளிநொச்சி சிறுவர் நன்னடத்தை அதிகாரியும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் உடன் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த சம்பவம் தொடர்பாகத் தாம் உரிய விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

மேலும் குறித்த ஆசிரியையிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும், பாடசாலை அதிபருடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். அத்துடன் குறித்த மாணவியையும், அவரது தாயாரையும் சந்திப்பதற்குத் தாம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாகவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்புக் கடியில் இருந்து பாதுகாக்க அல்லைப்பிட்டிக்கு மூலிகைச் செடி

யாழ்ப்பாணம், மே 10

நுளம்புக் கடியிலிருந்து மக்களைப் பாதுகாக்கச் சித்த ஆயுள்வேத செடி ஒன்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தாவரங்கள் முதற் கட்டமாக அல்லைப்பிட்டியைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த வகைத் தாவரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோரைத் தொடர்பு கொள்ளுமாறு பிராந்திய மலேரியாகத் தடை இயக்க வைத்திய அதிகாரி இ.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நுளம்புக் கடிக்கு இலக்காவதால் பலவிதமான நோய்களுக்கும் ஆளாக வேண்டிய நிலை ஏற்படும். நுளம்பு பெருகும் இடங்கள் அழிக்கப்பட வேண்டிய நிலையில் நுளம்பு கடிப்பதிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல் வேண்டும். தாவர லெமென் கிறாஸ் என்று அழைக்கப்படும் எலுமிச்சம்புல் தாவர இலைகளை எமது உடலில் உரசிவிட்டால் அந்த இலையின் மணம் காரணமாக நுளம்பு கிட்ட அணுகாது.

பிற்பகல் வேளைகளிலேயே இந்த நுளம்புகள் அதிகமாக உலாவுகின்றன. சித்த ஆயுள்வேத மருத்துவ வகையைச் சேர்ந்த இந்தத் தாவரம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுப் பயன்பாட்டுக்கு உகந்ததென கண்டறியப்பட்டது.

அல்லைப்பிட்டியில் நுளம்பு அதிகம் காணப்படுவதால் அங்குள்ள சுமார் 50 குடும்பங்களுக்கு இந்த வகைத் தாவரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. தேவையானவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு இந்தத் தாவரங்களைப் பெறமுடியும்.

யாழ்ப்பாணத்தில் சுதேச மருத்துவ மூலிகைத் தோட்டத்தில் இந்த வகைத் தாவரம் உள்ளது. விரும்பியவர்கள் அங்கு சென்றும் பெற்றுக் கொள்ள முடியும்.

தாவர நுளம்புக் குடம்பிகள் கிணற்று நீரிலும் பெருகத் தொடங்கியுள்ளன. இந்தக் குடம்பிகளை உண்ணும் ஒருவகை மீன் இனங்கள் கிணற்றில் விடப்படும்போது அந்தக் குடம்பிகளை மீன்கள் உண்பதனால் நுளம்பு பெருக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது.

கடந்த சில வருடங்களாக இந்த மீன் பயன்பாட்டில் உள்ளபோதும் பலரிடம் அது சென்றடையவில்லை.

அதனை தேவையானவர்கள் கிணறுகளில் விட்டு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

இதற்காகத் தற்போது கப்பி, திலாப்பியா போன்ற மீனினங்கள் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.- என்று கூறினார். (ம-4)




செவிப்புலனற்றோர்களுக்கும் வைத்தியத்துறையினருக்குமான தொடர்பாடலை இலகுவாக்கும் வழிகாட்டி நூல் நேற்று முன்தினம் யாழ். தாதியர் கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்டது. வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட இந்த நூலை சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா வெளியிட்டு வைக்க முதற்பிரதியை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா பெற்றுக் கொள்கிறார். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினர் அமர்ந்துள்ளனர். (ம-4-13)

# தீர்மானம் நிறைவேறியும் நடவடிக்கை எதுவுமில்லை

வலி. வடக்கு, மே 10

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு முன்பாக வீதிக் கடவைக் குறியீடுகளை போடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் நடவடிக்கைகள் இடம் பெறவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி, பலாலி வீதி, ஆடியபாதம் வீதி ஆகிய பிரதான வீதிகளில் பாடசாலைகளுக்கு அருகாமையில் மாணவர்களின் போக்குவரத்து நன்மை கருதி வீதிக் கடவைக் குறியீடுகளை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைய அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில் குறிப்பிட்ட தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்ட வீதிகளில் குறியீடுகளை அமைக்க முன்வரவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-86)

# எரியூட்டப்படும் கழிவுகளால் அவஸ்தையில் நவாலி மக்கள்

நவாலி, மே 10

கல்லுண்டாயில் கொட்டப்படும் கழிவுகளைத் தீயிட்டு கொழுத்துவதால் அதிலிருந்து எழும் புகையால் இந்தப் பகுதி மக்கள் பெரும் அவஸ்தைகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

நவாலி மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பெரும் அவஸ்தைகளுக்கு ஆளாகி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளுக்குத் தினமும் உழவு இயந்திரங்கள்மூலம் எடுத்து வரப்படும் கொட்டப்படும் கழிவுகள் தீயிட்டு கொழுத்தப்படுகின்றன. இந்தக் கழிவுகளுக்குள் இறந்த விலங்குகள் மற்றும் வைத்தியசாலைக் கழிவுகளும் உள்ளன.

இவற்றுக்குத் தீ மூட்டி விடப்படுவதால் அவை எரிந்து புகைமண்டலமாகின்றது. தற்போது வீசும் கடும் காற்றால் இந்தப் புகை துர்நாற்றத்துடன் ஊர் மனைகளுக்குள் பரவுகின்றது.

இதனால் மக்கள் சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடியாத நிலைமை உள்ளதாகவும் இந்த அசுத்தமான காற்றை சுவாசிப்பதால் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படுவதுடன் கொடிய தொற்று நோய்களும் பரவும் நிலைமையும் ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனமெடுத்து ஆவன செய்ய வேண்டும் என்று பாதிக்கப்படும் மக்கள் கேட்கின்றனர். (ம-100)

# கூக்குரல் கேட்டு ஓடினான் திருடன்

நவாலி, மே 10

நவாலியில் நள்ளிரவு வேளை ஆசிரியை ஒருவரின் வீட்டு யன்னலைத் திறந்து உள்ளே நோட்டம் விட்ட திருடன் பெண்ணின் கூக்குரலைக் கேட்டு ஓடித் தப்பினான்.

நேற்று முன்தினம் நவாலி சின்னப்பா வீதியிலுள்ள ஆசிரியையின் வீட்டுக்குள் நள்ளிரவு 1.30 மணியளவில் புகுந்த திருடன் அந்த வீட்டிலுள்ள அறை ஒன்றின் யன்னல் கதவைத் திறந்து உள்ளே நோட்டம் விட்டுள்ளான்.

இந்த நிலையில் அந்த அறைக்குள் உறங்கிக் கொண்டிருந்த பெண் திடீரென விழித்துப் பார்த்தபோது யன்னலுக்குள் தெரிந்த உருவத்தைக் கண்டு கூக்குரலிட்டுள்ளார். இதன்போது திருடன் மதில் ஏறிப் பாய்ந்து ஓடித் தப்பினான் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அந்த வீட்டில் முதல் நாள் இரவும் கூட்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த சில கோழிகளும் திருட்டுப் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

# மலேரியா விழிப்புணர்வு நடைபவனியும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், மே 10

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு மலேரியா விழிப்புணர்வு நடைபவனியும் கண்காட்சியும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்டுக் கொண்டுள்ளது.

முதலில் மலேரியா விழிப்புணர்வு நடைபவனி நாளை காலை 9.30 மணிக்கு யாழ். வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஆரம்பமாகி யாழ். இந்துக் கல்லூரி முன்பாக நிறைவடையும்.

தொடர்ந்து யாழ். இந்துக் கல்லூரியில் முற்பகல் 10.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மலேரியா விழிப்புணர்வுக் கண்காட்சி இடம் பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக மலேரியாத் தடைப் பகுதிப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரிசிந்த பிரேமரட்ண, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.யூட், யாழ். மாநகர ஆணையாளர் சு.சரவணபவ, சாவோதயம் சமூக சுகாதாரப் பிரிவின் திட்ட இணைப்பாளர் சமன்களுபான ஆகியோரும் கலந்துகொள்வர்.

மலேரியாவை முற்றாக ஒழித்துக் கட்ட அனைவரையும் ஒன்று திரளமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர். (ம-4)

# நாகர்கோவிலில் 100 குடும்பங்கள் தற்காலிக கொட்டகைகளில்

## கூட்டுறவுக் கிளை திறக்கவும் நடவடிக்கை

வடமராட்சி, மே 10

மீள்குடியேற்றம் நடைபெற்றுவரும் நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் இதுவரை சுமார் நூறு குடும்பங்கள் தற்காலிக கொட்டகைகளை அமைத்து மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் மீள்குடியேறுவதற்கென இதுவரை 198 குடும்பங்கள் அந்தப் பகுதி கிராம சேவையாளரிடம் பதிவு செய்துள்ளன.

சுமார் 100 குடும்பங்கள் மீளக்குடியேறி அந்தப் பகுதியில் வசித்து வரும் நிலையில் எஞ்சிய குடும்பங்களும் தற்காலிக கொட்டில்களை அமைத்து குடியேற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

நாகர்கோவில் கிழக்கில் மக்களை மீளக்குடியமர்வதனால் அந்தப் பகுதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றைத் திறக்க மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்வந்துள்ளது.

இதற்கென அந்தப் பகுதியில் சேதமடைந்த கட்டடம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்தைத் தற்காலிகமாக திருத்தியமைத்து அதில் கூட்டுறவுச் சங்கக் கிளை திறக்கப்படவுள்ளது. (த-8)

# தனியார் கல்வி நிறுவன சூழலில் பெண் பிள்ளைகளுடன் சேஷ்டை

## அடையாளம் காட்டப்படுமிடத்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 10

தனியார் கல்வி நிலையங்கள் உள்ள சூழலில் நின்று பெண் பிள்ளைகளுடன் சேஷ்டை விடும் இளைஞர்களை அடையாளம் காட்டித் தரும் பட்சத்தில் அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பீர்களா என்று தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளுடனான சந்திப்பு ஒன்றை நேற்று முன்தினம் நடத்தினார்.

**தனியார் கல்வி நிலையங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்**

இதன்போதே இவ்வாறு கேட்கப்பட்டது.

இதற்கு முதல்வர் பதில் தெரிவிக்கையில்:-

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் கல்வி நிலையங்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைச் சீரமைக்கக் கூடியதாக கலாசார உத்தியோகத்தர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

அவர்கள் ஒவ்வொரு கல்வி நிறுவனங்களுக்கும் வருகைதந்து நிலைமைகளை அவதானித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

இதற்குத் தனியார் கல்வி நிலையங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.- என்று தெரிவித்தார். (ம-7)

# சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

நெடுந்தீவு மகேஸ் எழுதிய தாரணி ஓர் ஆச்சரியக்குறி சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆறுதல் நிர்வாகப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் கலந்துகொள்வார்.

நூலின் வெளியீட்டுரையை யாழ். கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலனும் நூலின் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் க.லலீசனும் நிகழ்த்துவர். (ம-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் பா.ஜ.க. மாநாடு இன்று



மதுரை, மே.10

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சியின் மாநில மாநாடு இன்று மதுரையில் ஆரம்பமாகின்றது.

பா.ஜ.கவின் தாமரை சங்கமம் மாநில மாநாடு கடந்த மாதம் 28, 29 ஆகிய திகதிகளில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் அப்போது மதுரையில் கனமழை பெய்து வந்ததால் இந்த மாநாடு எதிர்வரும் 10,11 ஆகிய திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதற்கிடையே கடந்த முதலாம் திகதி மதுரை அண்ணா நகரில் சைக்கிள் வெடிகுண்டு வெடித்தது. இது மாநாட்டை சீர் குலைக்கும் முயற்சியாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தநிலையில் மாநாடு இன்று ஆரம்பமாகின்றது. மதுரை ரிங்ரோட்டில் 67 ஏக்கரில் உள்ள பா.ஜ.க. முன்னாள் தலைவர் ஜனா. கிருஷ்ணமூர்த்தி திடலில் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த அரங்கத்திற்கு முன்னாள் பொருளாளர் சுகுமாறன் நம்பியார் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் 5 லட்சம் பேர் கலந்து கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டின் முதல் நாளான இன்று முன்னாள் துணை பிரதமரும், மூத்த தலைவருமான எல்.கே. அத்வானி உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர். நாளை வெள்ளிக்கிழமை கட்சியின் மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெறும். இதில் புதுக்கோட்டை இடைத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் குறித்த பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

இந்த மாநில மாநாட்டு பாதுகாப்புக்காக 150 பட்டாலியன் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். முதல் கட்டமாக வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 6 பட்டாலியன் பிரிவுப் பொலிஸார் மதுரை வந்துள்ளனர். இதே போன்று சிறப்பு ஆயுதப் படை பிரிவினரும் வெளி மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்படுள்ளனர். பட்டாலியன் பொலிஸார் நேற்று முன்தினம் தொடக்கம் மாநாட்டுப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## இரவில் பணிபுரியும் பெண்களுக்கு பாதுகாப்பான நகரம் மும்பை

மும்பை,மே10

இரவு நேரங்களில் பணியாற்றும் பெண்களுக்கு இந்தியாவில் ஏனைய நகரங்களை விட மும்பை பாதுகாப்பானது என்று சமூக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.


இந்தியாவில் அலைபேசி மையங்கள், ஐடி, விமானப் போக்குவரத்து, மருத்துவத்துறை, விடுதி மற்றும் ஆடை அலங்காரத் துறைகளில் அதிகமான பெண்கள் இரவு நேரங்களில் பணிபுரிகின்றனர்.

இவர்களின் பாதுகாப்புக் குறித்து சம்பந்தப்பட்ட பெண்கள் மட்டுமல்ல, அவர்களின் குடும்பத்தினரும் சமூக ஆர்வலர்களும் பெரிதும் கவலைப்படுகின்றனர்.

இது குறித்து அசோசம் என்ற சமூக மேம்பாட்டு அமைப்பு ஆய்வு நடத்தியதில் ஏனைய நகரங்களுடன் ஒப்பிடும் போது இரவில் பணிபுரியும் பெண்களுக்கு மும்பை நகரம் பாதுகாப்பானது என்று தெரிவித்துள்ளது. (வ)

## 2ஜி உரிமங்கள் ரத்து

# மீளாய்வு மனுவை வாபஸ் பெறுகிறது மத்திய அரசு



டில்லி, மே 10

2ஜி அலைக்கற்றை பெற்ற 122 உரிமங்களை ரத்துச் செய்து உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் வழங்கிய தீர்ப்பை மறுஆய்வு செய்யக்கோரி தாக்கல் செய்த மனுவைத் திரும்பப் பெற மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பான மனுவை உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு இன்று வியாழக்கிழமை தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு ஏப்ரல் மாதம் தாக்கல் செய்த மனுவில், தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 122 உரிமங்கள் ரத்து செய்யப்பட்டதை மத்திய அரசு எதிர்க்கவில்லை. ஆனால், தீர்ப்பில் மத்திய அரசை விமர்சித்தது, ஏலம் விடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பு, இயற்கை வளங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிட்ட கருத்து போன்றவை குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.


இதற்கிடையே, தீர்ப்புக் குறித்து தெளிவுரை கோரி இந்திய ஜனாதிபதி கையெழுத்திட்ட குறிப்பை மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த நிலையில், மத்திய அரசின் மேல்முறையீட்டு மனுவை கடந்த மாதம் 13 ஆம் திகதி விசாரித்த உச்ச நீதிமன்றம், அதுகுறித்து பதில் அளிக்கும்படி வழக்குத் தொடர்ந்த ஜனதா கட்சித் தல்லவர் சுப்பிரமணியன் சுவாமி, மக்கள் வழக்காடு மையம் சார்பில் முன்னிலையாகும் பிரசாந்த் பூஷண் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பியது. (வ)

## ரூபா நோட்டுக்களின் வடிவம் மாறுகிறது

டில்லி, மே.10

கள்ள நோட்டுக்களின் புழக்கத்தை தடுக்க 500 மற்றும் ஆயிரம் ரூபா நோட்டுக்களின் நிறம் மற்றும் வடிவத்தில் மாற்றங்களைக் கொண்டுவர மத்திய ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது.

டில்லி, மும்பை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு நகரங்களில் வங்கிகள், வணிக நிறுவனங்கள் மட்டுமின்றி பல்வேறு இடங்களிலும் கள்ள நோட்டுக்களின் புழக்கம் அதிகரித்திருப்பதாகவும், அவற்றைத் தடுப்பதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.



நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ரவிந்திரநாத் தாகூர் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்ட சமாஜ்வாடி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், சபாநாயகர் மீரா குமார் மற்றும் ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமி.

## ஹஜ் பயணிகளுக்கான மானியத்தை ரத்துச் செய்யவும்

### உச்சநீதிமன்றம் உத்தரவு

ஹஜ் பயணிகளுக்கு வழங்கப்படும் அரசமானியத்தை, 10 ஆண்டுகளுக்குள் முற்றிலும் ரத்துச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் உள்ள மக்கா, மதினாவுக்கு சென்று ஹஜ் கடமையாற்றுவது முஸ்லிம்களின் கடமைகளில் ஒன்றாக இருக்கிறது.

இந்த வருடம் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் ஹஜ் பயணம் மேற்கொள்ளப்படும். இந்த ஹஜ் பயணம் செல்பவர்களுக்காக மத்திய அரசு மானிய உதவி அளித்து வருகிறது.

இவ்வுதவி அரச நிறுவனமான ஹஜ் யாத்திரைக் குழு மூலம் செல்பவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. தனியார் சேவைகளில் செல்பவர்களுக்கு இந்த உதவி கிடைக்காது.

இந்தநிலையில், ஹஜ் பயணிகளுக்கு வழங்கப்படும் மானியத்தை ரத்து செய்யுமாறு பல இஸ்லாமிய அமைப்புகள் மத்திய அரசிடம் கோரிக்கை வைத்திருந்தன.

இதுதொடர்பான வழக்கை நேற்று முன்தினம் விசாரித்த உச்ச நீதிமன்றம், ஹஜ் பயணிகளுக்கு வழங்கப்படும் மானியத்தை படிப்படியாகக் குறைத்து, 10 ஆண்டுகளுக்குள் அதனை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், சிறுபான்மை இனத்தவர்களைக் கவருவதற்காக ஹஜ் பயணத்தை மத்திய அரசு அரசியலாக்கி விட்டது என்று கூறிய நீதிமன்றம், புனிதப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு அரசு மானியம் வழங்குவது சரியானதல்ல என்றும் கூறி தீர்ப்பளித்துள்ளது. (வ)

### முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையொட்டி

# தமிழகத்தில் ஈழத்தமிழர்களை கண்காணிக்கும் கியூ பிரிவு

சென்னை,மே10

முள்ளிவாய்க்கால் பேரழிவின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள் நெருங்கி வரும் நிலையில், தமிழ்நாட்டில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களை கியூ பிரிவுப் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இலங்கை இராணுவத்தின் போர், 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி முடிவுக்கு வந்தது.

பல்லாயிரக்கணக்கான தமிழர்களைக் காவு கொண்ட இந்தப் போர் முடிந்து 3 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இந்த நிலையில், முள்ளிவாய்க்கால் போர் நினைவு நாளில், தமிழ்நாட்டில் உள்ள முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் சர்ச்சைக்குரிய செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்க கியூபிரிவுப் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மதுரை, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள முகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் நடவடிக்கைகளை கியூ பிரிவுப் பொலிஸார் கண்காணித்து வருவதாக கியூ பிரிவு பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழர்கள் தவிர வெளி நபர்கள் யாராவது தங்கியுள்ளனரா, போர் நினைவு தினத்தையொட்டி சட்டத்துக்குப் புறம்பான வகையில் செயற்படுகின்றனரா என்று கண்காணித்து வருகிறோம்.

அதேபோல முகாம்களுக்கு வெளியே வீடுகளில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களையும் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வ)

# சொந்த செலவுக்கு மக்கள் பணத்தில் கைவைத்த மாயாவதி



லக்கோ, மே.10

தனது சொந்தவீட்டைப் புதுப்பிக்க ரூ.86 கோடி, மக்களின் பணத்தை செலவு செய்திருக்கிறார் முன்னாள் உத்தரப்பிரதேச மாநில முதல்வரும், பகுஜன் சமாஜ்வாதி கட்சியின் தலைவருமான மாயாவதி.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்ட கேள்வியின் மூலம் இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக அந்தக் கட்சியின் நிர்வாகி சிவபால் யாதவ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு வருடத்துக்கு முன்பே அவர் இந்தக் கேள்வியைக் கேட்டு விண்ணப்பித்தார். ஆனால் கடந்த சில நாள்களுக்கு முன்புதான் அரசிடமிருந்து அவருக்கு பதில் கிடைத்துள்ளது.

2007ஆம் ஆண்டில் மாயாவதி உத்தரப் பிரதேச மாநில முதல்வராகப் பதவியேற்றதும், அந்த மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் 5 ஏக்கர் பரப்பளவில் உள்ள அவரது வீட்டைப் புதுப்பிக்கும் பணி ஆரம்பமாகியது. அவரது பதவிக்காலம் முடியும் நேரத்தில் வீட்டைப் புதுப்பிக்கும் பணியும் முடிவடைந்தது தான் அவரை இந்த கேள்வி கேட்கத் தூண்டியது - என்றார் அவர். (வ)

# கூடங்குளத்தில் 144 தடை உத்தரவு நேற்று முதல் நடைமுறைக்கு

திருநெல்வேலி, மே 10

கூடங்குளம் அணு உலையைச் சுற்றிலும் 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு 144 தடை உத்தரவு நேற்று புதன் கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வருவதாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் இரா. செல்வராஜ் தெரிவித்தார்.

கூடங்குளம் அணு உலை அமைந்துள்ள பகுதியில் 144 தடை உத்தரவு 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்று ஏற்கெனவே நடைமுறையில் இருந்தது. இந்நிலையில், இந்த உத்தரவை 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு நீடித்து ஆட்சியாளர் உத்தரவிட் டுள்ளார்.

தற்போது தொடர் போராட்டம் நடைபெற்று வரும் இடிந்தகரை பகுதி இந்த 5 கிலோமீற்றர் தூரத் துக்குள் வருவது குறிப்பி டத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதி அல் ஜவாஹிரி பாகிஸ்தானிலேயே உள்ளார்


## ஹிலாரி தெரிவிப்பு

அல்குவைதா இயக்கத்தின் தற்போதைய தலைவர் அல் ஜவாஹிரி பாகிஸ்தானிலேயே உள்ளதாக அமெரிக்க இராஜங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தைத் தடுப்பதற்குப் பாகிஸ்தான் போதுமான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அல்குவைதா இயக்கத்தினை செயலிழக்கச் செய்ய வேண்டியுள்ள போதிலும் அந்த இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் தற்போதும் செயற்படுவதாக ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

இந்தியத் தொலைக் காட்சி நேர்காணல் ஒன்றில் தீவிரவாதத்திற்கு எதிரான போர் குறித்த கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே





அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஹலாரி கிளிண்டனின் இந்தக் கருத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் மேலும் விரிசலை ஏற்படுத்தலாம் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தப் பேட்டி ஒளிபரப்பான சிறிது நேரத்தில், பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹினா ரபானி

பாகிஸ்தானில் ஜவாஹிரி இல்லை. அப்படி எதுவும் அரசுக்குத் தகவல் இல்லை. ஜவாஹிரி பற்றி யாருக்காவது தகவல் தெரிந்தால், பாகிஸ்தான் அரசிடம் தெரிவிக்கலாம்.

கர், ஹிலாரிக்கு மறுப்புத் தெரிவித்தார். ஹினா கூறுகையில், பாகிஸ்தானில் ஜவாஹிரி இல்லை. அப்படி எதுவும் அரசுக்குத் தகவல் இல்லை. ஜவாஹிரி பற்றி யாருக்காவது தகவல் தெரிந்தால், பாகிஸ்தான் அரசிடம் தெரிவிக்கலாம் என்றார்.

## மனைவியோடு வலம் வந்த புடின்



மொஸ்கோ, மே 10

ரஷ்ய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்க மனைவியுடன் விளாடிமிர் புடின் வந்ததால் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். ரஷ்யாவில் 2 முறை ஜனாதிபதி பதவி வகித்தவர் புடின். இவருடைய மனைவி லுட்மிலா புடினா. கணவன் அதிபராக இருந்தாலும், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை. அதிபரின் மனைவியாக நாட்டின் முதல் பெண்மணியாக இருந்தாலும், புடினுடன் எந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்பதில்லை. ஜனாதிபதி தேர்தலின் போது கடந்த மார்ச் மாதம் புடினுடன் வாக்குச் சாவடிக்கு வந்தார். அதன்பிறகு பொது நிகழ்ச்சி எதிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. இந்த நிலையில், கிரம்ளின் மாளிகையில் நேற்று 3ஆவது முறையாக புடின் ஜனாதிபதி பொறுப்பேற்றார். அப்போது லுட்மிலா அருகில் இருந்தார். நிகழ்ச்சியின் போது மனைவியிடம் புடின் சில வார்த்தைகள் மட்டுமே பேசினார். முன்னதாக நடந்த பிரார்த்தனை நிகழ்ச்சியிலும் இருவரும் ஒன்றாகப் பங்கேற்றனர்.

இதுகுறித்து பின்னர் பேட்டி அளித்த புடின், லுட்மிலாவுக்கு பிரபல்யம் தேவையில்லை என்றார். கடந்த 2010ஆம் ஆண்டு புடினும், லுட்மிலாவும் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது தங்கள் விவரங்களை தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியின் போது கூறினர். அப்போது லுட்மிலா விரலில் திருமண மோதிரம் இல்லை என்பது தெரிய வந்தது. இதுகுறித்து கேள்வி கேட்ட போது, இருவருக்கும் திருமணமாகி விட்டது என்று கூறினர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



ரஷ்யாவின் மனித உரிமைச் செயற்பாட்டாளரான லிப் போனோமார்யோப் புடின் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறார்.

## தேர்தலில் வெற்றி பெறுவேன்–சாவேஸ்

ஹவானா, மே 10

புற்றுநோய் சிகிச்சைகளுக்காக நாட்டில் இருந்து தாம் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கருத்துக்களை வெனிசுவேலா ஜனாதிபதி ஹுயூகோ சாவேஸ் நிராகரித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் தலைவராக தாம் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் அரச தொலைகாட்சியில் ஆற்றிய உரையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அமெ. - சீனா சைபர் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த இணைவு

சர்வதேச ரீதியில் பெரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ள சைபர் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்காவும் சீனாவும் முன்வந்துள்ளன. இது குறித்து தாம் இணைந்து செயற்படவுள்ளதாக இரண்டு நாடுகளினதும் பாதுகாப்பு அமைச்சுக்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கப் பாதுகாப்பு செயலாளர் லியோன் பெனிட்டாவுக்கும், சீன பாதுகாப்பு அமைச்சர் லியான் கு ஆங்கிளிக்கும் இடையில் வொஷிங்டனில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் முக்கிய ஆவணங்கள் பல சைபர் தாக்குதல்களுக்கு இலக்கானமைக்கு சீனாவே காரணம் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

## கொள்ளையனின் விரலைக் கடித்த பெண்

டோக்கியோ, மே 10

சைக்கிளில் வந்து பையை கொள்ளையடித்துச் சென்ற கொள்ளையனின் விரலைக் கடித்து துண்டாக்கி, அவனை வெறும் கையோடு ஓடவிட்டுள்ளார் ஜப்பானிய பெண்.

ஜப்பானின் சப்போரோ நகரைச் சேர்ந்த 59 வயது பெண், கடைக்குச் சென்று விட்டு, தன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது, சைக்கிளில்வந்த ஒரு கொள்ளையன், இவரது பையைப் பறித்துச் சென்று விட்டான். உடனடியாகத் தன் வீட்டுக்குச் சென்று, மோட்டார் எடுத்து கொண்டு கொள்ளையனை துரத்திச் சென்று பிடித்து, அவனிடமிருந்து பையை மீட்க முயன்றார். ஆனால், கொள்ளையன், பையைக் கொடுக்காததால் ஆத்திரமுற்ற இந்தப் பெண், அவனது வலக்கையின் ஒரு விரலைக் கடித்துத் துப்பினார். வலி பொறுக்க முடியாத கொள்ளையன் பையை விட்டு விட்டு ஓடிவிட்டான். ஜப்பானின் ஒருசில பகுதிகளில் கொள்ளையர்களின் கை விரலைத் துண்டித்துத் தண்டனை கொடுப்பது ஒரு மரபாக இருந்தது. தற்போது இந்தப் பெண், அந்தத் தண்டனையைத் தற்செயலாக, கத்தியின்றி நிறைவேற்றியுள்ளார்.

## ஐ.நா. அணுசக்தி ஆய்வாளர் ஈரானில் சாவு

தெஹ்ரான், மே 10

ஈரானில் கடந்த செவ்வாய்கிழமை நடந்த கார் விபத்தில், ஐ.நா. அணுசக்தி ஆய்வாளர் சியோ ஆக்-சியோக் கொல்லப்பட்டதாக சர்வதேச அணுசக்தி முகவரமைப்பு தெரிவித்தது. அவருடன் சென்ற மற்றொருவர் காயமடைந்தார்.

ஈரானின் அணுசக்தி நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்காக அங்கு தங்கியிருக்கும் அணுசக்தி முகவரமைப்புக் குழுவில் சியோ இடம்பெற்றிருந்தார்.

தென் கொரியாவைச் சேர்ந்த சியோ, ஈரானின் மார்காஸி மாகாணத்தில் உள்ள கோண்டா கிராமத்தில் பணியில் ஈடுபட்டிருந்ததாக அணுசக்தி முகவரமைப்பு தெரிவித்துள்ளது. கோண்டா பகுதியில் கனநீர் ஆய்வு உலையை ஈரான் அமைத்து வருகிறது.

சியோவும் அவருடன் பணியாற்றும் மற்றொருவரும் சென்று கொண்டிருந்த கார், சாலையிலிருந்து விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக ஈரானின் ஐ.ஆர்.என். ஏ செய்தி நிறுவனம் தெரிவித்தது. [illegible] றொருவரைப் பற்றி அந்தச் செய்தி நிறுவனம் எதுவும் குறிப்பிடவில்லை.

## 7½ கோடி ரூபா நஷ்ட ஈடு கேட்கும் மாணவி

ஆசிரியர்களுக்கு ஆபாச எஸ்.எம்.எஸ்., அனுப்பியதாக குற்றம் சாட்டப்பட்டு தவறுதலாக சிறையில் அடைக்கப்பட்ட இந்தியத் தூதரக அதிகாரியின் மகள், 7½ கோடி ரூபா நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள இந்தியத் தூதரக அலுவலகத்தில் அதிகாரியாக இருந்தவர் தேவஷிஷ் பஸ்வாஸ். இவரது மகள் கிருத்திகா. இங்குள்ள குயின்ஸ் ஜோன் பிரவுனி உயர் நிலைப் பாடசாலையில் படித்தார். கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தப் பாடசாலை ஆசிரியர்கள் இரண்டு பேருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ்., அனுப்பியதாக, கிருத்திகா மீது குற்றஞ் சாட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து கிருத்திகா ஒரு நாள் சிறையில் அடைக்கப்பட்டார். அவரை மீட்பதற்காகத் தொடரப்பட்ட வழக்கில் கிருத்திகா குற்றவாளி அல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் மான நஷ்டம் கோரி 7½கோடி ரூபாய்களை கேட்டுள்ளார்.

## நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான தகுதியை இழக்கிறார் கிலானி

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் கேலிக்கூத்து ஆக்கி விட்டார். அவர் எம்.பி. பதவி வகிக்க 5 ஆண்டுகளுக்குத் தகுதி இழக்கிறார் என்று அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.



பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீது முன்பு ஒரு ஊழல் வழக்கு இருந்தது. அவர் பல கோடி ஊழல் பணத்தை சுவிஸ் வங்கியில் வைப்புச் செய்துள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. இது பற்றி சுவிட்சர்லாந்திலும் விசாரணை நடந்தது. இதன்பின், முஷாரப் ஜனாதிபதியானதும் ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் ஊழல் வழக்குகளில் சிக்கியவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இதில் சர்தாரி வழக்கும் முடிக்கப்பட்டது.

இந்த நிலையில், சர்தாரி மீதான ஊழல் வழக்கு விசாரணையைத் தொடர சுவிட்சர்லாந்துக்குக் கடிதம் அனுப்புமாறு பிரதமர் கிலானிக்கு உத்தரவிட்டார். ஆனால், கிலானி இதை செயல்படுத்தவில்லை. இதனால், அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எடுத்து உயர் நீதிமன்றம் விசாரித்தது. இதையடுத்து, நீதிமன்றத்தில் கிலானி முன்னிலையாகி, பாகிஸ்தான் அரசியலமைப்புச் சட்டப்படி, ஜனாதிபதிக்கு வழக்குகளில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் கூறினார்.

இந்த வழக்கில் நீதிபதி நாசிர் உல் முல்க் தலைமையிலான 7 நீதிபதிகள் பெஞ்ச் கடந்த மாதம் 26ஆம் திகதி தீர்ப்புக் கூறியது. சுருக்கமான உத்தரவை வெளியிட்ட நீதிபதிகள், நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தாமல் வேண்டுமென்றே அவமதித்த கிலானி குற்றவாளி. அவருக்கு அடையாளத் தண்டனையாக, இந்த நீதிமன்றம் கலையும் வரை இங்கேயே சிறை தண்டனைத் விதிக் கப்படுகிறது என குறிப்பிட் டிருந்தனர்.

இந்த நிலையில், இந்த வழக்கில் நீதிபதிகள் நேற்று முன்தினம் விரிவான தீர்ப்பை வெளியிட்டனர். அதில், பாகிஸ்தான் அரசின் உயர்ந்த பதவியில் உள்ள கிலானி, வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் கேலிக்கூத்து ஆக்கியுள்ளார்.

இது நீதித்துறையை அவமதிப்பதாகும். அரசியல் சட்டப்பரிவுகள் 63(1), 113 ஆகியவற்றின் கீழ் நீதிமன்றத் தண்டனை பெற்றவர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக பதவி வகிக்க குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் தகுதியிழப்பார். அதன்படி, கிலானி எம்.பி.யாக நீடிக்கும் தகுதியை இழக்கிறார். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருவில் தாங்கி
உருவினில்
உயிர் பெற
உழைத்தவள்
அம்மா
உயிர் எழுத்தின்
உண்மை
பெயர் அம்மா

# அன்னையர் தினம் இன்று

## ஓர் உயிரின் வேண்டுகோள்



உள்ளே இருந்தவரை
உந்தன் கொடி பற்றி இருந்தேன்
வெளியே வந்தவுடன்
விட்டுவிட்டுப் போவாயோ என
விரல் பற்றிக் கேட்கின்றேன்
வேண்டாம் எனை
விட்டு விட்டுப் போகாதே!

- சாரா



# அம்மாவின் அன்புக்கு நிகரேது....?

'அம்மா' என்பது உலகிலுள்ள உன்னதமான வார்த்தைகளில் உயர்வான ஒன்றாகும். அந்த வார்த்தைக்கும் அந்த உறவுக்கும் எதையுமே ஈடாக வைக்க முடியாது. எதை வேண்டுமானாலும் இரண்டாக வைத்துக் கொள்ளலாம், அம்மா என்பது ஒன்றே.

அந்த உத்தம உறவின் தியாகங்களை நினைவு கூற உலக நாடுகள் எங்கும் அன்னையர் தினம்கொண்டாடப் படுகிறது. ஏனெனில் எந்த நாட்டிலும் ஒரு குழந்தை பிறப்பது ஒரு தாய்மூலமே. ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அத்தனை உறவுகளினதும் ஆத்மார்த்தமான அன்பை ஒருமிக்கச் செய்து அன்பின் உச்சநிலையைக் காட்டுவது தாயன்பு மட்டுமே. சுயநலம் பாராத, தன் நலம் கருதாத ஓர் உயிர் அம்மா மட்டுமே. அந்தத் தாயன்பை ஒருகணம் உள்ளத்தில் எண்ணிப்பார்க்க உருவாக்கப் பட்டதே அன்னையர் தினமாகும். மேற்குலகத்தாரால் அறிமுகப்படுத்தப்பட்டதெனினும் அன்னையின் அன்பை எம் கண்முன் கொண்டுவருகிறது இந்த நாள். எமது தாய்க்குலத்தை ஒரு நாளாவது நினைப்பது என்பது பொருள்அல்ல, ஒவ்வொரு நாளும் அவள் சேவை செய்கின்றாள், எனவே ஒவ்வொரு நாளும் நினைத்தாலும் அது ஈடாகாது. அன்னையின் தூய்மையான அன்பின் மகத்துவத்தை வார்த்தைகளில் அடக்கிவிட முடியாது.

- ஜீவனா

# அம்மா உலகின் அடையாளம்

மானுட வாழ்வில் அன்பின் முதல் வெளிப்பாடாகக் கருதப்படும் தாயன்பு வாழ்வின் அந்தம் வரை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். ஓடும் இயந்திரங்களுடன் ஓடி அலைந்து தானும் இயந்திரமாகவே மாறிக் களைத்து வருகிறான் மனிதன். விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் விந்தைகள் செய்துகொண்டிருக்கிறது விஞ்ஞானம். இந்நிலையில் அன்னையருக்காக ஒருதினத்தைஒதுக்குவதென்பது சிரமமான காரியமே.

கீழைத்தேய நாடுகளில் தாயைப் பிரிந்துவாழாத நிலையே பொதுவாகக் காணப்படுவதால் அன்னையர் தினம் பற்றிப் பெரிதாக சிந்திப்பதில்லை. ஆனால் தற்போது எமது நாட்டை எடுத்துக்கொண்டால் அநாதை இல்லம், முதியோர் இல்லம் என்று பெருகிய வண்ணமே உள்ளது. அங்கு தாய்களின் எண்ணிக்கையும்அதிகரித்த வண்ணம் உள்ளது.



பிள்ளைகளால் வெறுக்கபட்ட தாய்மார், பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ள தாய்மார், பிள்ளைகளே இல்லாத தாய்கள், என எல்லோரும் அங்கு தான் தஞ்சம் புகுகின்றார்கள். காரணம் பிள்ளைகள் தான். நாகரிக வளர்ச்சி, கௌரவம் என்று மூன்றாம் நபர் ஒருவரின் பேச்சைக்கேட்டு,அன்னையரை அநாதைகளாக்குகின்றனர். எம்மை இவ்வுலகுக்கு ஈன்றெடுத்த தாய்க்காக அந்த அன்பை உணர்வதற்காக ஒருநாளை பிரத்தியேகப்படுத்துவதில் தவறில்லை என்றே கூற முடியும்.

பெண்ணின் அதியுயர் நிலையாக மதிப்பிடப் படும் தாய்மையின் மகத்துவத்தை அறிந்து அன்பான அந்த உறவுக்காக அன்பைப் பகிர்வோம். இந் நாளிலாவது அந்த அன்பை முழுமையாக அடைந்து. முதியோர் இல்ல எண்ணிக்கைகளைக் குறைப்போம். தாய் அன்பு வேண்டும் பிள்ளைகளே....!! முதியோர் இல்லத்தில் அவர்களைத் [illegible]
[illegible]

- நித்தியா

## அன்னையை மகிழ்வியுங்கள்

காலம் முழுவதும் உங்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் உங்கள் தாய்க்கு இந்த ஒரு நாளிலாவது நீங்கள் நன்றிக்கடன்பட்டவராக இருங்கள்.

இந்த இனிய நாளில் அவரை மகிழ்விக்க புது உபாயம் ஏதேனும் தோன்றுகிறதா என்று யோசித்து அதன்படி செயற்பட்டு அசத்துங்கள். இன்றைய தினம் உங்களால் இயன்ற அளவுக்கு அவரை திருப்திபடுத்தப் பாருங்கள். நீங்கள் சமையல் கூடச் செய்து அவரை உட்கார வைத்துப் பரிமாறலாம். அவர் ஆச்சரியப்படும் வகையில் ஏதாவது செய்யலாம். உங்கள் சக்திக்குத் தகுந்த ஒரு பரிசை அளித்து அவரை பூரிப்படையச் செய்யுங்கள். பரிசு கொடுக்க வசதி இல்லை என்றாலோ, கொடுக்க முடியாவிட்டால் போனாலோ பரவாயில்லை, ஒரு பூவையாவது கொடுக்கலாம். அதுவும் இல்லையா? கவலையை விடுங்கள். ஓர் அன்பு முத்தம் கொடுத்து அசத்துங்கள்.

# அன்னையர் தினம் தோன்றிய வரலாறு



"தாயிற்சிறந்த கோயிலுமில்லை...." என்ற வைரவரிகள் தமிழ் கூறும் நல்லுலகில் பவனி வரும் இரத்தினச் சுருக்கமான வார்த்தை. ஒரு சகோதரியாக, தாயாக, தாரமாக, தோழியாக இல்லத்தில் உள்ளோரைப் பக்குவப்படுத்தும் பாட்டியாக, அனுபவங்களின் அரவணைப்பில் வழி நடத்திச்செல்லும் ஆசானாக. .இப்படிப் பெண் தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் அன்னை என்கிற பாத்திரம்தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. இப்படிப்பட்ட அன்னையைக் கௌரவிக்கும் இந்நாளில் 'அன்னையர் தினம்' அகிலமெங்கும் கொண்டாடக் காரணமாக இருந்தவர் பற்றி நாம் சற்றுத் தெரிந்து கொள்வோமா?

16ஆம் நூற்றாண்டில் கிறிஸ் நாட்டில்தான் "MOTHERING SUNDAY" என்ற நாள் முதன்முதலாக அனுசரிக்கப்பட்டிருக்கிறது. ஈஸ்ட்டர் வரும் மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமை இயேசுவின் தாயை நினைவு கூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. ஆனால் அமெரிக்காவில் முகிழ்த்த அன்னையர் தினம்தான் இன்றைக்கு உலகெங்கும் கொண்டாடக் காரணமாக அமைந்தது.

'அனா ஜார்விஸ்' என்ற பெண் சமூக சேவகி அமெரிக்காவின் மேற்கு வர்ஜினியா மாநிலத்தில் கிராப்டன் என்ற கிராமத்தில் வாழ்ந்தவர். அன்று யுத்தக் களத்தில் அமெரிக்க வீரர்கள் பலர் உயிரிழந்தனர். அவர்களின் குடும்பங்களும் சிதைந்து சீரழிந்து நாலாபக்கமும் சிதறிப்போயின. பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரவும் அவர்களின் நல்வாழ்க்கைக்கும் சமாதானத்துக்கும் அயராது பாடுபட்டவர்தான் 'அனா ஜார்விஸ்' அவரின் பார்வையற்ற மகளுடன் தன் இறுதி மூச்சுவரை சமூக சேவகியாகவே வாழ்ந்து 1904இல் மறைந்தார். மகள் ஜார்விஸ் முதன்முதலாக தனது அன்னையின் நினைவாக ஊரில் உள்ள மெத்தடிஸ் தேவாலயத்தில் 1907ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி சிறப்பு வழிபாடு ஒன்றை நடத்தினார்.

1913ஆம் ஆண்டு தன் பணி நிமித்தம் மகள் ஜார்விஸ் பென்சில்வேனியா மாநிலத்தில் பிலடெல்பியாவில் குடியேறினார். தாயார் விட்டுச்சென்ற சமூக சேவையை மகள் ஜார்விஸ் தன் தனிப்பெரும் கடமையாகக் கருதித் தொடர்ந்தார். கஷ்டப்படுகிற, வாழ்க்கையில் இன்னலும், சோதனைகளும் ஒருசேரத் தாக்கி மனம் வெந்து நொந்து சமூகத்தில் ஓரங்கட்டப் பட்டவர்களுக்கான அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார். தன் தாயாரின் நினைவாகவும், தத்தம் வீடுகளில் அவரவர் அன்னையர்களும் கௌரவிக்கப்பட வேண்டும். எல்லோர் இல்லங்களிலும் அன்றையதினம் மகிழ்ச்சி ததும்ப வேண்டும் என்று எண்ணினார். தம் எண்ணத்தை பென்சில்வேனியா மாநில அரசுக்குத் தெரிவித்தார். அரசும் அவர் கருத்தை ஏற்று 1913ஆம் ஆண்டு முதல் அன்னையர் தினம் என அங்கீகரித்து அறிவித்தது.

ஆனால், ஜார்விஸ் திருப்தி அடையவில்லை. ஆயிரக்கணக்கில் அரசியல்வாதிகளுக்கும், தன்னார்வ அமைப்புகளுக்கும், வர்த்தக அமைப்புகளுக்கும் கடிதங்கள் எழுதி அமெரிக்கா முழுவதும் 'அன்னையர் தினம்' கொண்டாடப்படவும் அந்த நாளை அரசின் விடுமுறை நாளாகவும் அங்கீகரித்து அறிவிக்க வேண்டுமென அமெரிக்க அதிபருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

1914ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் வுட்ரோ வில்சன் வருடந்தோறும் மே மாதம் இரண்டாம் ஞாயிறை அதிகாரப்பூர்வமாக அன்னையர் தினமாகவும், அன்று விடுமுறை தினமாகவும் இருக்கும் அறிவிப்பை வெளியிட்டார். இதனையே கனடா அரசும் ஏற்று அங்கீகரித்து அறிவித்தது. அதுமட்டுமல்ல ஆப்கானிஸ்தானத்திலிருந்து கோஸ்டாரிகா வரை 46 நாடுகள் இதே நாளில் 'அன்னையர் தினம்' என அறிவித்து நடைமுறைப்படுத்தியது. ஜார்விஸ் அளவற்ற மகிழ்ச்சியடைந்தாலும் முழுமனநிறைவடையவில்லை. உலகமெங்கும் அன்னையர் தினம் கொண்டாடப்பட வேண்டும்" என்ற எண்ணத்துக்கு அடுத்த வித்தை இட்டார்.

எதையும் வியாபாரமாக்கி பணம் சேகரிக்கும் அமைப்பு 'அன்னையர் தினம்' அன்று அன்னையின் படம் ஒன்றைப் பொறித்து கொடியொன்றை விற்று பணம் சேர்த்தது. வெகுண்டெழுந்தார் ஜார்விஸ். 1923ஆம் ஆண்டு இத்தகைய கொடி விற்பனையை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். "என்னுடைய நோக்கம் அன்னையர் தினம் 'உணர்ச்சிபூர்வமான' நாளாக இருக்க வேண்டுமேயல்லாமல் டொலர் சேர்க்கின்ற நாளாக இருக்கக்கூடாது. இத்தகைய வசூலுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்று வாதாடி வென்றார்.

"உலகம் முழுக்க 'அன்னையர் தினம்' அனுசரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் அன்னையைப் போற்றுகிற, வாழ்த்துகிற, மகிழ்விக்கின்ற நாளாக அன்றைய தினம் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும் என்பதுதான் என் ஆசை" என்று தனது 84ஆவது வயதில் தனியார் மருத்துவமனையில் இறப்பதற்கு முன் தன்னைச் சந்தித்த செய்தியாளர்களிடம் வெளிப்படுத்தினார். அவருடைய ஆசை இன்று அனேகமாகப் பூர்த்தியாகிவிட்டது என்றே சொல்லலாம். 'அன்னையர் தினம்'மூலம் தெரியாவிட்டாலும், இன்று அகிலம் அன்னையர் தினத்தை அவரவர் இஷ்டத்துக்கு கொண்டாடி மகிழ்கின்ற நாளாகத் திகழ்கிறது. சிங்கப்பூரில் சீனிவாசப் பெருமாள் கோவிலில் மகாலட்சுமிக்கு விசேட வழிபாடு செய்து பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படுவது இந்தத் தினத்தில் இன்றும் நடைபெறுவதைக் காணலாம். தீபாவளி, பொங்கல், கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள் போல் அன்னையர் தினத்தை வாழ்த்து அட்டைகள், பரிசுப் பொருள்கள் என்று கொண்டாடத் தலைப்பட்டுவிட்டனர்.

- சந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(13)

## கவலைக்குரிய நிலைகளை எப்படிக் கையாள்வது?

நீங்கள் ஒரு நிறுவனத் தலைவராகவோ அல்லது வியாபரரியாகவோ இருக்கக் கூடும். ஒரு அலுவலராகவோ தொழிலாளியாகவோ கூட இருக்கலாம். ஆனால் யாராக இருந்தாலும் தோல்விகள் நேரிடும் போது உங்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. காரணம், வெற்றியின் மீதே உங்கள் ஒட்டு மொத்தக் கவனமும் இருந்திருக்கும். நீங்கள் ஒருபோதும் தோல்வியை எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள். அதனால் தான் தோல்வியில் துவண்டுபோவதும், நொறுங்கிப் போவதுமாக யாரோ ஒரு சம்மட்டியால் உங்கள் தலையில் அடித்தது போல் உணர்வீர்கள்.

வெற்றி மகிழ்ச்சியைத் தருகிறது. தோல்வி கவலையைத் தருகிறது. உண்மையில் கவலைப்படுவதால் எதுவும் மாறி விடுவதில்லை. கவலை உங்களை எங்கேயும் கொண்டு சேர்ப்பதில்லை. கவலைப்படாமலே தடைகளை நீங்கள் கடக்க முடியும். பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். தோல்வியில் இருந்து மீட்சியடைய முடியும்.

### ஒரு எளிய வழி

நீங்கள் கவலைப்படாமல் இருப்பதற்கு மூன்று நடவடிக்கைகள் கொண்ட ஒரு வேலை முறை உள்ளது. அது எவரும் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு எளிமையானது.

### நடவடிக்கை -1

சூழ்நிலையை அச்சமில்லாமல், நேர்மையாகப் பகுப்பாய்வு செய்யுங்கள். நீங்கள் தோற்கும் பட்சத்தில் நிகழக் கூடிய மோசமான விளைவுகளைக் கண்டறியுங்கள். கவனக் குறைவால் ஏற்படும் தவறுகள் உங்கள் வேலைக்கே உலை வைக்கும். ஒரு தொழிலாளி செய்கிற தவறு காரணமாய் உற்பத்தியிழப்பு தொடங்கி எந்திரக் கோளாறுவரை பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படும்.

### நடவடிக்கை -2

விளைவுகள் மோசமானதாயினும் அவற்றுடன் சமரசம் செய்து கொள்ளத் தயாராயிருங்கள்.

### நடவடிக்கை - 3

மனத்தளவில் ஏற்றபின், அவற்றை மேம்படுத்துவதற்கான உபாயங்களை, வழிமுறைகளைக் கண்டறிய முயலுங்கள். அந்த வகையில் உங்கள் ஆற்றலையும், நேரத்தையும் செலவிடுங்கள்.

நீங்கள் முயன்றால் இழப்பின் அளவை வெகுவாய் குறைக்க முடியும். ஆனால் வெறுமனே கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் இவற்றில் எதையும் உங்களால் செய்ய முடியாது.

'மிக மோசமானவைகளை ஏற்கத் தயாராகிற போது, உண்மையான மன அமைதியை நீங்கள் உணர்வீர்கள்' என்கிறார் லின்யுடாங். (சீன தத்துவமேதை).

*'இனி இழப்பதற்கு எதுவும் இல்லை*
*என்று எண்ணிக் கொள்ளுங்கள்,*
*கவலை இல்லாதொழியும்!'*

மோசமானவைகளை ஏற்கத் தயங்குகிறவர்கள், கோபக்காரர்கள். அவர்கள் செயல்களை மேம்படுத்துவதற்கு மறுத்து விடுவார்கள். கோபம் அவர்களுடைய வாழ்க்கையையே நாசப்படுத்தி விடுகிறது. பேரழிவைத் தடுப்பதற்கோ, அழிவில் இருந்து தங்களை மீட்டெடுப்பதற்கோ அவர்கள் முயல்வதில்லை.

மிரட்டிப் பணம் பறிப்பது. நியாயமற்ற முறையில் ஒன்றைச் செய்ய பலவந்தமாய் தூண்டப்படுவது (black mail) போன்ற பாதிப்புக்களுக்குள்ளானவர்கள் தங்கள் மீதே கோபம் கொண்டு தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிறார்கள். அது காரணமில்லாமல் ஏற்படுகிற மனவருத்தம். பெரிதும் மனச் சோர்வூட்டும் நோயில் (melancholia) இருந்து தங்களை அவர்கள் விடுவித்துக் கொள்ள முடியும்.

### வேலை இருந்தால் கவலை இருக்காது

கவலைப்படாதிருக்க ஒரே வழி தன்னை மறந்து விடுவதுதான். லூயி பாஸ்டர் மிகப் பெரிய விஞ்ஞானி பாஸ்டர் கூறுவார். 'நூலகங்களிலும், ஆய்வு கூடங்களிலும் அமைதியை நீங்கள் காண முடியும்' என்று ரொம்ப சரி, வாசகர்களும், ஆராய்ச்சி செய்பவர்களும் தங்களை மறந்து தங்கள் பணியில் கருத்தூன்றியிருப்பார்கள், அவர்களுக்குக் கவலைப்பட அவகாசம் இருக்காது.

### வயலின் வாசிக்கிற போது

'ஒரு நேரத்துக்கு ஒன்று' என்பது மனம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற விதி. உங்களால் வயலின் வாசித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் வரவேண்டிய அல்லது கொடுக்க வேண்டிய கடனைப் பற்றிக் கவலைப்பட முடியாது. காரணம் வயலின் வாசிப்பது ஒன்றும் கைக்காரியமல்ல மனதை ஒரு முகப்படுத்திக் கொள்ளுங்கள். எப்போதும் உங்களை சுறுசுறுப்பாக (busy) வைத்திருங்கள். கவலைப்பட நேரமிருக்காது. வயலின் வாசிப்பு, புத்தக வாசிப்பு என்றில்லை, பிடித்தமான எந்த ஒன்றையும் வேலையாக்கிக் கொண்டு விடலாம்.

மனசுக்குப் பிடித்த ஒன்றை ஆர்வமாய் செய்து கொண்டு இருந்தால் அந்தநேரத்தில் கலைப்படுவது என்பது சாத்தியமாகாது.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# பிரதேச நகரசபை செயலாளர்கள் முழு மனதோடு செயலாற்ற வேண்டும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

**குப்பையகற்றல், திண்மக் கழிவு – டெங்கு அபாயம் தொடர்பாக, ஏதாவது ஓர் உள்ளூராட்சி சபையை முன்னிறுத்தி ஊடகங்களில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. எனவே ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் தேவையான வாகனங்கள், ஆளணிகள் தரப்பட்டுள்ளன. இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி பிரதேச அபிவிருத்திக்கும் சூழலுக்கும் உதவுங்கள்.**

யாழ்ப்பாணம்,மே 10

திண்மக் கழிவு- குப்பைகள் ஆகிய இரண்டும் இன்று யாழ்-மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகள் எதிர்நோக்கும் பெரிய பிரச்சினைகளாகும்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக வெறும் கூட்டம் நடத்தி தீர்வு காண முடியாது.

உள்ளூராட்சி சபைகள் தமது சூழலைப் பேணுவதுடன் ஏனைய பிரதேசத்துக்கோ மக்களுக்கோ தீங்கு ஏற்படாத வண்ணம் பிரதேச - நகரசபை செயலாளர்கள் முழுமனதோடு சேவையாற்ற வேண்டும் என யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கருத்தமர்வு அண்மையில் யாழ். உள்ளூராட்சி திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரணவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

குப்பையகற்றல், திண்மக் கழிவு - டெங்கு அபாயம் தொடர்பாக ஏதாவது ஒரு உள்ளூராட்சி சபையை முன்னிறுத்தி ஊடகங்களில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

ஆதலால் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் தேவையான வாகனங்கள், ஆளணிகள் தரப்பட்டுள்ளன. இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி பிரதேச அபிவிருத்திக்கும் சூழலுக்கும் உதவுங்கள்.

இன்று திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பேசுவதற்கும் ஆராய்வதற்கும் கற்றுக் கொண்டவற்றை தங்களுடன் பகிர்வதற்குமாக யுனிசெவ் பிரதிநிதி எந்திரி. யோ.தயாபரன் வந்துள்ளார்.

இவரது கருத்தைச் செவிமடுத்து எதிர்காலத்தில் எமது பிரதேசத்தின் திண்மக் கழிவு முகாமைத்துவத்தை எவ்வாறு சீர் செய்யலாம் என பகுப்பாய்வு செய்யுங்கள் என்றார்.

தொடர்ந்து யுனிசெப் பிரதிநிதி எந்திரி. யோ.தயாபரன் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விரிவான விளக்கத்தை முன்வைத்தார். இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைச் செயலாளர்கள் கலந்துகொண்டனர். (எ)

# வாழ்நாள் சாதனையாளர் விருது



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தமிழ்நாடு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழத்தினால் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்குரியவராகத் (Distinguished Life time Achevement Award in Management- 2012) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆய்வுகளும் பிரசுரிப்புகளும், நிர்வாக ரீதியான திறன்கள், உள்நாட்டு வெளிநாட்டு ரீதியான கல்வி ரீதியான பங்களிப்புகள் என்ற அடிப்படையில் சர்வதேச ரீதியிலான விண்ணப்பங்களுக்கு அமைய பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான முகாமைத்துவ ஆய்வு மையத்தினால் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம் வரை கல்வி கற்று யாழ்.பல்கலைக்கழகத்துக்கு தெரிவானவர். 1996 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளராக நியமனம் பெற்று பேராசிரியர், துறைத்தலைவர் என பதவியுயர்வுகள் பெற்று தற்போது பீடாதிபதியாக விளங்குகின்றார்.

பேராசிரியர் தி.வேல்நம்பி தமிழியலிலும், ஆழ்ந்த புலமையுள்ளவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-3)

# கலைஞர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மே 10

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷண விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. சிற்பம்,ஓவியம், நடனம், வாய்ப்பாடு, தவில், நாதஸ்வரம், நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டுப் புறவியல், ஊடகத் துறை, சினிமா போன்ற கலைத்துறைகளில் சேவையாற்றி எதிர்வரும் 2012.12.15 அறுபது வயதைப் பூர்த்தி செய்யும் நிலையிலுள்ள கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

எனவே வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள மேற்படி தகைமையுள்ள கலைஞர்கள் இதற்கான விண்ணப்பங்களை கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# முல்லைத்தீவு கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

**தி.போ.தமிழறிவு வினாவிடை**

முதலாமிடம் - முல்லைத்தீவு ம.வி, இரண்டாமிடம் - வித்தியானந்தா கல்லூரி, மூன்றாமிடம் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

**தி.போ.- மேடை நாடகம்**

முதலாமிடம் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, இரண்டாமிடம் - குமுழமுனை ம.வி, மூன்றாமிடம் - வித்தியானந்தக் கல்லூரி.

**தி.போ.- நாட்டார் பாடல்**

முதலாமிடம் - செம்மலை ம.வி,இரண்டாமிடம் - முல்லைத்தீவு ம.வி, மூன்றாமிடம் - வற்றாப்பளை ம.வி.

(முற்றும்)



சுழிபுரம்- பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இலச்சார்ச்சனை அண்மையில் நடைபெற்றது. அவ்வேளை அடியார்கள் ஒன்று சேர்ந்து கந்தரநுபூதி ஐம்பத்தொரு பாடல்களையும் பாடியுள்ளார். (28)

# நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி,மே 10

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த 30 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவர்- அ.கயிலாயபிள்ளை (அதிபர்), உபதலைவர் - ந.பாலச்சந்திரன் (துணை அதிபர்), செயலாளர் - கா.சிவஞானசுந்தரம், உதவிச் செயலாளர் - ம.குமாரவேல் ராஜா, பொருளாளர் - பு.குகானந்தன்.

மேலும் சங்கத்தில் பெற்றோர் பிரதிநிதிகளாக ஏழுபேரும் ஆசிரிய பிரதிநிதிகளாக ஆறு பேரும் நலன் விரும்பிகளாக மூவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## மழை விட்டும் நிற்காத தூவானம்

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின்போது சம்பந்தப்பட்ட இரு தரப்பினராலும் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்ற 2020ஆம் ஆண்டு வரையான கால அவகாசம் தேவை என இலங்கை கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டத்தின் இணைப்பாளர் பிரசன்ன குரு போம தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தி வாசிப்பதற்கு கண்ணிவெடி அகற்றும் பணி மிகவும் காலதாமதப்பட்டுக் கொண்டிருப்பதாகவே எண்ணத் தோன்றும். ஆனால் ஆழநோக்கின் கடந்தகாலங்களில் இலங்கையில் நடைபெற்ற போர் இந்த நாட்டை எவ்வளவு மோச மான நிலைமைகளுக்குள் இழுத்துச் சென்றிருக்கிறது என்ற உண்மை தெரியவரும்.

போரின் எச்சங்களாக மிச்சமிருக்கும் இந்த கண்ணிவெடிகள் எப்போதும் விழிப்பாய் இருப்பதை அண்மைய மாதங்களில் இடம்பெற்ற துயரச் சம் பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. கடந்தமாதத்தில் கிளிநொச்சி செல்வா நகரில் தொழில் தேவைக்காக கண்ணிவெடியை பயன்படுத்துகையில் அது வெடித்து உடல் சிதறி மரணித்த இருவரையும் அண்மையில் பளையில் கண்ணிவெடியோடு விளையாடிய இரு பிஞ் சுக் குழந்தைகளுக்கு ஏற்பட்ட பரிதாப மரணத்தையும் தமிழர்கள் இன்னும் மறந்து விடவில்லை.

இந்தநிலையில் இப்போது வெளியாகியுள்ள இந்த 2020 வரையான காலநீடிப்பு விடயம் மீளக்குடிய மர்த்தப்பட்டுள்ள மக்கள் மத்தியிலும் தமிழ்ச் சமூக நலன்விரும்பிகள் மத்தியிலும் வேதனையை உரு வாக்கியுள்ளது.

இந்த அறிக்கையில் புலிகள் இயக்கம் புதைத்த 90 வீதமான கண்ணிவெடிகள் இதுவரையில் அகற்றப் பட்டுவிட்டதாகவும் மிகுதி 10 வீதமான கண்ணிவெடி கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அகற்றப்படாது இன்னமும் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே இனி வரப்போகின்ற 8 வருட கண்ணிவெடி அகற்றும் பணியின்போது இலங்கை இராணுவத்தி னர் புதைத்த கண்ணிவெடிகளையே அகற்ற வேண் டிய நிலை தோன்றியுள்ளது.

உண்மையில் படையினர் புதைத்த கண்ணி வெடிகள் அவர்களால் இலகுவாக மீட்க முடியும். அவர்களிடம் அதற்கான வரைபடங்கள் கூட கைவ சம் இருக்கலாம். ஆனால் இராணுவத்தினர் அத னைச் செய்வார்களா என்பது கேள்விக்குறியே.

இதேவேளை இராணுவத்தினர் தமது தேவைக ளுக்காக பயன்படுத்தும் முகாம் பகுதியிலோ அல்லது காணிப் பகுதியிலோ இருக்கும் கண்ணிவெடிகளை அகற்ற சில குறிப்பிட்ட நாள்களே அவர்களுக்குத் தேவைப்படும். ஏ-9 நெடுஞ்சாலையில் பயணிக்கும் ஒவ்வொருவரும் இதனை உதாரணபூர்வமாக அறிய லாம். ஆனால் வடக்கில் தமிழ்க் கிராமங்களில் இராணு வத்தினரால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற் றத்தான் இன்னும் 8 வருடம் தேவைப்படுகிறது?

போரில் அனைத்தையும் இழந்து மிச்சமிருந்த உயிரை மட்டும் கையில் பிடித்தபடி மீள்குடியேறி யிருக்கும் மக்களுக்கு இந்தப் பிரச்சினை மிகப் பெரும் சவாலாக இருந்துவருகிறது. எந்தத் தொழி லையும் அவர்களால் மனப்பூர்வமாக செய்ய முடிய வில்லை. விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டி ருக்கும் வடக்கு மக்கள் தமது சொந்த நிலங்களில் சிறுதானியப் பயிர் செய்யக்கூட அச்சமடைகின்ற னர். எப்போது காலுக்குக் கீழ் வெடிக்கும் என்ற பயத்துடனேயே தொழிலை மேற்கொள்ள வேண்டிய அவலச் சூழ்நிலைக்குள் அந்த மக்கள் தள்ளப்பட்டி ருக்கின்றனர்.

# தூக்கத்தைக் கலைக்கும் விலைவாசி உயர்வு


■ வீயெஸ்ரி

வெளிப்பார்வைக்கு பலம் மிக்க மரமொன்றாகத் தோன்றினாலும், முருங்கை மரம் அதில் ஏறும் ஒருவரின் பாரத்தைக் கூடத் தாங்கிக் கொள்ள இயலாத அளவுக்குப் பலமற்றதொரு மரமாகும். கிளைகள் அளவுக்கு அதிக மாகப் பெருத்து வளரும் போது அவற் றின் பாரத்தைத் தாங்கிக் கொள்ள இயலாது அடிமரமே சாய்ந்து நிலத்தில் வீழ்வதை எம்மால் காண இயலும். அந்த வகையில் ஒருவர் முருங்கை மரமொன்றில் ஏறுவதென்பது மிக்க அவதானத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய தொன்று. இல்லையேல் குறிப்பிட்ட அந்த நபர் பாதிப்புக்கு உள்ளாக நேர்வது நிச்சயமே. மரம் முறிந்து அவர் நிலத்தில் விழ நேர் வதைத் தவிர்த்திட இயலாது.

பொய் கூறி அதனால் தனக்குப் பாதிப்பை ஏற்படுத்த ஒருவர் முனை வதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே என்னை முருங்கை மரத்தில் ஏற்ற முயற்சிக்க வேண்டாமென ஒருத்தர் மற்றவருக்குச் சிலேடையாகக் கூறி தாம் குறிப்பிட்ட விடயத்தில் உஷாரா யிருப்பதாக உணர்த்துவதுண்டு. முருங்கை மரத்தின் இயல்பைத் தெரிந்திருக்கும் ஒருவர் அதில் ஏறுவதை எவ்வாறு அவதானமாகத் தவிர்த்துக் கொள் வரோ அதே போன்று முருங்கை மரத் தின் இயல்பு குறித்து எதுவும் அறிந் திராத ஒருவர் அதில் ஏறுவதற்கு ஒரு போதும் பின்னிற்கப் போவதில்லை.

கடந்த பல காலமாக இந்த நாட்டின் பொது மக்களை முருங்கை மரத்தில் ஏற்றிவிடுவதில் இந்த நாட்டின் அர சியல்வாதிகள் திறமை பெற்றிருந் தனர்.. அரசியல்வாதிகளது வாக்குறுதி கள் மற்றும் தமது எதிர்பார்ப்புக்கள் என்ற பாரமான மூட்டைகளைச் சுமந்துகொண்டு முருங்கை மரக்கொப் புகளில் ஏறிய அப்பாவிப் பொதுமக் கள் ஒடிந்ததனால் தற்போது தமது சுமைகளுடன் நிலத்தில் வீழ்ந்து அழுந்த நேர்ந்துள்ளது அவ்விதம் மரத்திலிருந்து வீழ்ந்ததனால் காய முற்றுச் சிரமத்தில் அழுந்த நேர்ந்திருக் கும் பொது மக்களை நள்ளிரவு 12 மணிக்கு பயங்கரக் கொம்புகளுட னான எருது ஓட ஓட விரட்டித் தனது கொம்புகளால் குத்திக் காயப்படுத்த ஆரம்பித்துள்ளது. நள்ளிரவு 12 மணியைப் போன்று இந்த நாட்டுக் குடிமக்களை அச்சத்தில் உறையவைக் கும் வேறேதும் இருக்கப்போவ தில்லை. அவர்கள் இரவில் அச்சத்து டனேயே படுக்கைக்குச் செல்கின்றனர். அடுத்த நாள் காலையில் நித்திரை விட்டெழும்பும் போது எரிபொருள் விலை, பாண் விலை, பால்மா வகை களின் விலைகள், எரிவாயுவிலை மற்றும் சிமெந்து விலை என்பன அதிகரிக்கப்பட்டுள்ளதான அரசின் அறிவிப்பைக் கேட்க நேரக்கூடுமோ என்ற அச்சத்துடனேயே அவர்கள் தினமும் இரவில் படுக்கைக்கு செல்ல நேர்ந்துள்ளது. மேலும் மேலும் வேறு பொருள்களின் விலைகளும் அரசி னால் உயர்த்தப்பட நேருமோ என்ற அச் சமும் அவர்களது நாளாந்த வாழ்க் கையில் தொடர்கதையாகத் தொடர்கிறது.

இன்றைய அரசு நாட்டின் பொரு ளாதாரச் சிக்கலை சமாளிக்க இயலாது தலைச்சுற்றுக்கு ஆளாகியுள்ளது. என் பது வெளிப்படையாகப் புலப்படும் ஓர் உண்மையாகும். இதற்கான மாற்று வழியாக பொது மக்களது அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலை களை அதிகரித்தும், பொது மக்களை [illegible]
[illegible]
யும், புதிதாகக் கட்டுப்பாடின்றிப் பண




**நள்ளிரவு 12 மணியைப் போன்று இந்த நாட்டுக் குடிமக்களை அச்சத்தில் உறையவைக்கும் வேறேதும் இருக்கப்போவதில்லை. அவர்கள் இரவில் அச்சத்து டனேயே படுக்கைக்குச் செல்கின்றனர்.**

நோட்டுகளை அச்சிட்டுப் பாவனைக்கு விட்டும் வெளித்தரப்புகளிடமிருந்து அதிகரித்த வட்டிக்குக் கடன் பெற்றும் நிலைமையை நேர்சீர் செய்து விடும் உத்தியை அரசு கைக்கொள்கிறது. நாட்டின் இருப்பு எவ்வாறானாலும் சரி அரசின் இருப்பை ஸ்திரப்படுத் திக்கொள்ளும் முனைப்பில் செயல்ப டும் அரசின் உயர்மட்ட அதிகாரிக ளது பொருளாதார குறிக்கோள்களின் விளைவு, நாட்டின் பொதுமக்களது வாழ்க்கைச் செலவு விகிதம் முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு வேகமாக உயர்ந்து செல்ல வழியமைத்துள்ளது.

அத்தியாசிய பாவனைப் பொருள் களின் விலையேற்றம் குறித்து மட் டும் ஊடகங்கள் கடும் விமர்சனங் களை முன்வைத்து வருகின்ற போதி லும் புத்தாண்டுக்குப் பின்னரான கடந்த மூன்று வாரகால இடைவெளியில் வர்த்தக நிலையங்களில் சகல இறக் குமதி பொருள்கள் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விலைகளில் உயர்ச்சி ஏற்பட்டிருப்பதைத் தெளி வாக அவதானிக்க முடிகிறது. இறக்கு மதிப் பொருள்களுக்கான விலைகள் மேலும் ஒரு தடவை உயர்த்தப்படக் கூடுமெனப் பொருளாதார நிபுணர்கள் முன்னெச்சரிக்கை செய்து வரு கின்றனர். ஆயினும் இத்தகைய பொருளாதாரத் சிக்கலைப் போக்கும் திறன் இன்றைய அரசிடம் சிறிதளவும் கிடையாது. துரதிருஷ்டவசமாக உலக ளாவிய ரீதியிலான பொருளாதாரச் சிக்கல் எமது நாட்டின் பொருளாதார நிலையில் குறிப்பிடத்தக்க அளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை மறுக்க இயலாத போதிலும் இலங்கை அரசால் இந்தச் சிக்கல் நிலையை உரிய முறையில் முகாத்துவப்படுத்த இயலாது போனதன் காரணமாகவே நாட்டு மக்கள் மென்மேலும் சிரமங்க ளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

இத்தகைய பொருளாதாரச் சிக்கலை எம்மால் தீர்க்க இயலாதுள்ளது. எவ ராவது இதற்குத் தீர்வுகாண இயலு மானால் அதனை நிறைவேற்றிக் காட் டுங்கள் எனத் தோல்வியை ஒப்புக் கொண்டு நாட்டின் நிர்வாகத்தை மற்றொருதரப்பிடம் கையளிக்கவும் இன்றைய அரசு ஒருபோதும் முன்வரப் போவதில்லை. தனது இயலாமைக்காக வெவ்வேறு நொண்டிச் சாட்டுகளை முன்வைத்து இன்றைய அரசு தன்னை நியாயப்படுத்தி வருகின்றது. கடந்த முறை அரசு அத்தியாவசியப் பொருள்க ளின் விலையை உயர்த்தியமை தொடர் பான பிரச்சினை எழுந்தபோது, ஒருவர் மாதமொன்றுக்கு 2500 ரூபா வருமானத்தில் உயிர்வாழ இயலு மென கல்வி அமைச்சர் தெரிவித் தமை அந்த வேளையில் பரிகாசத்துக்கு உள்ளானதொரு கருத்தாக அமைந் தது. அக் கருத்து நாட்டு மக்களை அவமரியாதை செய்யுமொன்றாகக் கருதப்பட்ட போதிலும்,அக் கருத்து அர்த்தமற்றது என்பதை நிரூபிக்க எதிர்க்கட்சித் தரப்புகள் ஆர்வம் காட்டிச் செயற்பட முன்வரவில்லை. கல்வி அமைச்சரின் அன்றைய அக் கருத்து இன்றும் மீளாய்வு செய்யப் பட வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் சொல்லப்பட்ட அந்த 2500 ரூபா கதையின் இரண்டாவது அத்தியா யம் இன்றோ நாளையோ மீண்டும் மீள்நிர்ணயம் செய்யப்படும் நிலை ஏற்படக்கூடும்.

அந்த வகையில் இன்று நாட்டின் வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச் சினை தொடர்பாக அரசினால் எத்த கைய சாதகமான நடவடிக்கைக ளையும் மேற்கொள்ள இயலாத அள வுக்கு அரசு கையறு நிலைக்கு வந் துள்ளது.

யதார்த்தத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை இன்று அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இது ஒரு நாளிலோ, இரு நாள்களிலோ தீர்க்கப்பட இயலாததொரு பிரச்சினை என் பதனை நாமறிவோம். இது பல தசாப்தங்களாக இழுபறிக்கு உள் ளாகி வந்த பொருளாதாரச் கொள்கை வகுப்பாளர்களின் தவறுகள் போன்றோ, பொருளாதர நிலையைக் கையா ளும் நோக்கில் அதனைக் கைகளில் எடுத்துக் கொண்ட அரசியல் வாதி கள் மற்றும் ஆட்சியாளர்கள் மேற் கொண்ட தவறான கையாள்கை என்பவற்றாலும், மேற்கொண்ட முடிவுகள் காரணமாகவும் மற்றும் அரச மட்டங்களில் நிலவிய லஞ்சம், ஊழல் போன்றவற்றாலும்,இப் பிரச் சினைக்கான தீர்வைக் காண்பதற்கு பற்பல சிக்கல்களை எதிர் கொள்ள நேரிடும். நீண்ட காலமும் தேவைப் படும் .ஆயினும் இதற்குத் தீர்வு காணவேண்டியது கட்டாயமான தொன்றாகும். இப்பிரச்சினையை இனிமேலும் வேடிக்கை பேச்சுக்க ளாலோ ,நடிப்புக்களாலோ அல்லது இந்நாட்டின் குடிமக்களை முருங்கை மரத்தில் ஏற்றி விடுவது போன்ற செயற்பாடுகளாலோ தீர்த்து விட இயலாது. அந்தக் கால மெல்லாம் தற்போது மலையேறி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகவாழ்வை நோக்கி -2012-

சுகவாழ்வை நோக்கி 2012

## 8 ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணத்தில் ஓர் பிரமாண்டமான மருத்துவக் கண்காட்சி

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கண்காட்சிகளைப் பொறுத்தவரையில் மருத்துவ பீடத்தினால் நடத்தப்படுகின்ற கண்காட்சிகள் மக்களிடம் தனியான ஓர் அபிமானத்தை வென்றவையாக இருப்பது வழமை. அந்த வகையில், கடந்த 2004 ஆம் ஆண்டு மிகச் சிறந்த ஒரு மருத்துவக் கண்காட்சியை யாழ்.மருத்துவ பீடமும் மருத்துவ மாணவர்களும் இணைந்து நடத்தியிருந்தனர். வடமாகாணம் மட்டுமின்றி, ஏனைய பிரதேசங்களிலிருந்தும், தென் பகுதியிலிருந்தும் குவிந்த பார்வையாளர்களின் வசதி கருதி, மேற்படி கண்காட்சி நீடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. வெறுமனே காட்சிப்படுத்தலுடன் நின்று விடாது, தாம் சொல்ல வந்த செய்தி சமூகத்தின் எல்லாத் தளங்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏற்பாட்டாளர்கள் செயற்படுவதனால், பார்வையாளர்களுக்கு சுகாதாரம் தொடர்பான மிகச்சிறந்த விழிப் புணர்வு ஏற்படுவதுடன் ஒட்டு மொத்த சமூகத்தின் சுகாதாரம் சார்ந்த அபிவிருத்திக்கும் இது வழிசமைக்கிறது.

கடந்த 8 வருடங்களாக மருத்துவ பீடம் கண்காட்சிகள் எவற்றையும் ஏற்பாடு செய்யவில்லை என்ற குறையை நிறைவு செய்யும் வகையில் யாழ்.மருத்துவபீடமானது; எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை பிரமாண்டமான ஓர் மருத்துவக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருக்கிறது. ''சுக வாழ்வை நோக்கி-2012'' எனும் தொனிப் பொருளில் வடிவமைக்கப்பட்டு வருகின்ற இந்தக் கண்காட்சியில் மனித உடலின் பல்வேறு தொகுதிகளும் தனித்தனிக் காட்சிக்கூடங்களாக அமைக்கப்பட்டு, அந்தந்தத் தொகுதிகளின் தொழிற்பாடு மற்றும் நோய்கள் விரிவாக விளக்கப்படவுள்ளன. இதில் குருதிச்சுற்றோட்டத் தொகுதி, என்பு மற்றும் தசைத் தொகுதி, அகஞ்சுரக்கும் தொகுதி, சிறுநீர்த் தொகுதி, உணவுக் கால்வாய்த் தொகுதி, நரம்புத் தொகுதியும் உளவியலும், சுவாசத் தொகுதி, இனப்பெருக்கத் தொகுதி ஆகிய தொகுதிகள் அடங்குகின்றன. அத்துடன் விசேட காட்சிக் கூடங்களாக குழந்தை மருத்துவம், பெண் நோயியலும் மகப்பேறும், சட்ட மருத்துவம், புற்று நோயியல் மற்றும் மாதிரிக் கிராமம் போன்றவை அமையவுள்ளன. இதுதவிர, ஒட்டுண்ணியியல், நுண்ணங்கி உயிரியல் போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் பொதுவாக காணப்படும் தொற்றும் நோய்கள் மற்றும் நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் பற்றியும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. வருமுன் காத்தலே சிறந்தது என்பதை வலியுறுத்தும் வகையில் நோய்களைத் தவிர்த்தல் தொடர்பான பூரண விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. மிகப் பெரிய, பிரமாண்டமான உருவ வடிவமைப்புக்கள், சித்திரங்கள், வீடியோக் காட்சிகள், விளக்கப்படங்கள், விவரணச் சித்திரங்கள் போன்ற பல்வேறு உத்திகளைக் கொண்டதாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பல லட்சம் ரூபா செலவில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற இந்தக் கண்காட்சியானது யாழ்ப்பாணத்தின் தற்போதைய சுகாதார நிலைமைகளில் காணப்படும் குறைகளை நிறைவாக்கும் காலத்தின் தேவை கருதிய ஒன்றாகும். பாடசாலை மாணவர்கள், வளர்ந்தோர், முதியோர் என்று அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான, பயனுள்ள விடயங்களை உள்ளடக்கியிருப்பது இந்தக் கண்காட்சியின் சிறப்பம்சமாகும். அத்துடன் பல்வேறு புதுமையான ஆச்சரியமூட்டும் விடயங்களும், உத்திகளும் கையாளப்படவுள்ளன. இந்தக் கண்காட்சிக்குரிய பொருள்களையும் வடிவமைப்புகளையும் உருவாக்கும் பணியில் தற்போது மருத்துவ மாணவர்கள் இரவு, பகல் பாராது கடுமையாக உழைத்து வருகின்றனர். இதற்காகத் துறைசார் மருத்துவ நிபுணர்கள், மருத்துவபீட பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு வேலைகள் முழுமூச்சில் நடைபெற்று வருகின்றன. எமது சமூகத்தில் சுகாதாரம் சார் விழிப்புணர்வையும் அறிவையும் மேம்படுத்தும் நோக்கில் அமைந்த இந்தக் கண்காட்சி யாழ்.மருத்துவபீடம் மற்றும் சுகாதாரத் துறையின் வரலாற்றில் தனி முத்திரை பதிக்கும் என்பதில் ஐயமில்லை!

■ பி.எஸ்.ஜனார்த்தன்

ஊடக அனுசரணை: உதயன்



■ இறை

# வன்னியில் கல்வி அழிந்து போகிறதா?

போர் முடிவடைந்து 3 ஆண்டுகள் பூர்த்தியடைந்த நிலையில் இறப்பிற்கு பிந்திய பரிசோதனை ஒன்று வடமாகாண சபை கல்வி அமைச்சில் நடந்தேறியுள்ளது. இதில் உயிர்போன நிலையில் வடமாகாணத்தின் கல்வி பற்றிய ஆராய்ச்சி புதிய செயலாளருக்கு தலையிடிதான், பாவம், அவர்தான் என்ன செய்ய முடியும் என்று சொல்லிக் கொள்வோம்.

கடைசி போர் நடைபெற்று முடிந்த ஆண்டுவரை கல்வியில் தன் தரத்தை இழக்காத வடமாகாணம், குறிப்பாக வன்னிப்பிரதேசம் போர் முடிவடைந்து வடக்கின் வசந்தம் வீசுகின்ற இந்தக் காலப்பகுதியில் கல்வியில் வீழ்ச்சி நிலையைக் கண்டுள்ளது.

இதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. அதாவது அரச திணைக்கள அதிகாரிகளின் அதீத செல்வாக்கும், தலையீடும், அரசியல் மற்றும் ஆளுநரின் யாழ்ப்பாணம் என்றால் வடமாகாணம், வடமாகாணம் என்றால் யாழ்ப்பாணம் என்ற மாயையும் தான் காரணங்கள்.

குறிப்பாக வடமாகாணம் ஐந்து மாவட்டங்களைக் கொண்டது என்பதையும் இதில் 12 கல்வி வலயங்கள் உள்ளன என்பதையும் அனைத்து உயர் அதிகாரிகளும் மறந்து போவது தான் வேதனைக்குரியது.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில், புதிய செயலாளர் உட்பட எல்லா அதிகாரிகளும் கலந்து கொண்டனர். ஆனால் அந்தக் கூட்டத்தின் முடிவில் எடுக்கப்பட்ட முடிவுகளும், தீர்மானங்களும் வேதனையளிப்பதாகவுள்ளன.

குறிப்பாக இந்தக் கூட்டத்தில் கல்வி நிர்வாகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரியொருவர் கூறிய கருத்து வேதனைக்குரியதாக உள்ளது. அதாவது ''முல்லைத்தீவு வலயத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் தட்டுப்பாடு உள்ளது.

எனினும், இங்குள்ள மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று கல்வியைக் கற்கலாம், பின்னர் அவர்கள் இங்கு வந்து மற்றவர்களுக்கு கற்பிக்கலாம் இதனால் தட்டுப்பாடு நீங்கும் என்று கூறினார்.

இவரின் கருத்து வரவேற்கத் தக்கது எனினும் இந்த மாணவர்களின் கல்விக்கான செலவு என்பது தான்கேள்விக் குறியாகவுள்ளது. இது வடலி வளர்த்து கள்ளுக் குடிக்கும் நிலை. இது எப்போது சாத்தியப்படப் போகின்றது.

வடமாகாணத்தில் யாழ்.கல்வி வலயத்தில் 75 பேரும், வடமராட்சியில் 54 பேரும், தென்மராட்சியில் 19 பேரும், தீவகத்தில் 04 பேரும், வவுனியா தெற்கில் 06 பேரும் என கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர்.

ஆசிரியர் பரவலாக்கம் என்பது எப்போது ஏற்படுகின்றதோ, அன்று தான் வடமாகாணத்திற்கு விமோசனம். இதைச் செய்யாமல் சம்பளத்தை நிறுத்தியும் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

மற்றும் புதிதாக இடமாற்றம், நியமனம் பெற்று வன்னிக்கு வருகின்ற ஆசிரியர்களுக்கு, வன்னி மனித வாழ்க்கைக்கு ஏற்ற இடம் இல்லை என்ற கருத்தே விதைக்கப்படுகின்றது. இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களின் வால்கள், அமைச்சர்கள், அவர்களின் இணைப்பாளர்கள், பெரிய இடத்திலுள்ள அரச திணைக்கள அதிகாரிகள் போன்றோரின் செல்வாக்கால் படலைக்குள் பள்ளிக் கூடம் எடுத்து விடுகின்றார்கள்.

நியமனக் கடிதம், இடமாற்றக் கடிதம் என்பன மட்டுமே வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு வருகின்றது எனினும், ஆள் வாராது. சில நாள்களின் பின்னர், இடமாற்றத்தை வேறாக்கல் என்ற தலைப்பில் கடிதம் வரும். நியமனம் கிடைத்த கையோடு எப்படித்தான் இடமாற்றக் கடிதத்தையும் பெறுகின்றார்களோ என்பது தான் வியப்புக்குரிய ஒன்றாக இருக்கின்றது.

மேடைகளில் மட்டும் வன்னி மாணவர்கள் பாவம் என்று முழங்கும் இவர்கள் தமது பேச்சுக்கு செயல் வடிவம் கொடுத்தாலே அரைவாசிப் பிரச்சினை தீர்ந்து விடும்.

மற்றும் வன்னிப்பகுதியில் கல்வி நிலை இவ்வாறு போனதற்கு இராணுவத்தினரும் தான் காரணம். மாணவர்களுக்கு நன்மை செய்கின்றோம், அவர்களை மகிழ்வாக வைத்திருக்கின்றோம் என்று நினைத்துக் கொண்டு மாணவர்களின் கல்வியில் மண்ணை வாரி இறைக்கின்றனர். அதாவது நாளாந்தம் இவர்களினால் பாடசாலைகளில் நடத்தப்படும் நிகழ்வுகள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அத்துடன் மாணவர்களை மூச்சு விட இடைவெளி இல்லாமல் நெருக்கீட்டில் நடத்தப்படும் போட்டிகள் என்பனவும் இந்த நிலைக்குக் காரணமாகும்.

இந்த விடயத்தைத் தீர்வுக்குக் கொண்டுவர சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் இதய சுத்தியுடன் செயற்பட்டாலே சாத்தியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் படைப்பதுதான் சொர்க்கமும் நரகமும்

ஒரு கோயிலில் பெரியவர் ஒருவர் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார். கடவுள், சொர்க்கம், மனிதன் பற்றியெல்லாம் விவரமாகப் பேசினார். எல்லோரும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்திலே ஒரு தத்துவஞானியும் அமர்ந்திருந்தார். அவர் சொற்பொழிவாளருடைய நண்பர். சொற்பொழிவு முடிந்ததும் அந்தப் பெரியவர் நேராகத் தத்துவஞானியிடம் சென்று, ''எப்படி இருந்தது என் பேச்சு?'' என்று வினவினார்.

அதற்குத் தத்துவஞானி, ''நீங்கள் பேசியது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தது'' என்றார்.

''என்ன முரண்பாடு?'' என்று கேட்டார். ''கடவுளை நம்புபவன் சொர்க்கத்துக்குச் செல்வான் என்று முதலில் நீங்கள் கூறினீர்கள். பின்னர் நல்லவனாக வாழ்பவன் சொர்க்கத்துக்குப் போவான் என்று கூறினீர்கள்.''

''ஆமாம், அதில் என்ன முரண்பாடு?'' என்றார் பெரியவர். தத்துவஞானி அமைதியாக, ''இந்த உலகத்தில் ஒருவன் எல்லாத் தப்பும் செய்து கொண்டே, கடவுளை நம்பினான் என்றால் அவன் சொர்க்கத்துக்குப் போவானா?அல்லது மற்றொருவன் ஒரு தவறும் செய்யாமல் ஒழுங்காக வாழ்ந்து, இறைவனை நம்பாமல் இருக்கிறானென்றால் அவன் நரகத்துக்குப் போய்விடுவானா? ''கடவுள் நம்பிக்கையே இல்லாத ஒரு நல்லவன் என்ன ஆவான்? எங்கே போவான்? இந்த உலகில் கடவுள் நம்பிக்கையோடு வாழ்வது முக்கியமா?'' அல்லது நல்லவனாக வாழ்வது முக்கியமா?'' என்று கேட்டார்.

இதையெல்லாம் கேட்டதும் அந்தப் பெரியவர் குழம்பிப் போய்விட்டார்.

தத்துவஞானி சொன்னதும் நியாயம் தானே. கடவுளை நம்புகிறவன் சொர்க்கத்துக்குப் போவான் என்றால் பேசாமல் கடவுளை நம்பிக்கொண்டு, இந்த உலகத்தில் எல்லா விதமான தப்புகளும் செய்து கொண்டே இருந்து விடலாமா? பேச்சாளர் குழப்பத்துடனேயே வீட்டக்குச் சென்று தூங்கிவிட்டார்.

அவருக்கு ஒரு கனவு வந்தது. கனவில் அவர் ஒரு ரயிலில் போய்க்கொண்டிருந்தார். எதிரில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்து, ''நாம் இப்போது எங்கே போகிறோம்?'' என்றார்.

''சொர்க்கத்துக்குப் போகிறோம்'' என்றார் எதிரில் இருந்தவர். ரயில் ஓரிடத்தில் நின்றது. அந்த இடம்தான் சொர்க்கம் என்று நினைத்து இவர் இறங்கினார். 'அங்கே கௌதம புத்தர் இருப்பார், சோக்கிரடீஸ் இருப்பார். அவர்களைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இது' என்று நினைத்து அவர் சுற்றிலும் பார்த்தார்.

அங்கே யாருமே இல்லை. ஒரே பாலைவனம் போல் தெரிந்தது. பச்சைப் பசுமையாக அங்கே எதுவும் இல்லை. எங்கு பார்த்தாலும் பொட்டல் காடுதான். ஆங்காங்கு எலும்பும் தோலுமாக சிலர் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார்கள்.

இவர் அவர்களிடம் போய், ''புத்தர், சோக்ரடீஸ் இவர்களெல்லோரும் எங்கே இருக்கிறார்கள்?'' என்று ஆவலுடன் வினவினார்.

''அப்படி யாரும் இங்கே இல்லையே.. அவர்களெல்லோரும் யார்?'' என்று அவர்கள் திருப்பி வினவினார்கள். இவருக்கு ஒரே அதிர்ச்சி. 'அவர்கள் வேறு எங்கே போயிருப்பார்கள்?' என்று யோசித்தார். உடனே ரயில் நின்ற இடத்துக்கு வேகமாகத் திரும்பி வந்தார்.

நரகத்துக்கு ஒரு ரயில் அப்போது புறப்பட்டுக் கொண்டிருந்தது. அதில் இவர் ஏறி அமர்ந்தார். ரயில் வேகமாகச் சென்றது. நரகம் நெருங்க நெருங்க காற்று குளிர்ச்சியாக வீசியது. எங்கு பார்த்தாலும் அழகான நீர்நிலைகள், நந்தவனங்கள், மலர்கள், பறவைகள், கூட்டம் கூட்டமாகத் தென்பட்டன.அங்கே இருந்தவர்கள் எல்லோரும் ஆட்டமும் பாட்டமுமாக ஒரே ஆனந்தக் களிப்பில் திளைத்திருந்தார்கள்.

சொர்க்கத்தில் காணாத சிலர், இங்கு நரகத்தில் இருப்பதைக் கண்டார். அதைப் பார்த்ததும் இவருக்கு மேலும் அதிர்ச்சியாக இருந்தது. 'இது என்ன நரகம் தானா?' என்று யோசித்துக் கொண்டே ரயிலை விட்டு இறங்கினார்.

அருகில் இருந்தவர்களிடம் விசாரித்த போது '' இது நரகம் தான்'' என்று அமைதியாகப் பதில் வந்தது. '' அவருக்கு ஒரு சந்தேகம்? புத்தரும் சோக்ரடீஸும் லாவோட்சுவும்-இவர்களைப் போன்ற இன்னும் பலரும் இங்கே எப்படி வந்தார்கள் என்பதுதான் அந்த சந்தேகம்'' என்று தன் குழப்பத்தை அவர்களிடம் கூறினார்.

அதற்கு அங்கிருந்தவர்கள், ''ஐயா, இப்போது இங்கே நீங்கள் பார்க்கும் பசுமையும் பச்சைப் பயிர்களும் ஆடல் பாடல்களும் அழகிய மலர்களும் இவை எல்லாமே புத்தரும் சோக்ரடீஸும் லாவோட்சுவும்-இன்னும் மற்ற மகான்களும் இங்கே வர ஆரம்பித்த பின்னர்தான் உண்டாக ஆரம்பித்தன. இந்தப் பிரதேசத்தையே அவர்கள் மாற்றி விட்டார்கள். இப்போதெல்லாம் இங்கே இருப்பவர்கள் யாரும் சொர்க்கத்துக்குப் போகவே விரும்புவதில்லை'' என்று கூறினார்கள். பெரியவருக்கு மீண்டும் அதிர்ச்சி. அந்த அதிர்ச்சியிலேயே அவரது கனவு கலைந்தது.



இந்தக் கதையின் முக்கிய கருத்து என்வென்றால், நல்லவர்கள் எங்கே இருக்கிறார்கள்களோ, அந்த இடம் சாதாரணமான இடமாக இருந்தாலும், ஏன் நரகமாக இருந்தால் கூட, அதுவே சொர்க்கமாக மாறி விடுகிறது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நுண்கலை வகுப்புகளை நடத்தும் ஞானசம்பந்தர் கலை மன்றம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)




கலை மன்றச் சுற்றாடலில் வசிப்போர் கல்வியில் மாத்திரமன்றி நுண்கலைகளில் பட்டமும் பாண்டித்தியமும் பெற்றிருந்ததால் தமது வருங்கால சமூகமும் இத்தகைய அறிவையும், ஆற்றலையும் பெற்று ஒழுக்க சீலர்களாகவும், நற்பிரஜைகளாகவும் வாழ வேண்டும் என விரும்பியிருந்ததுடன் அவ்வாறான சமூகம் ஒன்றை எதிர்காலத்தில் கலை மன்றம் மூலம் உருவாக்க வேண்டும் என விரும்பினார்கள்.

சமூகத்தின் விருப்பத்துடன் மன்றத்தின் விருப்பமும் ஒன்றாக இருந்தமையினால் மன்றத்தினால் நுண்கலை வகுப்புகளை ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இருந்தது. இதற்கமைய 1970 ஆம் ஆண்டில் மன்றத்தில் நுண்கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்றுவருகின்றன. நுண்கலை வகுப்புகளில் சங்கீதம், வீணை, மிருதங்கம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் வட இலங்கை சங்கீதசபைப் பரீட்சையில் சித்தியடைந்த சங்கீத ஆசிரியை செல்வி கு.சூரியகுமாரி முதலாவது ஆசிரியராகப் பதவி ஏற்று கற்பித்து வந்தார். ஆரம்பத்தில் ஓர் ஆசிரியருடன் 30 மாணவர்கள் நுண்கலைகளைப் பயின்றார்கள். தற்போது 95 மாணவர்கள் நுண்கலை பிரிவில் சங்கீதம், நடனம், வீணை, மிருதங்கம் ஆகிய துறைகளில் கற்று வருகின்றனர். இங்கு நுண்கலை பயிலும் மாணவர்கள் வருடந்தோறும் நடைபெற்று வரும் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து சான்றிதழ்களைப் பெற்று வருகின்றார்கள். அத்துடன் பாடசாலை மாணவர்களே இந்த நுண்கலைகளைக் கலை மன்றத்தில் பயில்வதால் பாடசாலைகளில் அழகியல் பாடங்களில் இந்த மாணவர்கள் முன்னணி நிலையில் இருப்பதை எக்காலத்திலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த மன்றத்தில் நுண்கலைகளைப் பயின்ற மாணவர்கள் மன்ற கலை நிகழ்வுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்துவதுடன், அத்துறைகளில் உயர் நிலையிலும் உள்ளனர்.

> 1970 ஆம் ஆண்டில் மன்றத்தில் நுண்கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றன. நுண்கலை வகுப்புகளில் சங்கீதம், வீணை, மிருதங்கம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

கடந்த 1990 ஆம் ஆண்டு இந்த மன்றம் நடத்திய கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அப்போதைய யாழ்.பல்லைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ.துரைராசா மன்ற விருந்தினர் குறிப்பேட்டில் எழுதியுள்ள குறிப்பில் ''ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் கலை விழாவில் பங்கு பற்றுவதில் நான் பெருமைப்படுகின்றேன். இந்த மன்றம் எமது மக்களின் கலை, கலாசாரம் இசை முதலியவற்றை முன்னேற்றுவதுடன் நின்றுவிடாமல் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கும் பாடுபட்டு வருகிறது. மேலும் இந்தப் பகுதிப் பெண்கள் இதன் வளர்ச்சிக்கு முன்நின்று பாடுபடுவது மிகவும் மெச்சத்தக்கது. இது தொடர்ந்து வளரும் என்று வாழ்த்த விரும்புகின்றேன். இது எமது மற்றைய கிராமமக்களுக்கும் முன்னோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கின்றேன்'' என்று தெரிவித்துள்ளார்.

மன்றத்தினால் 42 ஆண்டுகளாக மாணவர்களுக்கு நுண்கலை வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதுடன் ஓகன் இசைப் பயிற்சி வகுப்பும் கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு சனி,ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த வகுப்பில் பயிற்சி அளிப்பதற்கென மன்றத்தினால் இரு ஓகன் வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு அவ் வாத்திய கருவிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இவ் வகுப்பு ஆரம்ப

கர்ணன்

முதல் தலா 25 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சியை ஓர் ஆசிரியர் மட்டுமே அளித்து வருகின்றார்.

ஓகன் இசைத் துறையில் மிகுந்த ஆர்வம் உள்ள மாணவர்கள் பயின்று வருவதால், அம்மாணவர்களே தமக்குத் தேவையான ஓகன் வாத்தியக் கருவிகளைச் சொந்தமாக வைத்துள்ளார்கள். மன்றத்தினால் பயிற்சி வழங்கப்பட்டு வரும் ஓகன் பயிற்சி வகுப்புக்களில் மேற்கத்தைய வாத்தியக் கருவியாக ஓகன் இருந்த போதிலும், மேற்கத்தைய, துள்ளல், பொப்பாடல்களைப் பயிற்சியின் போது பயன்படுத்துவதில்லை. ஆனால் திருமுறைகள், பக்திப்பாடல்கள் மற்றும் தமிழ் இசைப்பாடல்களே பயிற்சிக்குப் பயன்படுத்தப்பட்டு வருவது இப்பயிற்சியில் விசேட அம்சமாகும்.

ஓகன் வாத்தியத்தை இசைக்கப் பயிற்சி பெற்ற மாணவர்களின் ஓகன் வாத்திய இசைக் கச்சேரி மன்றத்தின் ஆண்டு விழாவிலும் ஏனைய கலை நிகழ்வுகளிலும் சைவத் தமிழ்ப் பாடல்களை இசையாக வழங்கி பார்வையாளர்களின் அதீத பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. பாலர் பாடசாலையுடன் சிறார்களின் ஆரம்பக் கல்வி மேம்பாடு கருதி பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 1 தொடக்கம் 4 வரையான மாணவர்களுக்கென பிரத்தியோகமாக வகுப்புக்களும் மன்றத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன. 1970 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் இந்தப் பிரத்தியோக வகுப்பில் வருடந்தோறும் 30 மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஆரம்பத்தில் செல்வி கு.சூரியகுமாரியும் தொடர்ந்து சு.சூரியகலா, திருமதி சி.தாரணி ஆகியோரும் இப்பிரத்தியேக வகுப்பில் கற்பித்தனர். தற்போது திருமதி தாரணி இப்பிரத்தியேக வகுப்பை முன்னெடுத்துச் செல்கின்றார்.

இதேபோல் தரம் 3 தொடக்கம் 5 வரையான பாடசாலை மாணவர்களுக்கு வாரத்தில் மூன்று தினங்கள் ஆங்கில பாடம் போதிக்கப்பட்டு வருகிறது. கடந்த பத்து வருடங்களாகத் தொடர்ந்து வரும் ஆங்கில வகுப்பில் வருடந்தோறும் 25 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் இந்த வகுப்பை நடத்திவருகின்றனர்.

ஞானசம்பந்தர் கலை மன்றம் நடத்தி வரும் பாலர் பாடசாலை பிரத்தியோக வகுப்பு, ஆங்கில வகுப்பு, நுண்கலைகளான மிருதங்கம், வீணை, சங்கீதம், நடனம் ஆகிய வகுப்புகள் ஓகன் வகுப்பு, தையல் வகுப்பு ஆகியவற்றில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களும், நூலகப் பொறுப்பாளருமாக ஆண்கள் பெண்கள் உட்பட 14 பேர் பணியாற்றி வருகின்றார்கள். வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும், தகுதி பெற்றவர்களே பணியாற்றி வருகிறார்கள். மாணவர்களின் பெற்றோரின் உதவியுடன் இவர்களுக்கு மாதந்தோறும் வேதனம் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் இவர்களின் அர்ப்பணிப்பான பணியையிட்டு கலைமன்றம் பெருமிதமடைகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலை அதிபர்களை கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலில் கல்முனை வலய பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் அதிபர்கள் நியமனம் குறித்தும் ஆராயப்பட்டன.

# சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

### மட்டு. மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

எருவில், மே 10

மட்டக்களப்பு, கிரான் செயலகப் பிரிவிலுள்ள ஊத்துச்சேனை மற்றும் வடமுனை ஆகிய பிரதேசங்களில் வீசிய மினிச் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் தெரிவித்தார்.

இந்தச் சூறாவளியால் 46 வீடுகள் முழுமையாகவும் 149 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலைய மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜா தெரிவித்தார்.

197 குடும்பங்களைச் சேர்ந்த 772பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் குறித்த பிரதேசங்களுக்கு சென்று மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சூறாவளியால் 46 வீடுகள் முழுமையாகவும் I49 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத் துவ நிலைய மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜா தெரிவித்தார்.

இந்த மதிப்பீட்டறிக்கை மாவட்ட அரச அதிபர் ஊடாக உரிய அமைச்சருக்கு அனுப்பப்படும்.

சூறாவளி வீசியதையடுத்து அந்தப் பிரதேச மக்கள் தமது குடியிருப்புக்களை விட்டு இடம் பெயர்ந்து ஊத்துச்சேனை பாடசாலைக் கட்டடத்தில் தங்கியிருந்து தற்போது மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

# படகு கவிழ்ந்து ஒருவர் சாவு

எருவில், மே 10

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முணைத்துறை வாவியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் படகு கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆரையம்பதி, செல்வாநகரை சேர்ந்த அழகரட்ணம் அற்புதராஜா (வயது-28) என்பவரே உயிரிழந்தவராவர்.

சடலத்தை மீட்கும் பணியில் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

எருவில், மே 10

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஓட்டமாவடி கல்வி கோட்டத்திலுள்ள காவத்தமுனை அல் - அமீன் வித்தியாலய மாணவர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கோரியே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக பாடசாலை அதிபர் எம்.யூ.எம்.நசீர் தெரிவித்தார்.



இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் அலியார் மீராசாகிப் தெரிவித்ததாவது:-

இந்தப் பாடசாலைக்கு 35 ஆசிரியர்கள் தேவைப்பட்ட போதிலும் 22 ஆசிரியர்களே தற்போதுள்ளனர். கடந்த மூன்றரை வருடங்களில் ஏழு ஆசிரியர்கள் இந்தப் பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எனினும் அதற்கு மாற்றீடாக எந்தவொரு ஆசிரியரும் நியமிக்கப்படவில்லை.

இந்தப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதால் மாணவர்கள் கல்வி கற்பதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு பல தடவைகள் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்வி பணிப்பாளர் ஆகியோருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனாலேயே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்- என்றார்.

இதேவேளை நேற்று புதன்கிழமையும் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பாடசாலை நேற்று புதன்கிழமை திறக்கப்பட்ட போதிலும் மாணவர்கள் சமூகமளிக்கவில்லை.

மாணவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து காவத்தமுனை பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

# கரடியனாறு பிரதேசத்தில் நீர் விநியோகத் திட்டம்

எருவில், மே 10

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியனாறு பிரதேசத்துக்கான நீர்வழங்கல் திட்டம் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2064 பயனாளிகள் பயனடையும் வகையில் 68 மில்லியன் ரூபா செலவில் கரடியனாறு கிராமத்தில் இந்த நீர் விநியோகத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண நீர் வழங்கல் திட்டத்தின் 2008 ஆம் ஆண்டின் சாத்தியவள ஆய்வின் மூலம் 28 உப திட்டங்களை மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்வதற்கு இனங் காணப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 9 பிரதான நீர்வழங்கல் திட்டமும் ஒரு குழாய்க் கிணறு அமைக்கும் திட்டமும் உள்வாங்கப்பட்டுள்ளன. குழாய்க்கிணறு அமைக்கும் திட்டத்தில் 6 குழாய்க் கிணறுகள் அமைக்கும் வேலையும் உள்வாங்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் பின் தங்கிய பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வசதியை வழங்குவதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-31)

# மாணவர்கள் தொடர்ந்தும் வகுப்பு பகிஷ்கரிப்பில்

கோரிக்கைகள் உரிய தரப்பினருக்கு அறிக்கப்பட்ட நிலையில் இது வரை தமது கோரிக்கை குறித்து எதுவித உத்தரவா தங்களும் தரப்படவில்லை.

எருவில், மே 10

கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நுண்கலை பீடத்தின் மாணவர்கள் தொடர்ந்து வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது கோரிக்கைகளுக்கு உறுதியான பதில் வழங்கப்படும் வரைக்கும் தாம் வகுப்புக்களை தொடர்ந்து பகிஷ்கரிக்கப் போவதாக கிழக்கு பல் கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நுண்கலை பீடத்தின் மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.சிவகாந்தன் தெரிவித்தார்.

தமது கோரிக்கைகள் உரிய தரப்பினருக்கு அறிக்கப்பட்ட நிலையில் இது வரை தமது கோரிக்கை குறித்து எதுவித உத்தரவாதங்களும் தரப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

தமது கோரிக்கைக்கு உறுதியான தீர்வு கிடைக்கும் வரையில் வகுப்புகளுக்கு செல்வதில்லை என்று மாணவர்கள் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.(ச)

# வைத்தியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்க

### மகிழடித்தீவு மக்கள் கோரிக்கை

பட்டிப்பளை, மே 10

பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தரவேண்டும் என்று அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வைத்தியசாலை பட்டிப்பளை பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 7ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வைத்திய சேவையை வழங்கக்கூடிய வைத்தியசாலையாக இருந்தும் வைத்தியர் பற்றாக்குறை நிலவுகிறது. இங்கு ஒருவர் மட்டுமே சேவையாற்றிவருகின்றார். இதனால் நோயாளர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் உட்படப் பலர் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்த வைத்திய சாலை பட்டிப் பளை பிரதேசத் தைச் சேர்ந்த சுமார் 7ஆயிரம் குடும் பங்களுக்கு மேல் வைத்திய சேவையை வழங் கக் கூடிய வைத் தியசாலையாக இருந்தும் வைத் தியர் பற்றாக்குறை நிலவுகிறது.

குறிப்பாக, இந்த வைத்தியசாலையில் குறைந்தபட்சம் நான்கு வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில், ஒருவர் மட்டும் கடமையாற்றி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக வைத்தியர்களை நியமித்துத் தரவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (ச)

# மீனவர் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை

### குற்றம்சாட்டும் தீர்மானம் நிறைவேறியது

அம்பாறை, மே 10

மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அம்பாறை மாவட்ட கடற்றொழில் திணைக்களம் முன்வருவதில்லை என்ற குற்றச்சாட்டும் தென்பகுதியைச் சேர்ந்த வலைத் திருடர்களை பிணையில் செல்வதற்கு உதவிய கல்முனை மாவட்ட சட்டத்தரணிகளுக்கு எதிராக கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப்படகுச் சங்கத்தின் ஏற்பாட்டில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் சாய்ந்தமருது இளைஞர் சேவைகள் மன்ற கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே குறித்த குற்றச்சாட்டும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மீனவர்கள் தெரிவித்ததாவது:-

எரிபொருள் விலையேற்றம் காரணமாக அரசால் வழங்கப்படும் எரிபொருள் மானிய முத்திரையினை வழங்குவதில் அம்பாறை மாவட்ட கடற்றொழில் திணைக்களம் இறுக்கமான நடைமுறைகளை பின்பற்றுவதுடன் மீனவர்களின் நலன்களில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் பல மீனவர்கள் எரிபொருள் மானியத்தை இழக்கும் நிலையேற்பட்டுள்ளது.

எரிபொருள் மானியம் வழங்கப்படும் ஏனைய தென் பகுதி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் மிக இலகுவான முறையில் தங்களது மானியங்களை பெற்றுக்கொள்கின்றனர். மீனவ சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கல்வி அறிவு குறைந்தவர்கள் அதனைக் கருத்திற் கொண்டு திணைக்கள அதிகாரிகள் செயற்பட வேண்டும் .

பல வருடங்களாக எமது பிரதேசத்தில் படகுகளின் வலைகள் திருடப்பட்டு வந்துள்ளன. திருடப்பட்ட வலைகள் இன்றுவரை கண்டுபிடிக்கப்பட்ட வரலாறுகள் இல்லை. ஆனால் அண்மையில் எமது பிரதேச படகு ஒன்றிலிருந்து திருடப்பட்ட வலைகள் மாத்தறைப் பிரதேசத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதுடன் இந்தத் திருட்டுடன் தொடர்புடைய நால்வரை கல்முனை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

அவர்களை பிணையில் செல்லவிடக்கூடாது என்பதற்காக பல முயற்சிகளை எடுத்தோம். ஆனால் எமது கல்முனை மாவட்ட சட்டத்தரணிகள் சிலர் அவர்களை பணத்துக்காக பிணையில் செல்வதற்கு உதவியுள்ளனர் - என்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** உங்களின் வேலைப் பளுகளுக்கு இடையே தவிர்க்க முடியாமல், சிலரின் பணிகளையும் எடுத்து செய்ய வேண்டியிருக் கும். நண்பர் ஒருவர், பண உதவிக்காக உங்களை நாடி வருவார். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குழந்தைகள் வகையில், மனதை வாட்டிய சஞ்சலங்கள் அகன்று, சந்தோஷம் பிறக்கும்.

**இடபம்:** அயலில் உள்ளவர்களால் சில சிக்கல்கள் ஏற்படும். அதனை நிதானத்துடனும், சாதுரியத்துடனும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இல்லறத்துணையின் கருத்துக்களை, பெண்தானே என்று அலட்சியப்படுத்தாதீர்கள். பணம் சம்பந்தமாக, சில ஏற்பாடுகள் மேற்கொள்வீர்கள். பயணங்களை முன்கூட்டியே, திட்டமிட்டுக் கொள்ளுங்கள்

**மிதுனம்:** நீண்டநாள் இழுபறியாக இருந்த விவகாரம் ஒன்று, முடிவுக்கு வரும். அதிக அலைச்சல் என்று நினைத்த விடயங்களை, அலைபேசி மூலம் எளிதாக முடித்துக் கொள்வீர்கள். உற்றார் உறவினர்கள் வருகையால், வீட்டில் குதூகலம் ஏற்படும். மாலைக்கு மேல், பொழுதுபோக்கு விடயங்களில் மனம் நாட்டம் கொள்ளும்.

**கடகம்:** பல்வேறான சிந்தனைகள் மனதில் தோன்றியபோதும், பணிகளில் நிலவும் பளு காரணமாக, எதனையும் செயல் வடிவம் கொடுக்க முடியாமல் போகும். உடல் நிலையில் ஆரோக்கியம் கூடும். பொன், பொருள் சேர்வதற்கும் வாய்ப்பு உண்டு. அவசர முடிவுகளால், அவதிகள் நேரலாம். வியாபாரத்தில் விழிப்புடன் செயல்படுதல் அவசியம்.

**சிங்கம்:** உடல்நிலையைப் பொருள்படுத்தாது செயற்பட வேண்டியிருக்கும். பழைய கடன் மிகுதிகளால், சிறு தொல்லைகளைச் சந்திக்கலாம். வீடு தொடர்பான விடயங்களை, விரைந்து முடிவுக்குக் கொண்டு வர, சில முயற்சிகள் மேற்கொள்வீர்கள். முக்கியஸ்தர்கள் சந்திப்புகள் ஏற்படும். பயனுள்ளதாக்கிக் கொள்வீர்கள்.

**கன்னி:** நீங்கள் மேற்கொள்ளும் பணிகளை திட்டமிட்டுச் செயற்படுதல், வெற்றிக்கு வழி வகுக்கும். தொழில் சம்பந்தப்பட்ட, விவகாரங்களைக் கையாளும்போது, விருப்பு வெறுப்பற்று செயற்படுங்கள். நண்பர்கள் மத்தியில் பேசும்போது, சில வார்த்தைகள் வேறுவிதமான கருத்தை ஏற்படுத்தி விடலாம், கவனம்.

## நாளை

சித்திரை 29 வெள்ளிக்கிழமை 11.05.2012
திதி: ஷஷ்டி மு.இ 09.57 வரை
நட்சத்திரம்: உத்தராடம் சித்தம் மு.இ 11.12 வரை
சுபநேரம்: 10.24-11.54 வரை
ராகு காலம்: 05.54- 07.24 வரை

**துலாம்:** வழக்கமான பணிகளைக் கூட சிரமத்துக்குப் பின் செய்து முடிக்க வேண்டியிருக்கும். ஒரு காரியத்திற்காக, எடுத்து வைக்கப்பட்ட பணம், மற்றொரு காரியத்துக்காகப் பயன்படுத்த வேண்டியிருக்கும். பெற்றோருக்காக மருத்துவச் செலவுகள் இருக்கும். உறவினர் ஒருவரின் பேச்சு குடும்பத்தில் அதிருப்தியை ஏற்படுத்தும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியம் ஒன்று ஏமாற்றத்தைத் தரலாம். சில விடயங்களில் வீண் பழிகளுக்கு ஆளாகலாம். புதிய பணிகள் சம்பந்தமாக, எடுத்த முயற்சிகளில் இடையூறு ஏற்பட்டபோதும், வெற்றி காண்பீர்கள். குடும்பப் பிரச்சினைகள் சுமூகமான தீர்விற்கு வரும்.

**தனுசு:** எந்த ஒரு விவகாரங்களிலும், தங்களின் உள்ள கருத்துக்களை, மறைமுகமாக வைத்துக் கொள்ளுதல் எல்லா வகைக்கும் நல்லது. எதிர்பார்த்த கடனுதவிகள், எளிதில் கிட்டும். விரும்பிய பொருட்கள் வாங்குவீர்கள். உறவினர் நிகழ்ச்சி ஒன்றிற்காக அலைச்சல் இருக்கும். அலுவலக ரீதியான தகவல் ஒன்று மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** இன்று, சில காரியங்களில் தாங்கள் பின்பற்றிய வித்தியாசமான அணுகுமுறைகள், எதிர்பார்த்த வெற்றியைத் தரும். இல்லறத் துணையின் பேச்சுக்கள், அதிகம் யோசிக்க வைத்தபோதும், தாங்கள் கோபத்தை வெளிகாட்ட முடியாத சூழ்நிலையே நிலவும். அலுவலகப் பணிகளில், வேலைப் பளு கூடும்.

**கும்பம்:** ஒரே மூச்சில் எல்லா காரியங்களையும் செய்துவிட திட்டமிடுவீர்கள். ஆனால், ஒவ்வொன்றாகவே செய்ய முடியும். மனதில் பொறுமையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்காக, பிறரை அணுகும்போது தெளிவான நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். வீடு, வாகன வகையில் செலவுகள் ஏற்படும்.

**மீனம்:** தேவையற்ற வேலைகள் அதிகம் இருக்கும். மேலும், தாங்களாக வலியச் சென்று சிலரிடம் பேசி, அதனால் சில சிரமங்களை எதிர்கொள்ளலாம். உடல்நிலையில் ஏற்படும் சிறு அசௌகரியங்களுக்கு, பெரியதாக கவலைப்பட்டுக் கொள்வீர்கள். வியாபாரத்தில், எதிர்பாராத விதமாக போட்டிகள் அதிகமாகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 8 | 6 | | | 1 | | |
| | | 3 | 1 | | 9 | | 6 | |
| 4 | 1 | | 5 | 8 | | 7 | | 9 |
| | | 2 | | | 6 | | 7 | 1 |
| | | | | | | | | |
| 8 | 9 | | 2 | | | 4 | | |
| 7 | | 1 | | 6 | 4 | | 9 | 8 |
| | 3 | | 7 | | 8 | 6 | | |
| | | 4 | | | 5 | 3 | 2 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 3 | 1 | 6 | 8 | 5 | 7 | 2 |
| 2 | 6 | 1 | 4 | 7 | 5 | 3 | 8 | 9 |
| 8 | 5 | 7 | 3 | 2 | 9 | 4 | 6 | 1 |
| 6 | 1 | 2 | 5 | 9 | 3 | 7 | 4 | 8 |
| 3 | 7 | 4 | 8 | 1 | 6 | 2 | 9 | 5 |
| 5 | 9 | 8 | 2 | 4 | 7 | 6 | 1 | 3 |
| 4 | 3 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 | 7 |
| 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 8 | 3 | 6 |
| 7 | 8 | 5 | 6 | 3 | 1 | 9 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே : 021 2226944
நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி தொ.பே : 077 6225944
கட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை தொ.பே : 077 8996085

## கே.வி.சபா இஞ்சினியறிங்

கட்டட வேலைகள் யாவும்
அனுபவம் மிக்க வாஸ்மார் உதவி
ஆள்களுடன் சிறந்த முறையில்
குறிப்பிட்ட திகதிகளில் கட்டித்
தரப்படும்.
தொடர்புகளுக்கு:-
0774473752, 0778801126


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
25★ 05★ 1978

விண்ணில்
22★ 04★ 2011

அமரர் கனகலிங்கம்
இலக்குணதேவி (ஆசிரியை)

உயிரோடு வாழ்ந்தபோது
என்னை நேசித்தவர்களே - நான்
விடைபெற்றுச் சென்றாலும்
உங்கள் மனங்களில்
மறக்கப்படாமல் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பேன்....

10.05.2012 இன்று (வியாழக்கிழமை) நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

வினை மத்தி, புன்னாலைக்கட்டுவன்.
[?].P. 0775167437,0771308822

- குடும்பத்தினர்.

(17809) (2-6-9)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்திய நாடுகளுடன் இரகசிய உடன்படிக்கைகள்

## அரசைச் சாடுகிறார் சோமவன்ச அமரசிங்க

கொழும்பு, மே 10

அரசு இந்தியா, அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய நாடுகளுடன் இரகசியமான உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் நாட்டுக்குள் தேசப்பற்றை காட்டி மக்களை ஏமாற்றுகின்றது என்று ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கா செல்லும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அங்கு கொண்டு செல்லும் இரகசிய செயல்திட்டத்தை நாட்டுக்குள் பகிரங்கப்படுத்த வேண்டும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மாட்டோம். இந்தியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ, ஏகாதிபத்தியவாதிகளுக்கோ அடிபணிய மாட்டோம் என்று கூறி மக்களை அரசு ஏமாற்றுகின்றது.



**நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மாட்டோம். ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிபணிய மாட்டோம் என்று கூறி மக்களை அரசு ஏமாற்றுகின்றது.**

தேசாபிமானம் எல்லாம் உள்நாட்டிற்குள் தான் இருக்கின்றது. ஆனால், அமெரிக்காவின் அதட்டலுக்கு அடங்கிப் போயுள்ள அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பில் செயல் திட்ட வரைபை தயாரித்து, இதனை அமைச்சர் பீரிஸ் ஊடாக இரகசியமாக அனுப்பிவைக்கவுள்ளது.

இந்த இரகசிய செயல் திட்டம் என்ன? இதன் பின்னணியில் உள்ளவை என்ன என்பதை நாட்டு மக்களுக்கு அரசு பகிரங்கப்படுத்த வேண்டும்.

உள்நாட்டில் ஏகாதிபத்தியவாதிகளை எதிர்க்கும் தேசப்பற்று நாடகத்தை அரங்கேற்றும் அரசு மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும். ஆனால், அரசு அவ்வாறு செய்வதில்லை. ஏகாதிபத்திய நாடுகளுடன் அரசு இரகசிய உடன்படிக்கைகளை செய்து கொண்டுள்ளது. அந்த நாடுகளுக்குத் தேவையான விதத்திலேயே முதலாளித்துவ பொருளாதாரத்தை அரசு முன்னெடுக்கின்றது. - என்றார். (ச)

## 24 பாடசாலைகளில் கணினிகள் திருட்டு

கொழும்பு, மே10

இரத்தினபுரி, கொலொன்ன கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் கணினிகள் திருடப்பட்டுள்ளன.

தமது கல்வி வலயத்திலுள்ள 24 பாடசாலைகளின் கணினிகள் மற்றும் கணினிப் பாகங்கள் திருடப்பட்டுள்ளன என்று கொலொன்ன வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில், கொலொன்ன, எம்பிலிப்பிட்டி மற்றும் பனாமுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு தகவல் தொழிநுட்பத்தை கற்பிப்பதில் சிக்கல்நிலை தோன்றியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹணவிடம் கேட்ட போது குறித்த பொலிஸ் நிலையங்களில் இதுதொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ச)

## தென்னைகளை வீழ்த்தி மதிலை உடைத்த மக்கள்

### பொலிஸார் விசாரணை



கொழும்பு, மே 10

நீர்கொழும்பு, குடாப்பாடு பிரதேச தேவாலயத்துக்கு பின்னால் உள்ள கடற்கரையோரப் பகுதியில் உள்ள தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தியுள்ள பிரதேசவாசிகள், அந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த சுற்றுமதிலையும் உடைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து, அவ்விடத்துக்கு விரைந்த நீர்கொழும்பு பொலிஸார் மரங்களை வெட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட இயந்திரமொன்றைக் கைப்பற்றியதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மக்கள் தெரிவித்ததாவது:-

கடலோரப் பகுதியில் சட்டவிரோத செயல்களை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்போவதில்லை. எமது பிள்ளைகள் விளையாடுவதற்கு வசதியாகவே மரங்களை வெட்டியுள்ளோம். சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட சுற்றுமதில் காரணமாக கடல் பகுதிக்கு செல்வதற்கு இடைஞ்சல் ஏற்பட்டதன் காரணமாக சுற்றுமதிலையும் உடைத்துள்ளோம்- என்றனர். (ச)

## அமெரிக்கா செல்லும் குழுவில் இருந்து நாமல் நீக்கம்

கொழும்பு, மே 10

அமெரிக்கா செல்லவுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனைச் சந்திப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான குழுவொன்று வொசிங்டன் செல்லவுள்ளது.

இந்தக் குழுவில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன ஆகியோருடன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது இந்தக் குழுவில் நாமல் ராஜபக்ஷ இடம்பெறமாட்டார் என்று தகவல் கிடைத்துள்ளது என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## நீர்கொழும்பு மாநகரசபை உறுப்பினருக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, மே 10

நீர்கொழும்பு மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் கபில நந்தன சுலோச்சனவுக்கு தொலைபேசி மூலம் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதை அடுத்து அவரது வீட்டிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட நபரொருவர் மாநகரசபை உறுப்பினரை கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்னவிடம் தான் தெரிவித்ததை அடுத்து நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தற்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக கபிலநந்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

5 தடவைகள் மாநகர சபை தேர்தலில் போட்டியிட்டு, நான்கு தடவைகள் மாநகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். 2011ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டதன் பின்னரே எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

**மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் எனது நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்கிறார் அவர்.**

கடந்த ஜனவரி மாதம் இது போன்று தொலைபேசி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதன் பின்னர் ஜனவரி 31ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்களினால் கத்திக் குத்துக்கு இலக்காகி மயிரிழையில் உயிர் தப்பினேன்.

அன்று என் கழுத்தை இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதத்தினால் வெட்ட முற்பட்ட போது நான் கைகளினால் தடுத்ததனால் கைகளில் வெட்டுக் காயங்களோடு தப்பித்தேன்.

தற்போது மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் எனது நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நான் வீட்டிற்குள்ளேயே முடங்கியிருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது- என்றார். (ச)

## தாக்கப்பட்ட மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, மே10

மொனராகலை - எல்ல பிரதேசத்தில் கிதலவத்தை தமிழ் வித்தியாலயத்துக்கு அண்மையில் கல்லால் தாக்கப்பட்டு காயமடைந்த பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் கடந்த 4 ஆம் திகதி பெண் ஒருவரால் கல்லால் தாக்கப்பட்டு பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்தநிலையில் மாணவன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு பதுளை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

எல்ல, கிதலவத்தை தோட்டத்தைச் சேர்ந்த சிவகுமார் மனோஜ் (வயது-6) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார். (ச)

## பொருள்களின் விலை உயர்வால் மலையக மக்கள் திண்டாட்டம்

### மேலதிகக் கொடுப்பனவு வழங்கக் கோருகிறார் வேலாயுதம்

கொழும்பு, மே 10

அத்தியாவசியப் பொருள்களின் விலையை அரசு தொடர்ந்து அதிகரிப்பதால் மலையக மக்கள் வாழ்வதற்கு வழியின்றி திண்டாடுகின்றனர். எனவே, அவர்களுக்கு மேலதிக கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் கே.வேலாயுதம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொருள்களின் விலையேற்றம் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தோட்ட மக்களின் அவலங்களை மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுசெல்ல வேண்டும்.

அரசு பொருள்களின் விலைகளை தொடர்ச்சியாக அதிகரிப்பதால் நாட்டு மக்கள் பல இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது.

அரசு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு பணிந்து நாட்டின் பொருளாதாரத்தை இயக்குவதாலேயே நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்தை நோக்கி பயணிக்கின்றது.

மலையக மக்களின் பிரதான உணவான கோதுமை மாவின் விலையை அரசு அபரிமிதமான முறையில் அதிகரித்து தோட்ட மக்களின் வயிற்றிலடிக்கும் செயலை மிகவும் இலாவகமாக அரங்கேற்றியுள்ளது.

காஸ் விலை அதிகரித்தமை மலையக மக்களுக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால், கோதுமை மா, பால்மா ஆகியவற்றின் விலை அதிகரிப்பு மலையக மக்களை வாட்டி வதைக்கின்றது.

தொடர்ச்சியாக பொருள்களின் விலைகளை உயர்த்தி மக்கள் வாழ்வதற்கு திண்டாட வேண்டியதொரு நிலையை அரசு உருவாக்கிக்கொடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ காலத்தில் மலையக மக்களுக்கு வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாக சம்பள உயர்வு வழங்கப்பட்டது. ஆனால், தற்போதைய அரசோ மலையக மக்களின் வாழ்வாதாரம் குறித்து எதுவித அக்கறைக் காட்டுவதாகவும் தெரியவில்லை.

மலையக மக்களின் அவலங்களைப் போக்குவதற்கு அரசு அவர்களுக்கு மேலதிக கொடுப்பனவொன்றை வழங்க வேண்டும். அதனையே மக்களும் கோரிநிற்கின்றனர்.

மலையகத்தை நாம் அபிவிருத்தி செய்கின்றோம் என்ற போர்வையில் அங்கு மிங்கும் வீதிகளை நிர்மாணிக்கின்றனர். இவர்கள் வீதிகளை நிர்மாணித்தாலும், அது ஓரிரண்டு நாள்களில் உடைந்து சேதமாவதை அவதானிக்கக் கூடியதாகவேயுள்ளது. இது தான் அரசின் அபிவிருத்தி.- என்றார். (ச)



பொலன்னறுவை மாவட்டத்துக்குட்பட்ட மன்னம்பிட்டிய, இங்கி[illegible]யாகல மற்றும் தம்[illegible] ஆகிய பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் வீசிய சூ[illegible] மன்னம்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள தொலைத்தொ[illegible] இரண்[illegible] முறிந்து விழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் கனவு SEA COLLEGE இல் நனவாகிறது

விண்ணப்பங்கள் இப்போது கோரப்படுகின்றன



எமது கல்லூரி பணிப்பாளர் 12 முதல் 13 வரை யாழ் நகரில் இருப்பார்.
களநிலை அனுமதிக்காக அவரை சந்திக்கலாம்.

எங்கள் பிரதிநிதியுடன் தொடர்பு கொள்வதற்கு
071 2827473
No. 409/12, Senanayake Mw, Pitakotte, Sri Lanka.
E-mail : seacollegesrilanka@gmail.com


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

### திருமதி விஜயகுமார் (சின்னத்தம்பி) – கீதா (சுகுணா)

நெஞ்சம் மகிழ:-25.03.1983 நெஞ்சம் நெகிழ:-14.05.2009

திதி:- அபரபட்சத்து பஞ்சமி





எம் குலத்தின் மூத்த முத்தே எம் செல்வமே
வீட்டுக்கு விளக்கேற்றி வைத்த எம் குலவிளக்கே
மணமாலை வாடு முன்னம் மாங்கல்யம் பொட்டுடனே
கைபிடித்த மணாளனையும் பெற்றெடுத்த அருமை மைந்தனையும்
தவிக்க விட்டு விட்டு எங்கம்மா சென்றாய்.......
போர் முடிவதற்கு இன்னும் நான்கு நாள்கள் இருக்கும் வேளைதனில்
காலனவன் உனைக் குறிவைத்தானோ
குண்டுபட்டு நீ துடிதுடித்து கதறி அழுத சத்தம்
இன்னும் எம் காதில் ஒலிக்குதம்மா
ஷெல் மழைக்குள்ளும் உன் உயிரைக் காப்பாற்ற
கெஞ்சினாய் வைத்தியரை - முடிந்தது சத்திரசிகிச்சையும்
மயக்கம் தெளிந்து எழும்புவாய் எனப் பார்த்திருந்த
விழிகளுக்கோ ஏமாற்றம்
நீயோ மீளாத்துயிலில் நாங்களோ ஆறாத்துயரில்
கடல் கடந்து வாழ்ந்த உன் அன்புக் கணவரோ
உனது நிலையறிந்து பதைபதைத்து துடிதுடித்து
இச்செய்தி பொய்யாகிடாதோ என்று
ஓடோடி இங்கு வந்து உன் நிலையை நேரிலே கேட்டறிந்து
நிலைகுலைந்து நிற்கிறாரே உன் நினைவுகளைச் சுமந்தபடி
என்ன செய்வேன் மகளே! எங்கள் சுகுணாவே
எல்லோரையும் கவரும் உன் கனிவான பேச்சும்
உன் சுறு சுறுப்பும் உன் விறுவிறுப்பும்
உன் நீண்ட கருங்குழல் அசைந்தாட நீ நடக்கும் அன்ன நடையும்
நிழலாடும் நிஜங்களாக எம் மனதில் நிற்க
எப்படியம்மா மறப்போம் உனை.

ஆயிரம் உறவு இருந்தும் சுற்றவர், அயலவர் கூட இருந்தும்
கொஞ்சும் மழலையைக் கூடிக் குலாவி அரவணைத்து
அன்புகாட்டி பாசத்துடனே வளர்த்தாலும்
பத்து மாசம் சுமந்து பெற்ற தாயின்
அரவணைப்புக்குத்தான் ஈடாகிடுமா?
எம் மகளே உன் கூந்தலைப் பஞ்சணையாகத்
தொட்டுத் தூங்கும் உன் செல்வமகனின்
பரிதவிப்பைப் பார்க்கமுடியவில்லையம்மா..
யார் யாரைத்தான் தேற்றுவது
மாண்டவர் மீண்டு மண்ணில் பிறப்பதில்லையே
இது இயற்கையின் நியதி
அப்படி ஒரு பிறவி இருந்தால் மீண்டும்
எனக்கு மகளாகப் பிறந்திடம்மா...
நீ பிரிந்து இன்றுடன்
மூன்றாண்டு ஆனதுவோ....
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (10.05.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உன் நினைவுடன்:
குடும்பத்தினர்.

ச.பரஞ்சோதி,
4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. (16822) (2-6-9)

## நீரிழிவு விழிப்புணர்வு

தென்மராட்சிமேல் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை நீரிழிவு நோயைக் கட்டுப் படுத்தும் துண் டுப் பிரசுரங் களை விநியோகித்து விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வரு கின்றது.

வெளிநோயாளர் பிரிவு, விடுதிகள், கிளினிக் போன்ற இடங்களுக்கு வரு வோருக்கு 'கால் களைப் பாது காப் போம்' என்னும் தொனிப்பொரு ளில் துண்டுப் பிர சுரங்களை விநி யோகித்து வருகின் றனர்.

(ம-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 ★ 04 ★ 1924 | 10 ★ 04 ★ 2012 |



### திருமதி கந்தையா பொன்னம்மா

பத்து மாதம் சுமந்து பெற்று
பாரினிலே எமை வாழவைக்க
அன்னையாய் தந்தையாய்
அல்லும் பகலும் உழைத்து வழிகாட்டி
நல்ல பண்புதனை எமக்கு ஊட்டி
உம் உதிரம் தந்து நின்றீர்
சிறப்புடனே எமை வாழவைக்க
என்றென்றும் உமை உருக்கி
வாழ்வு தந்த உங்கள் அன்பை
என்றென்றும் மறவோம் அம்மா!
தங்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

உசன்,
மிருசுவில். (17797) (45.6.7)

குடும்பத்தினர்


### கொழும்பில் தொடர் மாடி வீடு தேவை

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தையில் நல்ல சூழலில் இருக்கும் தொடர் மாடி வீடு விலைக்குத் தேவை.

தொடர்பு கொள்ளவும்:
075 0407783

### சாரதிகள் தேவை

I. O/L கணிதத்துடன் சித்தி.
II. A.D லைசென்ஸ் 5 வருட அனுபவம்
III. வயது 35 இற்கு மேல்
உறவினரல்லாத இருவரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
செல்வா சாரதி பயிற்சிப் பாடசாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி.


## மரண அறிவித்தல்



### பிள்ளையினார் அப்புத்துரை

(தேவி சேவிஸ் ஸ்ரேசன் உரிமையாளர் - வசாவிளான்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், 1K, சாள்ஸ்லேன் தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட பிள்ளையினார் அப்புத்துரை (07.05.2012) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிள்ளையினார்-அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-தையல்நாயகி தம்பதியரின் மருமகனும், லோகநாயகியின் அன்புக் கணவரும், குமுதினி (கனடா), முகுந்தன் (கட்டார்), வாகினி (கொழும்பு), மாதினி (நோர்வே), ஜனனி (ஜேர்மனி), துஸ்யந்தன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, ஆச்சிமுத்து, குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருள்மொழி (கனடா), நந்தினி (கட்டார்), அன்பழகன் (நோர்வே), பஞ்சநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், சரண்யன் (நோர்வே), சுருதி (கனடா), அர்ச்சனா (ஜேர்மனி), பூஜிதா (நோர்வே), அபிசன் (ஜேர்மனி), மாதுளா (கட்டார்), அபிரான் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.05.2012) வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 5.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




முதல்3 மாவட்டங்களிலும் வழமைக்கு மாறாக காற்று வீசும். முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்வதைத் தடுக்க நடவடிக்கை

பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு சட்டவிரோதமாக இத்தாலிக்கு தொழில் வாய்ப்புக்காகச் செல்வதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் எத்தனை பணியாளர்கள் இத்தாலியில் இருக்கின்றனர் என தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் டிலான் பெரேரா, சட்டவிரோதமாக இத்தாலிக்குச் சென்றவர்கள் தொடர்பாகத் தகவல்களைச் சமர்ப்பிப்பது கடினம் என சுட்டிக் காட்டினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இத்தாலி அரசுக்கும் இலங்கைக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி இலங் கையில் இருந்து இத்தாலிக்குத் தொழிலாளர்களை அனுப்புவது தொடர்பில் முறைமையொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக இத்தாலியில் இருந்து இரு அதிகாரிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இத்தாலியில், சட்டவிரோதமாகச் சென்றவர்களே அதிகமாக உள்ளனர். சட்ட பூர்வமாகச் சென்றவர்களுக்கு அந்த நாட்டில் சகல சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

அத்தகையவர்களுக்கு ஒய்வூதியம் வழங்குவதற்கான முறையொன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அங்கு சுமார் 70 ஆயிரம் முதல் 80 ஆயிரம் இலங்கையர் இருக்கலாம் என்று இத்தாலி அரசு எமக்கு அறிவித்துள்ளது.

உயிரைப் பணயம் வைத்து சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்வதற்குப் பதிலாகச் சட்ட பூர்வமாக அனுப்பவே இரு நாடுகளுக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. எத்தனை ஊழியர்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு வழங்குவது என்பது குறித்து ஒப்பந்த அடிப்படையில் தயாரிக்கப்படும் முறைமையின் பின்னரே முடிவாகும் -என்றார். (ந)

# நாம் உலகில் செயலாற்றிவரும் விதம்

நாம் அழுக்காடை அணிந்து தூய்மையற்றிருக்கும் போது யாராவது தெரிந்தவர்கள் வந்துவிட்டால் உடனே வெட்கப்படுகிறோம். உடலும், உடையும் அழுக்காக இருப்பதற்காக வெட்கப்படுகிறோம். ஆனால் உண்மையில் உங்கள் நெருங்கிய நண்பரான இறைவன் உள்ளத்திலிருக்கும்போது உள்ளத்தைக் களங்கம் நிறைந்து அழுக்கடைந்ததாக வைத்திருப்பதில் வெட்கமடைவதில்லை என் பது வருந்தத்தக்கதல்லவா? கடவுளின் மகிமை தெரிந்திருந்தும் உங்கள் மனதில் தீய எண்ணங்களை வளர்ப்பது வெட்கப்படவேண்டிய செய்கையல்லவா? இந்த உண்மையைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் நீங்கள் கட்டாயமாகத் தூய்மையடைந்து விடுவீர்கள். உலகப் பொருள்களின் அனுபவங்கள் யாவும் தற்காலிகமானவையே. நொடிப் பொழுதில் அழியக் கூடியவை. மாறக்கூடியவை. ஆகவே தெய்வீகத்தை (ஆத்மாவை) நாடவேண்டும். குண மூலம் இந்த உலகில் நல்ல செயல் களைச் செய்வதற்கு நற்குணமே இன்றியமையாத தேவை. நற்குணமற்றோருக்கு இறைவனின் இராச்சியத்தில் இடமில்லை.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை




வில்லூன்றி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டப் பூசையைத் தொடர்ந்து 8.30 மணிக்கு சுவாமி தேரில் வீதியுலா இடம்பெறும். மறுநாள் காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ)

* * *

நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயக் கொடியேற்றம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-50).

# பாதுகாப்பற்ற ரயில் கடவைகளால் விபத்துக்கள் அதிகரிப்பு

## ரயில்வே திணைக்களம் தகவல்

நாடு முழுவதிலும் உள்ள ரயில் கடவைகளில் 800 கடவைகள் பாதுகாப்பற்றுக் காணப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட ரயில்வே பொது முகாமையாளர் பீ.ஏ.பி. ஆரியரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் இடம்பெறும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.கடந்த சில தினங்களுக்குள் நான்கு ரயில் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. கொழும்பிலிருந்து மாத்தறை வரையிலான ரயில் மார்க்கத்தில் சுமார் 160 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் உள்ளன. இவ்வாறான பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் இடம் பெறும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாற்று வழிகளைக் கண்டறியவுள்ளோம் என்றுஅவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கரையோர ரயில் மார்க்கத்திலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்குப் பாதுகாப்பு வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ந)


# மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தின் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தமது நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் மேல்நீதிமன்ற ஆணையாளர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 28.05.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக சீலிடப்பட்ட உறையில் வைத்து கையளித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பருத்தித்துறை நீதிமன்ற வளாக சுத்திகரிப்புப் பணிக்கான கேள்விப் பத்திரம் என தவறாது குறிப்பிடுதல் வேண்டும். ஏனைய நிபந்தனைகள் பின்வருமாறு

★ சுத்திகரிப்பு பணிக்காக ஒரு மேற்பார்வையாளர் உட்பட மொத்தம் 07 பேர் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். இதில் 03 பேர் பெண்களாக இருத்தல் வேண்டும்.

★ 7.30 மணியிலிருந்து 3.30 மணிவரை பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

★ சுத்திகரிப்புக்குரிய உபகரணங்கள் ஏனைய மூலப்பொருள்கள் யாவும் தங்களால் விநியோகிக்கப்படல் வேண்டும்.

★ ஞாயிறு, பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்கள் கடமை நாள்களாகக் கருதப்படும்.

இது தொடர்பாக மேலதிக விவரங்கள் தேவைப்படின் மேல் நீதிமன்றப் பதிவாளருடன் அல்லது சம்பந்தப்பட்ட நீதிமன்றப் பதிவாளர்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஜே.விஸ்வநாதன்,
தவிசாளர்,
மேல் நீதிமன்ற கேள்விச்சபை,
மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(C/1507) (6,9,10)



## தவறிவிட்டது

ஞானவைரவர் கோயிலடி, உரும்பிராய் கிழக்கு உரும்பிராய் எனும் முகவரியுடைய செல்வரத்தினம் வைரவநாதன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (581133898V) மற்றும் மோட்டார் சைக்கிள் சம்பந்தமான சகல ஆவணங்களும், இலங்கை வங்கிப் புத்தகம் என்பன அடங்கிய பை புன்னாலைக் கட்டுவனுக்கும் உரும்பிராய்க்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: 0774579099, 021 321 8322

## வேலை வாய்ப்பு

காப்புறுதித்துறையில் விற்பனை முகவராக இணைந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
(கூடிய வருமானம் பெற போதியளவு பயிற்சிகள் வழங்கப்படும்)
தகைமைகள்: Commerce / Arts - 3 Pass
Bio / Maths - 2 Pass
விண்ணப்பங்களை 14-05. 2012 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.
C/o, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வி.இல. 4356

## இசைத் துறையினருக்கான

- Sound Studies
- Music Composing and Production
- Audio Editing

செயல்முறை பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.
Singlair Digital Media
48/1, Stanley Road, Jaffna.
077 716 2090

(17824) (45.6.7)

## வயறிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும்



உங்கள் வீடுகளில் வயறிங், பைப்லைன் மற்றும் பெயின்ரிங் வேலைகள் குறைவான செலவிலும் குறுகிய காலத்திற்குள் பாதுகாப்பான முறையில் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : 077 8048143, 075 6731564


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் : 29.05.1932

ஆண்டவன் அடியில் : 10. 04. 2012

அமரர் ஞானசேகரம் சரஸ்வதிப்பிள்ளை

எங்கள் குடும்பத்தின் பேரொளியாய் விளங்கிய அன்புத் தெய்வம் எங்களை அன்போடும் பண்போடும் அரவணைத்து நல்வழி காட்டி பாரபுகழ் வாழவைத்த குடும்பத்தலைவி கண்மூடி எமைவிட்டு பிரிந்து மாதம் ஒன்று சென்றாலும் ஆறாத்துயரில் தவிக்கின்றோம்

நிரந்தர முகவரி: புலோப்பளை, பளை
தற்காலிகமுகவரி: புலோலிதெற்கு; புலோலி
தொ.பே.இல. 077 7111688

உம் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியுமாம்
## என்றும் பெருமை

மனிதனுடைய குணங்களில் நனி சிறந்து விளங்குவது பணிவுடைமை ஆகும். உணவை உண்ணுவதற்கு ஏற்ப உணவை ஆக்குவதற்கு உப்பு இன்றியமையாதது போல மனித வாழ்வில் பணிவு இன்றியமையாதது. ஒருவனிடம் பட்டம்,பதவி, பணம், என்பன இருந்தும் அவனிடம் பணிவு இல்லையெனில் அவை பயனற்றுப் போய்விடும்

பணிவாக நடந்து கொள்வதற்கு நல்ல முதிர்ச்சி வேண்டும். பண்பில் முதிர்ந்தவர்களுக்கே பணிவு இயற்கையாக வருகிறது.

*'' பணியுமாம் என்றும் பெருமை சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து''* என்றார்

வள்ளுவர். பணிவாக நடந்து கொள்கின்றபோது மற்றவர்களுடைய மதிப்பில் நாம் அதிகம் உயர்ந்து விடுகிறோம்.

குறை குடங்களே கூத்தாடுகின்றன. தன்னைப் பெரியவனாகக் காட்டிக்கொள்ள முயற்சிப்பது பலவீனத்தின் அடையாளம். தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடு. பணிவின் வலிமை எல்லையற்றது. அடக்கமுடையவர் அறிவிலார் என்று எண்ணி கடக்க கருதுவது அறியாமைத் தனம். தோற்றுப் பணிவதை விட வெற்றியில் பணிவது மேலானது என்று கூறுவார்கள். பணிவாக நடந்து கொள்வது பலவீனமல்ல; அது பலத்தின் அடையாளம்.உங்களின் பணிவே மற்றவர்களிடம் விஷேடமான மரியாதையினை உங்களுக்குப் பெற்றுத் தரும் .


''அரம் போலும் கூர்மையுடையரேனும்
மரம் போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர் ''

எவ்வளவு கூர்மையான அறிவுடையவராக இருந்தாலும் மற்றையோரிடம் பணிவாக நடக்கவில்லையாயின் ஓரறிவுடைய மரத்திற்கு சமனாவர்.

காடுகளில் அடர்ந்து கிளைகளைப் பரப்பி இருக்கும் மரங்கள் எல்லாம் நல்ல மரங்கள் என்று கூறமுடியாது. அறிஞர் வீற்றிருக்கும் சபையிலே பண்பாக குறிப்பறிந்து நடக்கத் தெரியாதவனே நல்ல மரம் என்றார் ஔவையார்.

எனவே மானிடப்பிறவி எடுத்து நாங்கள் பிறரிடம் பணிவாக நடந்து வெற்றிகள் பலவற்றைப் பெறுவோம்

**போ.சித்திரா, மானிப்பாய்.**



# பெண்களின் கல்வித்தரம் வளர்ச்சியடைந்தமைக்கான காரணம் என்ன?

*பெண்களுக்கு பெற்றோரால் வழங்கும் சுதந்திரமும் ஒப்பீட்டளவில் குறைவு. அத்துடன் அவர்கள் அதிகமாக பெற்றோரால் கண்காணிக்கப்படுகிறார்கள். இதனால் பெண்கள் குடும்பப் பொறுப்புணர்ச்சி உடையவர்களாகவும் பெற்றோரைக் கவலைப்பட வைக்காது இலட்சியத்தை அவர்களின் நிலை அறிந்து கற்கிறார்கள்.*



பெண்களது கல்வித் தரத்தின் முன்னேற்றத்திற்கு சான்றாக அண்மையில் வெளியான ஜி.சி.ஈ (சா/த) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் காணப்படுகிறன.

ஒரு சில ஆண்கள் தவிர்ந்த பெரும்பாலன ஆண்கள் தமது எதிர்கால வாழ்க்கையைப் பற்றி சற்றே சிந்திக்காது, தாம் நிகழ் காலத்தில் வசதியுடன் பெற்றோரின் தயவுடன் வாழ்கின்றோமே அவ்வாறே வாழ்க்கையின் இறுதி மட்டும் வாழ முடியும் என்கின்ற அசாத்திய நம்பிக்கையுடன் காணப்படுகிறார்கள். இதற்கு உரமூட்டுவது போன்று பெற்றோர் அதிக சுதந்திரத்தை ஆண் பிள்ளைகளுக்கு வழங்குவதுடன் கண்டிப்பையும் குறைக்கிறார்கள். முறையான வழிகாட்டல் இன்மையால் கல்வியின் அருமை பற்றி அறியாது இளமைப் பருவத்தில் ஏற்படும் பல்வேறு ஆசைகளினால் தூண்டப்பட்டு வாழ்வில் தடம் மாறிச் செல்கின்றனர். திசைமாறிச் செல்வதன் விளைவாக ஆண்கள் தமது கல்வி இலக்கில் இருந்து விலகி அவர்களின் கல்வித்தரம் குறைவடைந்து செல்லும் நிலை ஏற்படுகிறது.

ஆனால் பெண்கள் அவ்வாறு இல்லை. அவர்களுக்கு பெற்றோரால் வழங்கும் சுதந்திரமும் ஒப்பீட்டளவில் குறைவு. அத்துடன் அவர்கள் அதிகமாக பெற்றோரால் கண்காணிக்கப்படுகிறார்கள். இதனால் பெண்கள் குடும்பப் பொறுப்புணர்ச்சி உடையவர்களாகவும் பெற்றோரைக் கவலைப்பட வைக்காது அவர்களின் நிலை அறிந்து கற்கிறார்கள். மேலும் தமது இலட்சியத்தை அடைய வேண்டும் என்பதற்காகவும் தாம் முன்னேற வேண்டும் என்பதற்காகவும் மிகுந்த ஊக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் கல்வியைக் கற்கின்றனர். இதனாலேயே பரீட்சைப் பெறுபேறுகளில் பெண்களின் கல்வித் தர முன்னேற்றம் வெளிக்காட்டப்படுகிறது.

இனிவரும் காலங்களிலாவது ஆண்களும் தம் நிலை உணர்ந்து இளம் பருவ ஆசைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது நிலையான கல்வியைப் பெறுவதில் முன்னின்று உழைப்பதுடன் தமது கல்வித் தரத்தைப் பெண்களின் கல்வித் தரத்திற்கு சரிசமமாகக் கொண்டு வர முயற்சிக்க வேண்டும். இதற்கு பெற்றோரின் பங்களிப்பும் ஊக்குவிப்பும் அவசியமாகும்.

**ந.நிருஷாந்தி , யாழ்ப்பாணம்**

**முச்சங்கம் பயின்று மும்முடி கொண்டு**
**மும்முரசு அறையட்டும்**
**பாரதப் புகழினை எடுத்தியம்ப தலைநிமிர்ந்து**
**கவி தொடுத்தவன் பாரதியடா**
**எட்டாப் புகழ்பூத்த எட்டைய புரத்திலே**
**ஏற்றும் சின்னச்சாமி ஐயருக்கும்**
**பெண்குல திலகம் இலக்குமி அம்மாளுக்கும்**
**வந்துதித்தான் பாரதியடா**
**விடுதலை விடுதலை விடுதலை**
**என்ற சுதந்திரக் கவியை பாரதி மூலம் கேட்ட தமிழகம்**
**பாட்டுக்கொரு புலவன் பாரதி என்று**
**போற்றித் துதித்தது**
**தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை**
**தமிழ் கவிஞன் பாரதியும் சாகவில்லை- என்றும்**
**உள செந்தமிழ் பா மணக்கும் வாசனையில்**
**ஏற்றமிகு அக்கவிஞன் வாழ்வான்**
**வாழ்ந்து கொண்டே இருப்பான்.**





கருணாகரன் கஸ்தூரி,
சாவகச்சேரி.

# வெற்றி

**ஒவ்வொரு**
**சிறகசைவிலும்**
**வலியிருக்கும் .......**
**இலக்கின்**
**தொலைவு**
**நீண்ட தூரம் இருப்பினும் ...!**
**இலக்கிற்காக**
**வலியிருப்பினும்**
**தொலைவு சுருங்கி.........**
**வெற்றியின் அருகில்**
**செல்லலாம்**
**மிகவும் விரைவில்........!**

**சா.ஜிந்துஜா, கோண்டாவில்**



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர் :-........................................

முகவரி :- ........................................

........................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**இளவல்கள் வட்டம்**

## விமர்சனம்

*அண்மையில் வெளியான ஜி.சி.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி ஆண்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்தமைக்கும் பெண்களின் கல்வித் தரம் முன்னேறியமைக்குமான காரணம் என்ன? உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.*

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கனிலும் புத்தர் சிலை அகற்ற சட்ட நடவடிக்கை

மன்னார், மே 10

மன்னார் மாவட்டம் முருங்கன் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றக்கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆலயத்தின் தர்மகர்த்தா சபையால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபையின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் இரட்டைக் குளம் கிராம அலுவலர் பிரிவில் முருங்கன் நகர் புகையிரத நிலையத்துக்கு முன்பாக இந்த ஆலயம் அமைந்துள்ளது.

கடந்த 1942 ஆம் ஆண்டு 99 வருட குத்தகை அடிப்படையில் தனியார் காணி ஒன்று இந்த ஆலயத்துக்கு வழங்கப்பட்டது.

கடந்த 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அந்தப் பகுதியிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்தனர். நீண்ட காலத்தின் பின்னர் அந்தப் பகுதியில் மீளக்குடியமர்வதற்கு மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு தொடக்கம் பௌத்த பிக்கு ஒருவர் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் அடாத்தாக தங்கியிருந்து அந்தப் பகுதியைப் பௌத்த புனித பிரதேசமாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் ஆலயத்துக்குரிய 40 பேர்ச் காணியில் இரண்டு இடங்களில் புத்தர் சிலைகளை பிக்கு நிறுவியுள்ளார்.

அவற்றில் ஒன்று ஆலயத்துக்கு மிக அருகில் 4 அடி உயரத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

அத்துடன் 'புராதனமான விகாரை' என்ற பெயர்ப் பலகை ஒன்றும் அங்கு நடப்பட்டுள்ளது. மூலஸ்தானத்தில் அம்மனுக்குப் பூசை வழிபாடுகள் தடைப்பட்ட நிலையில் பௌத்த பிக்கு ஒருவர் ஆலய வளாகத்தில் தங்கி இருந்து புத்தர் சிலைகளை அமைத்து அங்கு பௌத்த விகாரை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார் எனவும் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இந்த வருட ஆரம்பத்தில் புத்தர் சிலை விடயம் தொடர்பாக முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தர்மகர்த்தா சபையால் முறைப்பாடு செய்யப் பட்டது.

முறைப்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கு ஆரம்பத்தில் பொலிஸார் மறுப்புத் தெரிவித்து வந்த போதிலும் பல்வேறு உயர் அதிகாரிகளுடன் தர்மகர்த்தா சபையினர் தொடர்பு கொண்டு அழுத்தங்களைக் கொடுத்த நிலையிலேயே பின்னர் முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகிறது.

அதன் பின்னரும் அங்கு புத்தர் சிலை அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் அங்குள்ள புத்தர் சிலையை அகற்றக் கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தர்மகர்த்தா சபையினர் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகின்றது. (க-3)

## பாசிக்குடா அபிவிருத்திகளை டிசெம்பருக்குள் பூர்த்தி செய்க

### அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கோருகிறார்



மட்டக்களப்பு, மே 10

கிழக்கு மாகாணத்தில் பிரசித்திபெற்ற பாசிக்குடா கடல் பிரதேசத்தின் உல்லாசத்துறையை அபிவிருத்தி செய்யும் அழகுபடுத்தல் செயற்றிட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முடிவிற்குள் பூரணப்படுத்தப்பட வேண்டும் என்று அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன முதலீட்டாளர்களைக் கோரியுள்ளார்.

பாசிக்குடா கடல் பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆராயும் விசேட மாநாடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாசிக்குடா உல்லாச விடுதியில் நடைபெற்றது.

முதலீட்டாளர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பல திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்ட போதிலும் சில திட்டங்கள் முடிவுறாத நிலையிலும் இன்னும் சில பணிகள் ஆரம்பிக்கப்படாத நிலையிலும் இருப்பது தொடர்பாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாசிக்குடா, கடற்கரைப் பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் வண்ணம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

## திருமலையில் காட்டு யானைகள் தொல்லை

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரிவுக்குட்பட்ட சினிபுர, வட்டுக்கச்சி போன்ற பகுதிகளில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

காட்டுயானைகளின் நடமாட்டம் இரவு நேரங்களில் இந்தப் பகுதியில் காணப்படுகிறது. வீட்டுத் தோட்டங்கள், வாழைத் தோட்டம் மற்றும் விவசாயப் பயிர்கள் போன்றவற்றைக் காட்டு யானைகள் அழித்து வருகின்றன.

அண்மையில் சினிபுர பகுதியில் காட்டுயானைகள் ஒருவரின் வீட்டை முற்றாகச் சேதப்படுத்தியதோடு, அங்குள்ளவர்களையும் தாக்க முற்பட்டபோதும் அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

## அடையாள அட்டை இல்லாது 23 ஆயிரம் பேர் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி மாவட்டத்தில் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தேசிய அடையாள அட்டைகள இல்லாத நிலையில் உள்ளதாகப் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டையை வழங்கும் நடமாடும் சேவை ஒன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது.

இங்கு பவ்ரல் அமைப்பின் திட்டப் பணிப்பாளர் ச.சிறிதரன் கருத்துத் தெரிவிக்கும் போது: அடையாள அட்டையை ஒவ்வொருவரும் வைத்திருக்க வேண்டியது சட்டமாகும். அது ஒரு சட்ட ஆவணம். வங்கிக் காசோலைகளை மாற்றுதல், கடன்களைப் பெறுதல், நீதிமன்ற நடவடிக்கைகள், வாக்களித்தல் போன்ற பல்வேறுபட்ட தேவைகளுக்கும் முக்கியமான ஓர் ஆவணம் இதுவாகும். இதனை ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும் எனக் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவுகளின் போது 23 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்களாகக் காணப்பட்டனர்.

இதில் இருபது வீதமானவர்கள் ஏனைய சட்ட ஆவணங்களான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமண அத்தாட்சிப் பத்திரம் போன்றவற்றையும் இழந்தவர்களாகக் காணப்பட்டனர். இதனைக் கருத்தில் கொண்டே இந்த நடமாடும் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்களுக்கு இதனைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டைகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் வகைப்படுத்தப்பட்டு அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் இலங்கை தேசிய ஆள்பதிவுத் திணைக்களம், டனிஸ் அகதிகள் பேரவை என்பனவும் கலந்து கொண்டிருந்தன. இந்த நடமாடும் சேவை மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் பயன் பெற்றுள்ளனர். (க-6)

# வவுனியாவில் புலிகளுக்கு ஆதரவு, எதிர் சுவரொட்டிகள்

வவுனியா, மே 10

போர் முடிவுற்று 3 வருடங்கள் பூர்த்தியடையும் மே 18 ஆம் நாளை நினைவு கூர்ந்து மறைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறு வவுனியா நகரின் பல்வேறு இடங்களிலும் புலிகள் இயக்கத்தினால் உரிமை கோரப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'முள்ளிவாய்க்கால் பேரவலத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்போம்' என தலைப்பிடப்பட்டுள்ள மேற்படி சுவரொட்டிகளில், 18.05.2012 அன்று அனைத்து தமிழீழ மக்களும் உணர்வுபூர்வமாக பொது இடங்கள், கோயில்கள், வீடுகளில் எங்கள் உறவுகளுக்காகவும் மாவீரர்களுக்காகவும் அஞ்சலி செலுத்துவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், எம் தலைவர் சாகவில்லை. நாங்கள் மீண்டும் பொங்கி எழுவோம். புலிகளின் தாகம்... தமிழீழ தாயகம் என்று கையெழுத்தால் எழுதப்பட்ட, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் உரிமை கோரப்பட்ட இந்தச் சுவரொட்டிகள் பல்வேறு இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

இதேவேளை, தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக முன்னிற்கும் இயக்கத்தினால் உரிமை கோரப்பட்ட அரசுக்கு ஆதரவான மேலும் சில சுவரொட்டிகளும் வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

ஒருசில தீய சக்திகள் சிலர் புலிகளையும் அவர்களின் நடவடிக்கைகளையும் மீண்டும் ஞாபகப்படுத்தி துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல், போஸ்டர் ஒட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் செய்து மக்களின் வாழ்க்கையை சீர்குலைக்கும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றனர் என அந்த சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் இரு இளைஞர்கள் நேற்று சடலமாக மீட்கப்பட்டனர்

மட்டக்களப்பு, மே 10

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், இருவேறு சம்பவங்களில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பெரியகல்லாறு 3ஆம் வட்டாரம், குருக்கள் இல்லத்தை சேர்ந்த தெய்வேந்திரன் யாதவாசன் (வயது - 21) என்பவர் தூக்கில் தொங்கிய நிலையில் அவரது வீட்டில் இருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வந்த களுவாஞ்க்சிகுடி பொலிஸார் விசாரணைகளை நடத்தியதோடு சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

இதேவேளை, களுவாஞ்சிக்குடி கண்ணகியம்மன் ஆலய குளக்கட்டுப் பகுதியில் இருந்து மாணவன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

போரதீவைச்சேர்ந்த பு.குவேந்திரராஜா (வயது- 21) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

## மரண அறிவித்தல்

### ஆழ்வார் கணபதிப்பிள்ளை



கதிர்காமகோவிலடி, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆழ்வார் கணபதிப்பிள்ளை நேற்று (09.05.2012) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் - தெய்வானை தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் இராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற வரதலட்சுமி, Dr. இராதாகிருஷ்ணன் (நியூ மெடிக்கல் சென்ரர், நெல்லியடி), கருணாநிதி, ஜெகதாம்பிகை (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆறுமுகம் (கனடா), சபாபதி,Dr.சிறீலதா (அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கொழும்பு), ஞானாம்பிகை, யோகேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், குமரகுருபரன் (கனடா), ஞானகுருபரன் (கனடா), குலேந்திரன், பிரியதர்சினி, நிரோஷினி, கௌரிநிஷா, நித்யா, நிரஞ்சனா, நிரூபா, நிஷாகரன், கோபிகிருஷ்ணா, நிதுஷா, யோகிதா (கனடா), விக்கிரமன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், கனடாவைச் சேர்ந்த துஷாந்தன், நிஷாந்தன், நிலூஜன், சாயினி, அபிசேக் மற்றும் பிரகாசினி, துஷாந்தினி, பிரதாபன், பிரகலாதன், சிறீனா ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கதிர்காமகோவிலடி,*
*வதிரி, கரவெட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பஞ்சலிங்கம்

(இளைப்பாறிய தபால் சேவகர், கொக்குவில் தபால் நிலையம்)



கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பஞ்சலிங்கம் நேற்று (09.05.2012) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வியாளம்மா தம்பதியரின் அன்பு மகனும், பூநகரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பொன்னாம்பிகை தம்பதியரின் மருமகனும், அருள்தேவியின் அன்புக் கணவரும் அன்பு உமாகாந்தன் (கனடா), உமாகாந்தி (ஆசிரியை, ஹற்றன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு, புவனேஸ்வரி, விக்கினேஸ்வரன், தனலட்சுமி, மங்கையற்கரசி, சற்குணதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகச்சந்திரன், யசோதை ஆகியோரின் அன்பு மாமனும், நௌதன், நிதிநிஷா, நிலானி, நிதின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2012) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். ஆரியகுளம், புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தொண்டராசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோப்பாய் பிரதேச செயலகம் மீண்டும் சம்பியன்



இறுதி வரை எந்த அணி வெற்றி பெறும் என்று கணிக்க முடியாத அளவுக்கு இரு அணிகளும் ஒவ்வொரு சுற்றிலும் திறம்பட விளையாடி பார்வையாளர்களுக்கு விருந்தளித்தன

வலி.வடக்கு, மே.10

கோப்பாய் பிரதேச செயலக அணி பலத்த போராட்டத்தின் பின்னர் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சம்பியன் பட்டத்தை மீண்டும் தனதாக்கிக் கொண்டது.

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி புத்தூர் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இடம் பெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணியும் கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் ஆக்ரோஷத்துடன் மோதிக் கொண்டன. இறுதி வரை எந்த அணி வெற்றி பெறும் என்று கணிக்க முடியாத அளவுக்கு இரு அணிகளும் ஒவ்வொரு சுற்றிலும் திறம்பட விளையாடி பார்வையாளர்களுக்கு விருந்தளித்தன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் இரண்டு சுற்றுக்களையும் கோப்பாய் பிரதேச செயலக அணி 30:28, 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் தன்வசமாக்கியது.

எனினும் மூன்றாவது சுற்றில் கரவெட்டி பதிலடி கொடுத்தது. அந்தச் சுற்றை கரவெட்டிப் பிரதேச செயலக அணி 25:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது.

இருந்த போதிலும் நான்காம் சுற்றை மீண்டும் கோப்பாய்பிரதேச செயலக அணி பலத்த போராட்டத்தின் மத்தியில் 25:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்றியது. போட்டி நிறைவில் கோப்பாய் பிரதேச செயலக அணி 3 :1 என்ற அடிப்படையில் கரவெட்டி பிரதேச செயலக அணியை வீழ்த்தி யாழ். மாவட்ட ஆண்கள் கரப்பந்தாட்ட சம்பியனாகத் தெரிவானது. (ங-86)

## முஸ்லிம் ம.வியை உதைபந்தில் வீழ்த்தியது நொச்சிமோட்டை வித்தி.

வவுனியா, மே 10

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த நொச்சி மோட்டை கனிஷ்ட வித்தியாலயம் சம்பியனானது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் வடக்கு வலயத்தை சேர்ந்த நொச்சி மோட்டை கனிஷ்ட வித்தியாலயமும் தெற்கு வலயத்தைச் சேர்ந்த முஸ்லிம் மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

ஆரம்பம் முதல் இறுதி வரை மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதி ஆட்டத்தின் போது இரு அணி வீரர்களும் கோல் போடும் பிரதேசத்தை அண்மித்த போதும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை .

பின்னர் இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. இரு அணியினதும் முன்னணி வீரர்கள் கோல் போடும் பகுதியை மாறி மாறி ஆக்கிரமித்த போதும் அவர்களுடைய முயற்சி கைகூடவில்லை.

போட்டியில் முஸ்லிம் மகாவித்தியாலய அணிக்கு கோல் பெறுவதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அந்த அணியின் முன்னணி வீரர்கள் அவற்றை வீணடித்தனர். இறுதியில் இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. இதனை அடுத்து சமனிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி திர்மானிக்கப் பட்டது. இதில் நொச்சி மோட்டை கனிஷ்ட வித்தியாலயம் 4:3 என்ற அடிப்படையில் முஸ்லிம் மகாவித்தியாலயத்தை வென்று மாவட்டச் சம்பியனாகியது.

இடம் பெற்ற மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், மூன்று முறிப்பு அ.த.பாடசாலையும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தினை தனதாக்கிக் கொண்டது. (த-400)

## ஆவரங்கால் மத்தி, நவஜீவன் அணிகள் இறுதியாட்டத்தில்

வடமராட்சி,மே 10

அல்லாய் கிழக்கு,மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்தில் செற்அப் முறையில் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.

இந்தச் சுற்றுப் போட்டி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 16 விளையாட்டுக் கழகங்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தன.

இரு பிரிவுகளாக நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் முதலாவது பிரிவில் அரையிறுதி ஆட்டத்தில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன இந்தப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றது.

இரண்டாவது பிரிவில் அரையிறுதி ஆட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்ட. இந்தப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இரு பிரிவுகளிலும் அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன. (த-8)

## வென்றது வவுனியா ஈகிள்

யாழ்ப்பாணம், மே 10

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் ஏவ்.ஏ கொல்சிம் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த வாரம் வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா ஈகிள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது

இதில் வவுனியா ஈகிள் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

விளையாட்டுத்துறை செய்தியாளர்கள் தேவை

'உதயனி'ல் விளையாட்டுத்துறைச் செய்தியாளராகப் பணிபுரிய ஆர்வமுடையவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

உங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய மின்னஞ்சல்:
editor@uthayan.com

## ஆயத்தம்... ஆரம்பம்.



வடமாகாண விளையாட்டுத் திணைக்களமும், ''இளைஞர்களுக்கான நாளை'' அமைப்பும் இணைந்து நடத்திய விளையாட்டு நிகழ்வில் இடம்பெற்ற 40 கிலோமீற்றர் தூரம் கொண்ட மரதன் ஓட்டப் போட்டியை வடமாகாண [illegible] த்தியசீலன், வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் [illegible] சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். (ங-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக்கு வாய்ப்பு எப்படி ?

ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் நடப்புச் சம்பியன் சென்னை சூப்பர் கிங்ஸ், முதல் சுற்றுடன் நடையை கட்டும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடர் விதிமுறைப்படி, லீக் சுற்றின் முடிவில் புள்ளிப் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் மட்டுமே 'பிளே-ஓப்' சுற்றுக்கு தகுதி பெற முடியும். தற்போதைய நிலையில் முதல் இரு இடத்தில் உள்ள கொல்கத்தா, டில்லி அணிகள் ஏற்கனவே தகுதி பெற்று விட்டன. மீதமுள்ள இரு இடங்களுக்கு 5 அணிகள் போட்டியிடுகின்றன. புனே, டெக்கான் சார்ஜர்ஸ் அணிகள் வாய்ப்பை இழந்து விட்டன.

சென்னை அணியை பொறுத்தவரை 2010, 2011 இல் சம்பியன் பட்டம் வென்ற கையோடு, ஐந்தாவது தொடரில் அடியெடுத்து வைத்தது. ஒவ்வொரு முறையும் தட்டுத் தடுமாறி அடுத்த சுற்றுக்கு சென்று விடும் சென்னை அணிக்கு, இந்த முறை அதிர்ஷ்டம் அடிக்குமா எனச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், அண்மைக்காலமாக டோனியின் வியூகங்கள் எதுவும், வெற்றிக்கு உதவவில்லை.

முதல் ஆட்டத்தில் மும்பைக்கு எதிராக, கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் வீழ்ந்தது. இதைத் தவிர, புனே, கொல்கத்தா மற்றும் மும்பைக்கு எதிரான ஆட்டங்களில், கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றி கை நழுவியதால், பெரும் சிக்கலில் தவிக்கிறது.

**பலவீனம் அதிகம்**

சரியான தொடக்கம் கிடைக்காதது, பின்வரிசையில் ஆட்டத்தை முடித்து வைக்கும் சகலதுறை வீரர்கள் இல்லாதது, அஷ்வின், பொலஞ்சர் போன்றவர்கள் இலக்குகள் வீழ்த்தத் தடுமாறுவது போன்றவை, சென்னை அணிக்கு தீராத தலைவலியாக அமைய, இதுவரை பங்கேற்ற 12 ஆட்டங்களில் 5 வெற்றியுடன் 11 புள்ளிகள் மட்டும் பெற்றுள்ளது.

இப்போதைய நிலையில் கொல்கத்தா, டில்லி அணிகளின் 'பிளே - ஓப்' வாய்ப்பு ஏறக்குறைய உறுதியாகி விட்டது. மும்பை அணியும் (11 ஆட்டங்கள், 14 புள்ளி), மீதமுள்ள 5 ஆட்டங்களில் இரண்டில் வென்றால் கூட மூன்றாவது அணியாக, அடுத்த சுற்றுக்குள் நுழைய பிரகாசமான வாய்ப்புள்ளது.

**யாருக்கு ஓரிடம்**

மீதமுள்ள ஒரு இடத்தை பிடிக்க, சென்னை, ராஜஸ்தான், பெங்களூர் மற்றும் பஞ்சாப் அணிகளுக்கு இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. சென்னை அணியை பொறுத்தவரையில், அடுத்து வரும் 4 ஆட்டங்களில் (ராஜஸ்தான், டில்லி, கொல்கத்தா, பஞ்சாப்), கட்டாயம் மூன்றில் வென்றால் தான், அடுத்த சுற்றுக்கு செல்ல முடியும்.

இதில் ராஜஸ்தான், பஞ்சாப் அணிகளை, சென்னை கட்டாயம் வீழ்த்தும் பட்சத்தில், அந்த அணிகள், மீதமுள்ள ஆட்டங்களில் அனைத்திலும் வென்றாக வேண்டிய நிலை ஏற்படும். அதாவது ராஜஸ்தான் (3 ஆட்டங்கள்), பஞ்சாப் (4 ஆட்டங்கள்) அணிகள் ஒரு ஆட்டத்தில் தோற்றாலும், சென்னை அணிக்கு வாய்ப்புப் பிரகாசமாகும்.

அதேபோல பெங்களூர் அணி, மும்பைக்கு எதிராக 2 ஆட்டங்கள், டில்லி, டெக்கான் மற்றும் புனே என்று பங்கேற்கும் 5 ஆட்டங்களில் குறைந்தது மூன்றில் அதிக ஓட்ட விகிதத்துடன் வெல்ல வேண்டும். இல்லையெனில், நான்காவது அணியாக சென்னை எளிதாக முன்னேறிவிடும். (5)



## பாடசாலைமட்ட ரி-20' தடை

இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் பாடசாலை மட்டத்தில் 'ரி- 20' கிரிக்கெட் தொடர்களை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இளம் வீரர்களின் திறமையைப் பாதுகாக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக இலங்கை விளையாட்டு மருத்துவத் துறை தலைவர் அர்ஜுனா டி. சில்வா கூறியதாவது, 'ரி-20' கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்கு முன்னர் டெஸ்ட், ஒரு நாள் ஆட்டங்களில் இளம் வீரர்கள் திறமையை வளர்த்துக் கொள்வது அவசியம்.

'ரி-20' தொடர்களில் விளையாடும்போது டெஸ்ட் ஆட்டங்களில் எவ்வாறு விளையாட வேண்டும் என்ற நுணுக்கத்தை அறிந்து கொள்ளும் ஆர்வம் குறைந்து விடும். எனவே அதற்குத் தடை விதிக்க வேண்டுமென்று கல்வி, விளையாட்டுத் துறை அமைச்சகங்களுக்கு பரிந்துரைத்துள்ளோம் என்றார். (5)

# கெயிலின் அதிரடிக்கு பணிந்தது மும்பை




கிறிஸ் கெய்லின் சிக்ஸர் மழையால் மும்பை இந்தியன்ஸை 9 இலக்குகளால் வீழ்த்தியது றோயல்ஸ் சலஞ்சர்ஸ். ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளின் ஐந்தாவது பருவத்தின் 54 ஆவது ஆட்டம் மும்பை வட்கடே மைதானத்தில் நேற்றுப் பகல் இரவு ஆட்டமாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணித் தலைவர் விராட் ஹோக்லி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். மும்மை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சதம் நாயகன் சச்சினும் பிராங்ளினும் களமிறங்கினர். எனினும் மும்பை அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றிருந்த போது வினய் குமாரின் பந்தில் பிராங்ளினை இழந்தது. அதன்பின்னர் களமிறங்கிய றோகித் சர்மாவும் ஓட்டம் எதுவும் பெறாமல் அதே பந்துப் பரிமாற்றத்தில் வினய் குமாரிடம் வீழ்ந்தார். பின்னர் தினேஸ் கார்த்திக்கும் சச்சினும் இணைந்து மும்பை அணிக்கு உயிரூட்ட முனைந்தனர். இருவரும் இலக்கு இழப்பைத் தவிர்க்க நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். எனினும் 8.3 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் பட்டேலின் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து சச்சின் (24) ஆட்டம் இழந்தார்.

அதன்பின்னர் அம்பதி ராயூடு களமிறங்கி மும்பைக்கு நம்பிக்கை ஊட்டினார். எனினும் அதிரடியாக ஆடிய ராயூடுவும் (22) பட்டேலின் பந்துக்குப் பலியானார். மும்பை அணி 100 ஓட்டங்களை எடுத்திருந்த போது முரளிதரனின் சுழலில் கார்த்திக் 44 ஓட்டங்களுடன் சுருண்டார். அதன் பின்னரும் வீசிய முரளிதரனின் சுழலில் ஸ்மித் 2 ஓட்டங்களுடன் களத்தை விட்டுப் பறந்தார். எனினும் அதன் பின்னர் ஜோடி சேர்ந்த பொலார்ட்டும் ஹர்பஜன்சிங்கும் றோயல் சலஞ்சர்ஸ் பந்து வீச்சாளர்களை பதம் பார்த்தனர். அவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 41 ஓட்டங்களை 4 பந்துப் பரிமாற்றங்களில் குவித்தனர். பொலார்ட் 21 ஓட்டங்களையும் ஹர்பஜன்சிங் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள மும்பை இந்தியன்ஸ் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 141 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணிக்கு டில்சானும் கெய்லும் பலமான அடித்தளம் இட்டனர். டில்சான் 19 ஓட்டங்களோடு சாய்ந்துபோக அணித் தலைவர் ஹோக்லி கெய்லுடன் இணைந்தார். வழமைபோல கெய்ல் சிக்ஸர் மழை பொழிய துணைக்கு விராட் ஹோக்லியும் துடுப்பால் மிரட்ட வெற்றி 18 ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே பெங்களூர் அணியின் மடியில் வந்து வீழ்ந்தது. கிறிஸ் கெய்ல் 6 சிக்ஸர்கள் அடங்கலாக 82 ஓட்டங்களையும் ஹோக்லி 2 சிக்ஸர்கள் அடங்கலாக 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (ந)



**நேற்றைய போட்டியில் அதிரடியில் கலக்கிய கெய்ல் ஆட்டநாயகனாகத் தெரிவானார். அத்துடன் ஐ.பி.எல் ஐந்தாவது பருவப் போட்டிகளின் அதிக கூடிய ஓட்டங்களை எடுத்த வரிசையில் முதலிடத்தைப் பிடித்து ஒரேஞ் தொப்பியை மீண்டும் தன் வசமாக்கினார் கெய்ல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆறுதல் வெற்றி



மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிக்குமிடையிலான 4 ஆவது 20/20 போட்டியில் இலங்கை மகளிர் அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

ட்ரினாட் குயீன்ஸ் பார்க் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. தனது முதலாவது இலக்கை 17 ஓட்டங்களுக்கு இழந்த இலங்கை அணி, இரண்டாவது இலக்குக்காக 34 ஓட்டங்களைப் பகிர்ந்தது. எனினும் இரண்டாவது விக்கெட்டை 51 ஓட்டங்களுக்கு இழந்த இலங்கை அணி, ஒரு கட்டத்தில் 7 இலக்குக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதாவது 11 மேலதிக ஓட்டங்களுக்குள் இலங்கையின் 6 இலக்குகள் வீழ்த்தப்பட்டன.

எனினும் 8ஆவது இணைப்பாட்டமாக பிரிக்கப்படாத 32 ஓட்டங்கள் 5.2 பந்து பரிமாற்றங்களில் பகிரப்பட இலங்கை அணி ஆட்ட நிறைவில் 94 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக யசோதா மெண்டிஸ் 21 ஓட்டங்களையும், அணித் தலைவியும், இலக்குக் காப்பாளருமாகிய சுரங்கிக்கா ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும், ஸ்ரீபாலி வீரக்கொடி 14 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் பெற்றனர். தவிர, உதிரி ஓட்டங்களாக மேற்கிந்தியத் தீவுகள் அணியால் 16 ஓட்டங்கள் வழங்கப்பட்டன.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷெமெய்ன் கம்ப்பெல்லி 4 பந்துப்பரிமாற்றங்களில் 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குக்களையும், அனிஸா மொஹமட், சுப்ரினா முன்ரோ ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

95 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முதலாவது இலக்கு 25 ஓட்டங்களுக்கு இழக்கப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது இலக்கு 52 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட அந்த அணி தோல்வியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது. இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஜூலியனா நீரோ 32 ஓட்டங்களைப் பெற்றார். அவரைத் தவிர, வேறு எந்த வீராங்கனையும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட மாதுரி சமுதிக்கா 3 இலக்குகளையும், சமானி செனவிரத்ன 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகியாக இலங்கை சார்பாக தனது அறிமுகத்தை மேற்கொண்டு சிறப்பாகப் பந்துவீசிய மாதுரி சமுதிக்கா தெரிவானார்.

இந்தப் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்ற போதிலும், 5 போட்டிகள் கொண்ட தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**வெளிவந்துவிட்டது**

முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III போட்டிப் பரீட்சை வழிகாட்டல் நூல்.

By:- P.கமல்தாசன்

BA, PGDE, PGDM, Spl Trd Com, MA (R)

சொற்ப பிரதிகளே

பூபாலசிங்கம், அன்னை (யாழ்.நகர்), தூர்க்கா (சுன்னாகம்)

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

**ஆங்கிலம் - புதிய பிரிவு**

**10.05.2012 வியாழக்கிழமை**

பிரிவு 1 : காலை 8.00 - 9.00

பிரிவு 2 : மாலை 4.00 - 5.00

காலம் : 3 மாதம் கட்டணம் : ரூபா 3000 மட்டும்

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்தோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் வகுப்பில் கலந்துகொள்ளலாம்.

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456



**எடிசன் கல்லூரி கிளிநொச்சி**

வலயக் கல்வி பணிமனை முன்பாக

**G.A.Q, BA**

(யாழ். பேராதனை) புதிய பிரிவுகள்

ஆரம்பம் 12.05.2012 (சனி)

நேரம்- 2.00 P.M

தொடர்பு- 0775483470


## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி இரத்தினம் (தெய்வேந்திரம்)



சந்தைவீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.16, குமார வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி இரத்தினம் நேற்றுமுன்தினம் (08.05.2012) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், கோபாலக்கிருஷ்ணன், ரவீந்திரன், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற உதயராணி மற்றும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற மெற்றாஸ்மயில் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம், நவரத்தினம், ஞானசேகரம், சிவயோகம், புஸ்பராசம், கௌசலாதேவி மற்றும் ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீபிரியா-மங்களேஸ்வரன் (இந்தியா), ஸ்ரீரஞ்சன் (சிங்கப்பூர்), நிதர்சன் (இந்தியா), வஜீவன், கஜன்-கஜமுகதர்சினி (சிங்கப்பூர்), ரேகன்-ஜெயந்தி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஸ்ரீரசிக்கா, சங்கீத், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2012) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு இல.16, குமார வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16, குமார வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.


**STUDENT + VISIT VISA'S UK, France, German, Switzerland,**

விண்ணப்பிக்கும் முதல் 10 மாணவர்களுக்கு இலவச B1 ஆங்கில வகுப்புக்கள்

**VISIT VISA**

VISA பெறுவதற்கு முன்பு எதுவித முற்பணமும் அறவிடப்படமாட்டாது

- London இல் உறவுகள் இருந்தால் 100% விசா உத்தரவாதம்
- நீங்கள் தனிநபர் or கூட்டு வியாபாரம் சான்றிதழ் வைத்திருக்கின்றீர்களா?
- நீங்கள் புது மணத் தம்பதியினரா?
- அரச உத்தியோகத்தரா?



பரணி - கிருஜா
கோண்டாவில், யாழ்ப்பாணம்

**STUDENT VISA (SPOT ADMISSION - NO IELTS)**

01 IELTS - தேவையில்லை
02. G.C.E. A/L + 2 Passes - நேர் முகப் பரீட்சை (University)
03. 3½ Years Visa + 20 மணித்தியால வேலை நேரம்
04. G.C.E. O/L உடனும் விண்ணப்பிக்க முடியும்

VISA பெற்ற மாணவர்கள்



Logarajani Jaffna



Thaskumar Jaffna



Suthagaran Thellippalai

இம் மாதம் விசா பெற்ற மாணவன் (MAY 03)



Srinath (Kokuvil)

**CITY & GUILDS ENGLISH CLASSES**

(expert teachers + expect Result)

1. A I - Spouse (கணவன் + மனைவி) Settlement Visa - UK
2. B I - Tier 4 Student Visa - UK

காலம்: இம்மாதம் 10,11,12 ஆகிய தினங்களில் (வியாழன், வெள்ளி, சனி)
காலை 10 - மாலை 4.00 வரை
இடம் : SEC PVT LTD
620, K.K.S. Road, Jaffna.(நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக)

எமது சேவை யாழ். நகரில் நீண்டு நிலைத்திருப்பதற்கான முக்கிய காரணம் நம்பிக்கையும் உத்தரவாதமுமே

Hot Line : 0771022984 0777887181



**கடைக் கட்டடம் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இலக்கம் 127 இல் அமைந்துள்ள கடைக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 021 2228306

**J.T.I Coolars**

Vehicle AC
Room AC
Fridge
Repair and Service

விபரங்களுக்கு
No 7.
Palaly Road,
Jaffna
T.P 0778249949, 0778500472, 0779309744

குறிப்பு: வேலைகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து செய்து கொடுக்கப்படும்

**SUBRA (14) சித்தன்கேணி**

A/L ஊடகவியல் A/L

யாழ். பிரபல ஆசிரியர்
திரு. P . இராஜேஸ்வரன்
(வளவாளர் N.I.E )

வகுப்புக்கள் ஆரம்பம்

2014 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
2013 - Paper Class
மேலதிக விவரங்களுக்கு:
அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்

வங்கி உத்தியோகத்தர்களுக்கான
**C.B.F, D.B.F**
வகுப்பு ஆரம்பமாகிவிட்டது
Sat - Sun - 6.00 - 8.00



**செங்கல் விற்பனைக்கு**

அத்திவார கற்கள், 1 ½ அங்குல கருங்கல் சல்லி, 1 அங்குல கருங்கல் சல்லி, 3/4 அங்குல கருங்கல் சல்லி, ½ அங்குல கருங்கல் சல்லி,

சல்லி கற்கள்

நிலப்பதிப்புக் கற்கள்



பல வடிவங்களில் பல்வேறு அளவுகளில் நிலப்பதிப்புக் கற்கள் மற்றும் பூகற்கள் (Grill) விற்பனைக்கு உண்டு,

யாழ் மற்றும் வன்னி பிரதேசங்களுக்கு விநியோகம் செய்யப்படும்

**பிரணவன் என்ரபிறைசஸ்**

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

077 3818799 (சங்கிலியன் சிலைக்கு முன்)

**★ வேலையாள்கள் தேவை ★**

- சைக்கிள் உதிரிப்பாக விற்பனையில் அனுபவமுள்ளவர்கள்
- யாழ்-கொழும்பு பஸ் ஆசனப் பதிவு செய்யக் கூடியவர்கள்
- கணக்காளர் (வயது 45 - 50)

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
ஈஸ்வரன் ரேடர்ஸ்,
69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



" சட்டமாற்றத்தின் முன் நாம் முந்திச் செல்வோம்"
ஜூன் (30) உடன் ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா நிபந்தனைகள் அரசாங்கத்தால் மேலும் இறுக்கமாகின்றன.

எனவே இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெற விரைந்து வாருங்கள்.

(இவ்விடயத்தை இணையத்திலும் பார்வையிடலாம்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்
(PV 82705)

37, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 0212219016



கிளைகள்

115 A,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
0212285544

22 A,
பிராங்பெட் பிளேஸ்,
பம்பலப்பிட்டி.
0112508445

504, Hampton street, Melborn, Australia
0061390437100


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org